# உதயன்

விலை ரூபா 6.00

சுடர்:15 வள்ளுவர் ஆண்டு 2031 ஆடி 12 வியாழக்கிழமை (27-07-2000) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:174


# பயணிகள் கப்பல் சேவைக்கு இனி செஞ்சிலுவை வழித்துணை!

## நேற்று ஒப்பந்தம் கைச்சாத்து

திருகோணமலைக்கும் வடபகு திக்கும் இடையில் பயணிகள் சேவையில் ஈடுபடும் 'சிற்றி ஒவ் றிங்கோ' கப்பலின் போக்குவரத் துக்கு செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு வழித்துணை வழங்கும்.

இது தொடர்பாக அரசு - விடுத லைப்புலிகள் - செங்சிலுவைச் சர்வ தேசக் குழு ஆகிய முத்தரப்பும் ஒரு பொது இணக்கப்பாட்டுக்கு வந் துள்ளனர்.

இந்த வழித்துணை வழங்குவது தொடர்பான ஒப்பந்தத்தில் அரசு மற் றும் செஞ்சிலுவைச் சர்வதேசக்குழு ஆகியவற்றின் பிரதிநிதிகள் நேற்று மாலை ஒப்பமிட்டனர்.

செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு வின் பேச்சாளர் ஹர்ஷா குணவர் தனா இத்தகவலை வெளியிட்டுள் ளார்.

அக்குழுவின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி திருமதி இஸ்ஸ பல் பராக், வடமாகாண புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சின் செயலாளர் எஸ்.என்.பந்துசேன ஆகியோரே மேற் படி கப்பல் சேவைக்கு வழித்துணை வழங்கும் ஒப்பந்தத்தில் நேற்றுக் கைச்சாத்திட்டனர்.

இந்த ஒப்பந்தப்படி - 'சிற்றி ஒவ் றிங்கோ' கப்பல் பயணிகள்சேவையில் ஈடுபடும்போது அதில் செஞ்சிலுவை சர்வதேசக் கொடி பறக்கவிடப்படும். அக்குழு வின் அதிகாரிகள் வழித்துணை வழங்குவார்கள்.

பிரயாணிகள் பட்டியல் தயாரிப் பது இலங்கை அரசின் பொறுப்பா கும். வழித்துணை வழங்குவது மட் டுமே செஞ்சிலுவைச் சர்வதேசக்குழு வின் பொறுப்பு.

இவ்வாறு ஹர்ஷா குணவர்த் தனா தெரிவித்தார்.

பயணிகள் கப்பலுக்கு செஞ்சிலு வைச் சர்வதேசக் குழுவின் வழித் துணை வழங்குவது குறித்து விடுத லைப் புலிகளோடும் அரசுப் படைத் தரப்போடும் 'செங்சிலுவைச் சர்வ தேசக் குழு ஏற்கனவே பேச்சு நடத்தி ஒரு பொது இணக்கப்பாட் டுக்கு வந்திருந்ததாகவும் அவர் சொன்னார். (உ-4)

# தற்போதைய தீர்வு யோசனைகளை எதிர்க்க இந்தியாவிடம் கோரப்படும்

## தமிழ்க் கட்சிகள் தயாராகுகின்றன

கொழும்பு,ஜூலை27

**இனப்பிரச்சினைக்குத் தீர்வாக அரசு முன்வைத்துள்ள அரசமைப்புச் சீர்திருத்த யோசனைகளை நடைமுறைப்படுத்த இடமளிக்க வேண்டாம் என்று இந்தியாவிடம் வேண்டுகோள் விடுப்பதற்கு சில தமிழ்க் கட்சிகள் தயாராகி வருவதாகக் கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.**

இந்த வேண்டுகோளை இந்தியத் தலைவர்களை நேரில் சந்தித்து அவர்களிடம் விடுப்பதற்காக தமிழ்க் கட்சிகளின் தூதுக்குழு ஒன்று அடுத்த சில வாரங்களில் இந்தியா வுக்குச் செல்வதற்கான முயற்சியில் ஈடுபட்டிருப்பதாகவும் சொல்லப்ப டுகிறது.

"தமிழ்க் கட்சிகளையோ, தமிழ்த் தரப்பையோ திருப்திப்படுத்தாத இந்த அரைகுறைத் தீர்வை நடை முறைப்படுத்த முயன்றால் அது இனப்பிரச்சினையை மேலும் சிக்க லாக்கும் என்றும் - தற்போதைய

(12ஆம் பக்கம் பார்க்க)

முச்சந்தி முரளி



எலக்ஷன் நெருங்கினதும் கப்பல் சேவையும் நேராகுது பாத்தியளே...!

## ஆடி அமாவாசை தினத்தன்று கீரிமலை செல்வதற்கு வசதி

யாழ்ப்பாணம்,ஜூலை27

ஆடி அமாவாசை தினமான எதிர்வரும் 30 ஆம் திகதி கீரிமலை யில் தீர்த்தமாடவும் பிதிர்க்கடன் செய்வதற்கும் ஏற்பாடுகள் செய்யப் பட்டுள்ளன.

ஆலய நிர்வாகிகள் படைத் தரப் பினருடன் பேசி இதற்கான அனுமதி யைப் பெற்றுள்ளனர். அன்றைய தினம் தெல்லிப்பழை காவலரண் ஊடாக மட்டும் கீரிமலை சென்று புனித தீர்த்த மாடுவதற்கும் பிதிர்க் கடன் செய்வதற்கும்ஒழுங்குகள் செய்யப்பட் டுள்ளதாக ஏற்பாட் டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

(12ஆம் பக்கம் பார்க்க)

## சரசாலையில் மோதல்!

கடந்த செவ்வாயன்று அதி காலை சரசாலையில் புலிகளின் முன்னணி அரண்கள் மீது படை யினர் கடும் தாக்குதல்களை மேற் கொண்டு கடும் சேதங்களை விளை வித்து, சுமார் அரைக் கிலோமீற்றர் தூரம் முன்னேறி அப்பகுதிகளில் நிலைகொண்டிருப்பதாக விசேட ஊடகத் தகவல் நிலையம் நேற்று வெளியிட்ட அறிக்கையில் தெரிவித் துள்ளது.

இப்பிரதேசத்தில் படையினரின் முன்னரங்க நிலைகள் மீது புலிகள் மேற்கொண்ட மோட்டார் மற்றும் ஆர்.பி.ஜி. தாக்குதல்களை படையி னர் எதிர்த் தாக்குதல் நடத்தி முறி யடித்ததாகவும் அறிவிக்கப்பட்டது. (உ-4)

## தடைகளைக் கண்டித்து புதுக்குடியிருப்பில் நேற்றுப் பேரணி!

வவுனியா,ஜூலை27

மருந்து, நிவாரணம் மற்றும் விவ சாய உள்ளீடுகள் என்பனவற்றை வன்னிப் பகுதிக்கு அனுப்புவதில் விதிக்கப்பட்டு வரும் மிக மோசமான கட்டுப்பாடுகளைக் கண்டித்து புதுக் குடியிருப்பில் நேற்றுக் கண்டனப் பேரணி ஒன்று நடத்தப்பட்டது.

காலை 10 மணியளவில் புதுக் குடியிருப்பு கந்தசுவாமி கோயிலடி யில் இருந்து ஆரம்பமான இந்தப் பேரணியில் பாடசாலை மாணவர் கள், அரச மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள் உட் பட ஆயிரக்கணக்கான பொதுமக்

(12ஆம் பக்கம் பார்க்க)

## ஸ்ரீ.ல. சுதந்திரக் கட்சியின் செயலர் பதவி யாருக்கு?

### அமைச்சர் மங்களவுக்கே வாய்ப்பு?

கொழும்பு,ஜூலை27

அமைச்சர் தர்மசிறி சேனநா யக்கா காலமானதை அடுத்து வெற் றிடமாகியுள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் பதவிக்கு யார் நியமிக்கப்படுவார் கள்?

இப்பதவிக்கு அமைச்சர்கள் ரட் ணசிறி விக்கிரமநாயக்கா, மகிந்த ராஜபக்ஷ, மங்களசமர வீர ஆகி யோரின் பெயர்கள் அடிபடுவதாகக் கொழும்புத் தகவல்கள் தெரிவிக் கின்றன.

இவர்களில் அமைச்சர் ரட்ண சிறி விக்கிரமநாயக்காவே கட்சி யின் மூத்த பிரமுகர் என்று கூறப் படுகிறது.

ஜனாதிபதி வெளிநாடு சென் றிருக்கும் சமயங்களில் - பிரதமர்

(12ஆம் பக்கம் பார்க்க)

## அரசு - ஐ.தே.க. இடையிலான இன்றைய பேச்சு ஒத்திவைப்பு

உத்தேச அரசமைப்புச் சீர்திருத் தம் தொடர்பாக அரசாங்கத்துக் கும், ஐக்கிய தேசியக் கட்சிக்கும் இடையே இன்று நடைபெறவிருந்த பேச்சுக்கள் புதிய திகதியோ கார ணமோ குறிப்பிடப்படாமல் ஒத்தி வைக்கப்பட்டிருப்பதாக அறிவிக் கப்பட்டிருக்கின்றது.

லண்டனுக்குச் சென்றுள்ள ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நாடு திரும்பிய பின்னரே அடுத்த சந்திப்புக்கான திகதி குறித்துத் தீர்மானம் எடுக்கப்படும் என்று அர சுத் தரப்பில் அறிவிக்கப்பட்டது.

முன்னைய திட்டப்படி இன்று அரசு - ஐ.தே.கட்சிச் சந்திப்பு இடம் பெற்றாலும் கூட, தமது முன்னைய முடிவின்படி அந்தச் சந்திப்பில் ஐ. தே. கட்சித் தலைவர் ரணில் விக்கி ரமசிங்க பங்கு பற்றியிருக்கமாட்டார் என ஐ.தே. கட்சி வட்டாரங்கள் தெரிவித்தன. (உ)

### மாவை கடிதம்

யாழ்.இந்துக்கல்லூரி மாண வன் சஞ்சீவன் படுகொலை செய்யப் பட்டது குறித்தும், கடந்த 14 ஆம் திகதி மாலுசந்திப் பகுதியில் சிறுமி ஒருத்தி பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டதாகக் கூறப்படும் சம்பவம் குறித்தும் நீதி விசாரணை நடத்துமாறு கோரி தமிழர் விடுத லைக் கூட்டணியின் தேசிய பட்டி யல் எம்.பியான மாவை சேனாதி ராஜா ஜனாதிபதிக்கு கடிதம்ஒன்றை எழுதியுள்ளார். (உ)

## பிஜியில் கிளர்ச்சித் தலைவர் கைது!

சுவா,ஜூலை27

பிஜியில் கடந்த பல வாரங்க ளாக பெரும் சர்ச்சைக்குரியவ ராக விளங்கிய சதிப்புரட்சித் தலைவர்ஜோர்ஜ் ஸ்பைட் நேற்று கைது செய்யப்பட்டார்.

(12ஆம் பக்கம் பார்க்க)

## சுண்டிக்குளத்தில் ஒருவர் பலி!

வவுனியா,ஜூலை27

சுண்டிக்குளம் பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற குண்டுவீச்சுச் சம்பவமொன்றில் ஒருவர் பலியானார்; மற்றொருவர் காயமடைந்தார்.

கட்டைக்காட்டில் இருந்து இடம்பெயர்ந்து சுண்டிக்குளத்தில் தங்கியிருந்த கிறிஸ்தோபர் என்ப வரே பலியானார். படுகாய மடைந்த யாக்கோபு செனவி யம்மா (வயது55) என்பவர் வன் னிப் பகுதி ஆஸ்பத்திரி ஒன்றில் அனுமதிக்கப்பட்ட பின்னர் மேல திக சிகிச்சைக்காக வவுனியா ஆஸ்பத்திரிக்குக் கொண்டுவரப் பட்டார். (உ)

## வவுனியாவில் மாணவர்கள் பகிஷ்கரிப்பு

யாழ்ப்பாணம்,ஜூலை27

கடந்த 16ஆம் திகதி இரா ணுவத்தினரால் கைது செய்யப் பட்ட வவுனியா பண்டாரிக்குளம் விபுலானந்த மகா வித்தியாலய மாணவன் ஒருவனை விடுதலை செய்யக் கோரி வவுனியா பாட சாலை மாணவர்கள் நாளை வெள்ளிக்கிழமை பகிஷ்கரிப்புப் போராட்டம் ஒன்றை நடத்துவர் என்று வவுனியா உயர்தர மாண வர்கள் ஒன்றியம் தெரிவித்துள் ளது. (உ)

## சிப்பாய்க்கு ஒரு வருட சிறைத் தண்டனை

யாழ்ப்பாணம்,ஜூலை27

உரும்பிராய்ப் பகுதியைச் சேர்ந்த மாணவன் ஒருவர் பாலி யல் துன்புறுத்தலுக்கு ஆளாக் கப்பட்ட சம்பவம் தொடர்பாக இராணுவச் சிப்பாய் ஒருவருக்கு ஒருவருட கடுழியச் சிறைத் தண் டனை விதிக்கப்பட்டுள்ளது.

உரும்பிராய் தெற்கைச் சேர்ந்த 16 வயது மாணவனை கடந்த பெப்ரவரி மாதம் பாலி யல் துன்புறுத்தலுக்கு ஆளாக் கிய இராணுவச் சிப்பாயான அளுத்கெதர சிசில் வசந்த என் பவருக்கே யாழ். நீதிமன்ற மேல திக நீதிவான் பா.சுப்பிரமணியம் நேற்று இந்தத் தண்டனையை வழங்கித் தீர்ப்பளித்தார்.(ஜ-10)

## மீனவருக்கு அறிவுறுத்தல்

கொழும்பு,ஜூலை27

குருநகர் இறங்குதுறை ஊடாக குடாக்கடலில் மீன் பிடிப் பதற்குப் படையினரால் அனும திக்கப்பட்ட கடற்றொழிலாளர்கள் பாதுகாப்புப் பிரிவினரால் அனும திக் கப்பட்ட குறிப்பிட்ட பகுதிக ளிலேயே மீன் பிடிக்கவேண்டும் என்று படை அதிகாரிகள் அறிவு றுத்தியுள்ளதாக இலங்கை வானொலி தெரிவித்தது.

பாதுகாப்புக் கருதி வெளிச் சக்கட்டைக்கும் அன்னை வேளாங் கண்ணி ஆலயத்துக்கும் இடைப் பட்ட இரண்டு மைல் கடற் பரப்பி லேயே மீன் பிடிக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்றும்-

இந்த எல்லையை மீறி மீன் பிடிப்பவர்களின் அனுமதிப்பத்தி ரங்கள் ரத்துச் செய்யப்படும் என் றும் - அதிகாரிகள் தெரிவித்த தாக அதில் மேலும் கூறப்பட் டது. (ஜ-9-4)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# மே மாதம் வழங்கிய நிவாரணத்துக்காக ஜூலைக்குரிய பொருள்களில் வெட்டு!

## இடம்பெயர்ந்த பச்சிலைப்பள்ளி மக்கள் அதிருப்தி

பளைப் பகுதியில் இருந்து இடம்பெயர்ந்து தென்மராட்சி கிழக்குப் பகுதியில் தங்கியிருந்த மக்களுக்கு அச்சமயம் - மே மாதத்தில் - வழங்கப்பட்ட நிவாரணப் பொருள்கள் தற்போது ஜூலை மாதத்துக்குரிய நிவாரணப் பொருள்களில் வெட்டப்படுவதாக அந்த மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

பச்சிலைப்பள்ளிப் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளைகளிலேயே இவ்வாறு முன்னா வழங்கிய பொருள்கள் தற்போதைய நிவாரணப் பொருள்களிலிருந்து நீக்கப்படுவதாகக் கவலை தெரிவிக்கப்படுகிறது.

பொருள்கள் விநியோகிப்பதற்கான சிட்டையில் உள்ள பொருள்களை வழங்காமல் சிட்டையின் மறு பக்கத்தில் சிவப்பு மையினால் மே மாதத்தில் வழங்கப்பட்ட பொருள்களை எழுதிவிட்டு அவற்றினைக் கழித்துவிட்டே மிகுதிப் பொருள்கள் வழங்கப்படுகின்றன. மே மாதத்தில் நிவாரணப் பொருள்கள் பெற்றுக் கொள்ளாதவர்களுக்கும் பொருள்கள் கழித்தே வழங்கப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது. இவ்விடயம் தொடர்பாக பச்சிலைப்பள்ளி ப.நோ. கூ.சங்க நிர்வாகத்திடம் தொடர்பு கொண்டபோது நிர்வாகம் அதிகார ரீதியில் பதிலளிப்பதால் இவ்விடயம், யாழ். அரச அதிபரின் கவனத்துக்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

நிவாரணப் பொருள்கள் மீளப் பெறப்படுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து பலர் ஜூலை மாத நிவாரணம் பெற்றுக் கொள்ளவில்லை எனவும் -

நிர்க்கதியான நிலையில் தங்கியுள்ள இவ்வேளையில் சங்க நிர்வாகம் மக்களிடம் தமது அதிகார நிலையினைப் பிரயோகிப்பது வேதனைக்குரியது எனவும் -

அரச அதிபருக்கு வழங்கிய மகஜரில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

பச்சிலைப்பள்ளி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளை திறந்திருந்த வேளையில் அரிசி, சீனி, பருப்பு, பாம்மா என சிட்டையில் எழுதிக் கையொப்பம் வாங்கிய பின்னர் அரிசி தவிர்ந்த ஏனைய பொருள்கள் முடிந்து விட்டன எனக் கூறி அப்பொருள்கள் வழங்கவில்லை எனவும் ஆனால் தற்போது வழங்கப்படாத பொருள்கள் உட்பட அனைத்துப் பொருள்களும் மீளப் பெறப்படுவது மக்களிடையே பெரும் கவலையை ஏற்படுத்தியுள்ளது.

கடந்த மார்ச், ஏப்ரல் மாதங்களில் பளைப் பகுதியிலிருந்து இடம்பெயர்ந்த மக்களுக்கு இதுவரை மே மாதத்துக்குரிய நிவாரணம் வழங்கப்படாதது குறிப்பிடத்தக்கது.

மக்களின் எதிர்ப்பை அடுத்து கோண்டாவிலில் இயங்கும் பச்சிலைப்பள்ளிப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்ககிளைக் கடையில் 'கொடிகாமம் பகுதியில் அமைக்கப்பட்ட கிளைக் கடைகளில் மே மாதத்தில் வழங்கப்பட்ட விசேட நிவாரணப் பொருள்கள் கழிக்கப்படுவதாக' விளம்பரப் பலகை மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது.

பச்சிலைப்பள்ளிப் பிரதேசத்தில் இருந்து இடம்பெயர்ந்து உடைமைகளை இழந்து நிர்க்கதியான நிலையில் அடுத்தவேளை உணவுக்கு அல்லற்படும் வேளையில் பச்சிலைப் பள்ளிப் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் இப்பகுதி மக்களின் நலனில் அக்கறை கொள்ளாமல் தன்னலம் கருதிச் செயற்படுவது இப்பகுதி மக்களின் கடும் விமர்சனத்துக்கு உள்ளாகியிருப்பதைக் காணமுடிகிறது.

பளைப் பகுதி மக்களின் நலன் கருதி மே மாதத்துக்குரிய நிவாரண உலர் உணவுப் பொருள்களை விரைவில் வழங்குமாறு யாழ். அரச அதிபரையும், பளை உதவி அரசாங்க அதிபரையும் பாதிக்கப்பட்ட மக்கள் கேட்டுள்ளனர். (ஐ-117)

## பௌத்த பிக்குமாரின் ஆலோசனையை அரசு பெறாதது கவலை தருகிறது

### அஸ்கிரிய பீடாதிபதி

கொழும்பு,ஜூலை27

முன்னரெல்லாம் நாட்டில் அரசியல் சீர்திருத்தங்கள் மேற்கொள்ளும் போது பௌத்த பிக்குமாரின் ஆலோசனைகள் பெறப்பட்டன. ஆனால் இம்முறை அந்த நடைமுறை இடம்பெறாததை இட்டு மிகவும் கவலையடைகின்றேன்.

அஸ்கிரிய பீடாதிபதி வணபுத்தர சித்த தேரர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அரசியல் தீர்வுத் திட்டம் தொடர்பாக ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கு எழுதிய அவசர கடிதம் ஒன்றிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அரசாங்க மற்றும் எதிர்க்கட்சிகளுடனான இணக்கப்பாட்டுடன் வடிவமைக்கப்பட்டுள்ள அரசியல் தீர்வுப் பொதியின் மும்மொழிப் பிரதிகளையும் தனக்கு அனுப்பிவைக்குமாறும் அஸ்கிரிய பீடாதிபதி அந்தக் கடிதம் மூலம் ஜனாதிபதியைக் கோரியுள்ளார். (ஐ-9-6)

## அஞ்சலி நிகழ்வு

யாழ்ப்பாணம்,ஜூலை27

தமிழர் விடுதலைக் கூட்டணியின் முக்கியஸ்தரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான நீலன் திருச்செல்வத்தின் முதலாவது நினைவு தினம் நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 9மணிக்கு யாழ்நகரிலுள்ள தமிழர் விடுதலைக் கூட்டணி காரியாலயத்தில் அனுஷ்டிக்கப்படவுள்ளது.

யாழ்.மாநகரசபை உறுப்பினர் செ.கந்தையன் தலைமையில் நடைபெறும் இந்த நினைவு தின நிகழ்வில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் ஆதரவாளர்கள் கலந்து கொண்டு நீலன் திருச்செல்வத்தின் திருவுருவப்படத்துக்கு மலர்மாலை சார்த்தி அஞ்சலி செய்வார்கள் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-5)

## மாணவிகளுக்கு உபகரணங்கள்

தென்மராட்சி,ஜூலை27

சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் தரம் 6 தொடக்கம் ஜி.சீ.ஈ உயர்தரம் வரை கல்வி கற்கும் மாணவிகளுக்கு பருத்தித்துறை சாரதா சேவாச்சிரம நிலையத்தினரால் நேற்று பதினையாயிரம் ரூபா பெறுமதியான கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

கரவெட்டி ரலன்ற் கல்வி நிலையத்தில் இயங்கும் மகளிர் கல்லூரியில் அதிபர் திருமதி சி.சிவநாதன் தலைமையில் நடைபெற்ற வைபவத்தில் சுவாமி சித்ரூபானந்தாவினால் மாணவிகளுக்கு கற்றல் உபகரணங்களும் கல்லூரிக்கு கற்பித்தல் உபகரணங்களும் வழங்கப்பட்டன. வைபவத்தில் தென்மராட்சி கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர்களான க.யோகானந்தா, ஆர்.டேவிட் ஆகியோர் கலந்து கொண்டனர். (ஐ-117)


## கண்ணீர் அஞ்சலி

காப்புறுதிக் கூட்டுத்தாபன பிராந்திய முகாமையாளர்
திருமதி R.S.அரியநாயகம்
அவர்களின் அன்புத் தந்தையார்

### மேஜர் N.A.இமானுவேல்

அவர்கள் காலமானதையிட்டு அன்னாரின் குடும்பத்துக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

*காப்புறுதி அமைப்பாளர்:-*
K.சிவபாதரத்தினம் *(மூளாய்).*

*காப்புறுதி முகவர்கள்:*
S.T.நந்தகுமார் *(சங்கரத்தை),*
A.சவுந்தரராசா *(வட்டுக்கோட்டை),*
S.பாஸ்கரசிங்கம் *(சாவகச்சேரி),*
Dr.S.மகேசன் *(அளவெட்டி),*
R.திலீபன் *(சங்கானை).*

(C/12326)

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியை
திருமதி ரி.எஸ்.பத்மநாதன்
அவர்களின் பாசமிகு தாயார்

### திருமதி பெர்னாண்டோ விக்ரோறியா

கல்கமுவவில் தேவனடி சேர்ந்ததையிட்டு அவருடைய குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பாடசாலைச் சமூகம்,
யா/ முத்துத்தம்பி மகாவித்தியாலயம்,
திருநெல்வேலி.

(76748)

## புனித அன்னாள் ஆலயத் திருவிழா

பாண்டியன்தாழ்வு - யாழ்ப்பாணம்

29-07-2000 சனி மாலை 4.00 மணி - *திருப்பலி*
30-07-2000 ஞாயிறு காலை 9.00 மணி - *திருவிழாத் திருப்பலி*

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

(76742) பங்குத் தந்தையும், பங்குமக்களும்.

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



தோற்றம் 10 - 10 - 1930
மறைவு 27 - 06 - 2000

### திருமதி நவமணியம்மா மாணிக்கம்

எனது அன்பு மனைவி திருமதி நவமணியம்மா மாணிக்கம் அவர்களின் வீட்டுக்கிருத்தியமும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் இன்று (27-07-2000) வியாழக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில் எனது இல்லத்தில் நடைபெறும். அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

அத்துடன் அன்னார் சிவபதமடைந்த வேளை பலவழிகளிலும் உதவிகள் புரிந்த அனைவருக்கும் எனது மனப்பூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வா.சி.மாணிக்கம் (கணவர்)
(முன்னாள் அளவெட்டி வடக்கு, மொழியரசி அச்சக உரிமையாளர்.)

*வடலியடைப்பு, பண்டத்தரிப்பு.* (76744)

## ராஜா
(யாழ்ப்பாணம்)

விஜய், ஷாலினி, ரகுவரன், ஸ்ரீவித்யா மற்றும் பலர் நடிப்பில்

**கண்ணுக்குள் நிலவு**

காட்சிகள்
10.30-2.00 (புதிய நேரம்)
02.08 முதல் ,
எம்.ஜி.ஆர். நடித்த
**குடியிருந்த கோயில்**

(C/12325)

## நாகம்ஸ்
சுன்னாகம்

ரஜனி, சௌந்தர்யா, சிவாஜி, ரம்யாகிருஷ்ணன் நடிப்பில்

**படையப்பா**

(ரீலீஸ்)
காட்சிகள்: 11.00, 2.30 (புதிய நேரம்)

(C/12232)

## ஸ்ரீ செல்வா சினிமா

தினசரி 10.30-2.00 (பு.நே)

**பெண்ணின் மனதைத் தொட்டு**

வெள்ளி மட்டும் (28.07.2000)
சிவாஜி, பத்மினி
**உத்தம புத்திரன்**

(76747)


## மரண அறிவித்தல்கள்

### திரு. சிதம்பரப்பிள்ளை தர்மலிங்கம்

(இளைப்பாறிய ஆசிரியர்)

புளியங்கூடலைப் பிறப்பிடமாகவும், கொழும்பைத் தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட சிதம்பரப்பிள்ளை தர்மலிங்கம் அவர்கள் 24.07.2000 அன்று கொழும்பில் இறைவனடி சேர்ந்தார்.

இவர் காலஞ்சென்ற சிதம்பரப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகனும், செல்லம்மாவின் (இளைப்பாறிய ஆசிரியை) அன்புக் கணவரும், நம்பிரான், யசோதா ஆகியோரின் பாசமிகு தந்தையும், பிரியங்கா, புஸ்பவண்ணனின் மாமனாரும், நாகம்மா, நீலாம்பாள், சத்தியபாமா, காலஞ்சென்ற திருநாவுக்கரசு ஆகியோரின் சகோதரனும், கணேசு, காலஞ்சென்ற நடராசா, தியாகராஜா, மகேஸ்வரி ஆகியோரின் மைத்துனரும், நிருக்ஷன், அர்ஜுன் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (27-07-2000) மாலை 5-00 மணிக்கு கொழும்பு கனத்தை மயானத்தில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
S.தியாகராசா
(மைத்துனர்)

*122/4, பலாலி வீதி,*
*கந்தர்மடம்,*
*யாழ்ப்பாணம்.*

(76746)

### வீரகத்தியார் சிவப்பிரகாசம்

(இளைப்பாறிய அதிபர், யா/வரணி அ.மி.த.க.)

வரணி இடைக்குறிச்சியைச் சேர்ந்த இளைப்பாறிய அதிபர் வீரகத்தியர் சிவப்பிரகாசம் 24-07-2000 திங்கட்கிழமை இரவு காலமானார்.

இவர் காலஞ்சென்றவர்களான வீ.கந்தையா(பிறப்பு, இறப்பு விவாகப் பதிவாளர், வரணி), வீ.கற்பகம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், உமாமகேஸ்வரியின் (பிறப்பு, இறப்பு, விவாகப் பதிவாளர், வரணி) அன்புக் கணவரும், விசாலாட்சி, வேதநாயகி (ஆசிரிய ஆலோசகர், வடமராட்சி வலயம்), மீனாம்பிகை ஆகியோரின் அன்புத் தந்தையும், விநாயகமூர்த்தி (அதிபர், யா/மந்துவில் ஸ்ரீபாரதி வித்தியாலயம்), இராஜகுமாரன் (கிராம உத்தியோகத்தர்), பாலசிங்கம் ஆகியோரின் அன்பு மாமனாரும், கார்த்திகா, தாட்சாயினி, சாரங்கன், கிருஷங்கா, நிவேந்திரா, கோபிநங்கா, பிரியங்கா, சத்தியேந்திரா, துஷியங்கா, மதுரங்கா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் 25-07-2000 செவ்வாய்க்கிழமை வரணியில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
சி.உமாமகேஸ்வரி
(மனைவி)

*இடைக்குறிச்சி, வரணி.*

(76749)

# ஒலியைவிட வேகமான 'கொன்கோட்'
# விமானம்விடுதி மீது விழுந்துஎரிந்தது;
# 50 பெண்கள் உட்பட 113 பேர்மரணம்!

## உயிரிழப்புகள் அதிகரிக்கும் என அச்சம்

பாரிஸ், ஜூலை 27

**பிரான்ஸின் பாரிஸ் விமான நிலையம் அருகே 'கொன்கோட்' விமானம் ஒன்று சுற்றுலா விடுதி ஒன்றின் மேல் விழுந்து தீப்பிடித்ததில் 113 பேர் உயிரிழந்தனர். இந்த விபத்தில் விடுதியில் தங்கியிருந்த மேலும்பலர் கொல்லப்பட்டிருக்கலாம் என அஞ்சப்படுகிறது.**

'எயர் பிரான்ஸ்' நிறுவனத்துக்குச் சொந்தமான இந்த விமானம் ஜேர்மனியிலிருந்து பாரிஸ்நகர் வழியாக அமெரிக்காவுக்குச் செல்ல இருந்தது. ஜேர்மனியைச் சேர்ந்த சுற்றுலாப் பயணிகளோடு பாரிஸ் விமான நிலையத்திலிருந்து கிளம்பிய சிறிது நேரத்தில் வடக்கு பிரான்ஸின் கோனர்ஸ் நகரில் உள்ள ஒரு தங்கும் விடுதியின் மீது இந்த விமானம் இயந்திரக் கோளாறு காரணமாக விழுந்து தீப்பற்றியது

இந்த விபத்தில் விமானத்தில் இருந்த 50 பெண்கள் உட்பட 109 பேரும் விடுதியில் இருந்த 4 பேரும் உயிரிழந்தனர்.

விடுதியின் உள்ளேயும் தீ பரவியுள்ளதால், அங்கு தங்கியிருந்தவர்கள் பலர் கொல்லப்பட்டிருக்கலாம் என்று அஞ்சப்படுகிறது. மீட்புப்பணிகள் முழுவேகத்தில் நடந்து வருகின்றன. ஒலியைவிட அதிக வேகம் கொண்டதாதாகக் கருதப்படும் கொன்கோட் வகை விமானம் விபத்துக்குள்ளாவது இதுவே முதல் தடவை என்று கூறப்படுகிறது (இ-ஒ)

## வாஜ்பாய் விஜயம்

புதுடில்லி, ஜூலை 27

இந்தியப் பிரதமர் வாஜ்பாய் எதிர்வரும் செப்ரெம்பர் 15 ஆம் திகதி அமெரிக்காவுக்கு 3 நாள்கள் விஜயம் மேற்கொள்ள உள்ளார்.

கடந்த மார்ச் மாதம் அமெரிக்க அதிபர் பில்கிளின்ரன் இந்தியாவுக்கு வந்திருந்தபோது விடுத்த அழைப்பை அடுத்தே வாஜ்பாயின் விஜயம் ஒழுங்கு செய்யப்பட்டதாக இந்திய அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ஒ)

## 27வதுமாடியிலிருந்துகாரின்மீது குதித்த பெண் உயிர் தப்பினார்!

பிரஸ்லெஸ், ஜூலை 27

பெல்ஜியத்தில் தற்கொலை செய்வதற்காக உயரமானகட்டடத்தின் 27ஆவது மாடியில் இருந்து குதித்த பெண் கார் ஒன்றின் கூரை மீது விழுந்ததால் அதிர்ஷ்டவசமாக உயிர் பிழைத்துக்கொண்டார்.

37 வயதான இந்தப் பெண்மணி 290அடி உயரத்தில் இருந்து மணிக்கு 148 கிலோமீற்றர் வேகத்தில் காரின் மேல் விழுந்துள்ளதாகக் கூறப்படுகிறது இதில் அவரது கை, கால்களில் 4 இடங்களில் எலும்பு முறிவும் இரத்தக் காயமும் ஏற்பட்டுள்ளன.

மனநோயால் பாதிக்கப்பட்ட இவர் ஏற்கனவே ஒரு முறை தற்கொலை முயற்சியில் ஈடுபட்டு உயிர் பிழைத்துள்ளார்.

இவர் விழுந்த கார் 5 நாள்களுக்கு முன்னர் தான் புதிதாக வாங்கப்பட்டுள்ளது குதித்த பெண்மணிக்கு காப்புறுதியும் கிடையாது அதனால் புத்தம் புதிய காருக்கு ஏற்பட்ட சேதத்தை யாரிடம் கேட்பது என்று அந்தக் கார் உரிமையாளர் தலையில் கைவைத்தபடி புலம்புகிறாராம். (ஐ-ஒ)

# ஈராக் அதிபர் சதாமுக்கு எதிராக அமெரிக்கா ஆதரவு திரட்டுகிறது

லண்டன், ஜூலை 27

அதிபர் சதாம்ஹுசேன்உட்பட ஈராக்கிய உயர் அதிகாரிகள் போர்க்காலங்களில் பாரிய மனித உரிமை மீறல் குற்றங்களைப் புரிந்ததாகக் கூறப்படும் குற்றச்சாட்டுக்கு ஆதரவாக அமெரிக்கா சர்வதேசச் சமூகத்தைத் திரட்டும் முயற்சியில் இறங்கியுள்ளது.

லண்டனில் தலைமையகத்தைக் கொண்ட மனித உரிமைகள் அமைப்பொன்றின் ஆய்வறிக்கையில் ஈராக்கில் யுத்தம் நடைபெற்ற காலங்களில் அதிபர் சதாம், உதவிப் பிரதமர் தாசிக் அசிஸ் மற்றும் இராணுவ உயர் அதிகாரிகள் ஆகியோர் மனிதாபிமானம் அற்றமுறையில் போர்க்கைதிகளை நடத்தியது உட்பட பல வகை மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டதாகக்



கூறப்பட்டுள்ளது.

இதனை அடுத்தே அமெரிக்கா ஈராக்குக்கு எதிராக ஆதரவு திரட்டும் முயற்சியில் இறங்கியுள்ளது.

இதனால் ஈராக் அமெரிக்க மோதல் மீண்டும் ஏற்படக் கூடும் என்று கருதப்படுகிறது. (இ-3)

## உயர்மட்டக் கூட்டங்கள்

சியோல், ஜூலை 27

வடகொரியா மற்றும் தென்கொரியா இடையேயான உயர்மட்டக் கூட்டம் நடந்துள்ளது.

இந்தக் கூட்டத்தில் இரு நாடுகளுக்குமான பொருளாதார வளர்ச்சி, கலாசாரப் பரிமாற்றம் என்பன குறித்து ஆராயப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-ஒ)

## 'மாக்சசே' விருது பெற்றனர்

மணிலா, ஜூலை 27

இந்த ஆண்டுக்கான 'மாக்சசே' விருது இந்தியாவைச் சேர்ந்த அருணாராய், அற்புதம் என்பவர்களுக்கும் துருக்கி நாட்டு முன்னாள் மேயர் மற்றும் இந்தோனேசியப் பத்திரிகையாளர் ஆகியோருக்கும் வழங்கப்பட்டுள்ளது.

ஏழ்மையால் வாடும் சேரி மக்களுக்கு சேவை செய்ததற்காக இரு இந்தியர்களுக்கும் இந்த விருது வழங்கப்பட்டது. மற்ற இருவரும் சமூகப்பணிகளை முன்னிட்டு விருதுக்குத் தெரிவாகி உள்ளனர். (இ-ஒ-9)

## காம்ப்டேவிட் மாநாடு முடிந்தது

# எட்டாக்கனியான சமாதானத்தீர்வு

வாஷிங்ரன், ஜூலை 27

அமெரிக்காவின் காம்ப்டேவிட் நகரில் கடந்த 3 வார காலமாகத் தொடர்ந்த இஸ்ரேல்—பலஸ்தீனச் சமாதானப் பேச்சுவார்த்தைகள் உடன்படிக்கைகள் எதுவும் எட்டப்படாத நிலையில் நேற்று முடிவடைந்ததாக அமெரிக்க அதிபரின் அலுவலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

நீண்ட காலமாகத் தொடரும் பலஸ்தீனியப் பிரச்சினையில் அமைதியை ஏற்படுத்தும் என்று பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட காம்ப்டேவிட் மாநாட்டுக்கு ஜெருசலேமின் அந்தஸ்துக் குறித்த சிக்கல் முட்டுக்கட்டையானது தெரிந்ததே. (இ-ஒ)

## மாநில சுயாட்சியே சிறந்த மருந்து

காஷ்மீர், ஜூலை 27

'மாநில சுயாட்சி வழங்குவதே காஷ்மீர் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு சிறந்த மருந்தாகும்' என்று முதலமைச்சர் பரூக் அப்துல்லா ஜம்முவில் நடைபெற்ற கூட்டமொன்றில் பேசுகையில் தெரிவித்தார்.

ஒரு காலத்தில் காஷ்மீர் பாகிஸ்தானின் அங்கமாகிவிடுமென தீவிரவாதிகள் கனவு காண்பதாகக் குறிப்பிட்ட பரூக் அப்துல்லா, காஷ்மீர் பாகிஸ்தானின் கைக்குப் போகாது என்றும், விடுதலைகோரி தனிநாடு ஆகாது என்றும் உறுதியாகத் தெரிவித்தார். (இ-ஒ-9)

## தலிபான் ஆட்சியாளர் வாக்குறுதி

காபூல், ஜூலை 27

சீனாவின் வடமேற்குப் பிரதேசத்தில் இஸ்லாமிய சுயாட்சி அரசு ஒன்றை அமைப்பதற்காகப் போராடி வரும் தீவிரவாதிகள் ஆப்கானிஸ்தானின் பகுதிகளைத் தளங்களாகப் பயன்படுத்த அனுமதிக்கப் போவதில்லை என்று தலிபான் அரசு சீனாவுக்கு வாக்குறுதி அளித்துள்ளது.

தமது நாட்டில் செயற்படும் இஸ்லாமியத் தீவிரவாதிகளுக்கு தலிபான் ஆட்சியாளர்கள் உதவி வருவதாகவும், இந்தப் போக்கை அவர்கள் நிறுத்தாவிட்டால் ஆப்கானிஸ்தான் மீது கடும் நடவடிக்கைகள் மேற்கொள்ள நேரிடும் என்றும் சீனா சமீபத்தில் எச்சரிக்கை விடுத்தது குறிப்பிடத்தக்கது. (இ-ஒ-9)

## நைஜீரியாவில் 40 பேர் பலி!

நைரோபி, ஜூலை 27

நைஜீரியாவில் காப்ளே நகரில் எண்ணெய்க் குழாய் வெடித்துத் தீப்பிடித்ததில் 40 பேர் உடல் கருகிப் பலியானார்கள்.

சமீப காலமாக நைஜீரியாவில் எண்ணெய்க் குழாய்கள் பல இடங்களில் வெடித்து நூற்றுக்கும் மேற்பட்டோர் பலியாகி வருகின்றனர்.

அங்கு காலநிலையில் உடனடி மாறுதல்கள் ஏற்படுவதால் நகரங்களுக்கு இடையேயான எண்ணெய்க் குழாய்கள் விரிசல் ஏற்பட்டு வெடிப்பதாகக் கூறப்படுகிறது. (இ-3)

# பாதிரியார் உட்பட மூவர் திரிபுராவில் சுட்டுக் கொலை

இந்தியாவின் வடகிழக்கு மாநிலமான திரிபுராவில் ஜேர்மனியைச் சேர்ந்த பாதிரியார் உட்பட மூவரை அடையாளம் தெரியாத கும்பல் ஒன்று சுட்டுக் கொன்றது-

கிராமம் ஒன்றில் உதவிப் பணி புரிந்துவிட்டு கார் ஒன்றில் இரு உதவியாளர்களுடன் பாதிரியார் வந்து கொண்டிருந்ததாகவும், அப்போது காரை வழிமறித்த கும்பல் ஒன்று கண்மூடித்தனமாக நடத்திய துப்பாக்கிச் சூட்டில் மூவரும் உயிரிழந்ததாகவும் கூறப்படுகிறது.

திரிபுரா தேசிய விடுதலை முன்னணியைச் சேர்ந்த தீவிரவாதிகளே இந்தப்படுகொலைகளுக்குக் காரணம் என்று பொலீஸார் தெரிவித்துள்ளனர். (இ-ஒ)

# இந்தியாவில் மாவீரர் தினம்; மக்கள் தீபம் ஏற்றி அஞ்சலி

புதுடில்லி, ஜூலை 27

கார்கில் போரில் வீரமரணம் அடைந்த இராணுவ வீரர்களின் நினைவு தினம் அனைத்து இந்திய மாநிலங்களிலும் எழுச்சியுடன் கொண்டாடப்பட்டது.

உலக அரங்கில்

கடந்த ஆண்டு காஷ்மீருக்குள் ஊடுருவிய தீவிரவாதிகளை விரட்டியடித்து இந்திய இராணுவம் வெற்றிபெற்ற தினமான நேற்று புதுடில்லியில் உள்ள அணையாத தீபம் உள்ள 'அமர்ஜவான்' நினைவுச் சின்னத்தில் அரசியல் கட்சித் தலைவர்கள் அஞ்சலி செலுத்தினர்.

இந்திய மக்கள் அனைவரும் தத்தமது வீடுகளில் மெழுகுவர்த்தி தீபம் ஏற்றி நாட்டைக் காத்த மாவீரர்களுக்கு தமது வணக்கத்தைத் தெரிவித்தனர்.

நாடெங்கும் ஒற்றுமை, சகோதரத்துவம் ஆகியவற்றை ஏற்படுத்தும் நிகழ்வுகள் நடத்தப்பட்டன.

# வியட்நாமில் மழை; 33 பேர் பலி; பயிர் நாசம் பல கோடி ரூபாவுக்கு

வியட்நாமில் வடக்குப் பகுதியில் கடந்த ஒருவார காலமாகப் பெய்துவரும் கடும் மழைக்கு 33 பேர் பலியாகியுள்ளனர் 3 லட்சம் ஹெக்டேர் விவசாய நிலங்கள் வெள்ளத்தால் மூழ்கடிக்கப்பட்டன. இதனால் பலகோடி ரூபா மதிப்புள்ள உணவுப் பயிர்கள் அழிந்தன.

பருவ மழை தொடர்ந்து பெய்து வருவதால் சேதங்களும், பலிகளும் அதிகரிக்கலாம் என்று அஞ்சப்படுகிறது.

வியட்நாமில் ஆண்டுதோறும் ஜூலை மாதத்தை ஒட்டிய காலத்தில் புயலும் வெள்ளமும் ஏற்படுவது வழக்கம்என்றுகூறப்படுகிறது.

கடந்த வருடம் நவம்பர் மாதம் வியட்நாமில் கடும் மழை வெள்ளத்துக்கு சுமார் 730 பேர் பலியானது குறிப்பிடத்தக்கது. (இ-ஒ-9)

# நடிகரின் சொத்துக்கள் முடக்கம்

பிரபல இந்தித் திரைப்பட நடிகர் அமிதாப்பச்சன் செலுத்த வேண்டிய வருமான வரிக்காக அவரின் வங்கிக் கணக்குகளையும், மும்பையில் உள்ள மாளிகையையும் வருமான வரித்துறை அதிகாரிகள் முடக்கி வைத்துள்ளனர்.

அத்துடன் அமிதாப்புக்குச் சொந்தமான வணிக வளாகங்களில் சோதனை மேற்கொண்டுள்ளனர்

இந்தி திரையுலகில் உச்ச நட்சத்திரமாகத் திகழ்ந்த அமிதாப்பச்சன் சினிமா மற்றும் பாடல் ஒலிநாடாத் தயாரிப்பு நிறுவனங்களை நடத்தி வந்தார்.

இவர் அரசுக்குச் செலுத்த வேண்டிய 13 கோடி ரூபா வருமான வரியைச் செலுத்தாமல் இருந்ததாலேயே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டதாக இந்திய நிதிச் செயலகம் தெரிவித்தது. (இ-ஒ)

## மந்திகையில் உள்ள
# ரெலிகொம் அலுவலகத்தில் வெளியூர் தொலைபேசி வசதி

வடமராட்சி, ஜூலை 27

மந்திகையில் உள்ள ரெலிகொம் தொலைத் தொடர்பு நிலையத்தில் வெளியிடங்களுக்கான தொலைபேசிச் சேவை வழங்கப்பட்டு வருகிறது.

ஏற்கனவே பதிவு செய்தவர்களுக்கு தினமும் சுமார் 20 வெளியூர் தொலைபேசிச் சேவைக்கான இணைப்புகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படுகின்றன.

இதேவேளை —

பருத்தித்துறைக்கான தொலைபேசிச் சேவையில் 9 ஆம் இலக்கத்தைச் சுழற்றி நேரடியாக இணைப்புப் பெறுவது தடைப்பட்டுள்ளது. 9 ஆம் இலக்கத்துடனான தொடர்பு முறை பழுதடைந்துள்ளதாலேயே இந்நிலை ஏற்பட்டுள்ளது. ஆனால் யாழ். பரிவர்த்தனை நிலையத்துடன் தொடர்பு கொண்டு வெளியிடங்களுக்கான தொலைபேசி இணைப்பைப் பெறக் கூடியதாக உள்ளது.

(ஐ-173)

# பனை தென்னை அபி. சங்கம் இயங்குகின்றது

யாழ்ப்பாணம், ஜூலை 27

அண்மையில் குடாநாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாக இடம்பெயர்ந்த கொடிகாமம் பனை தென்னை வள அபிவிருத்திச் சங்கம் தற்போது முடக்காடு, நெல்லியடி கிழக்கு, கரவெட்டி எனும் முகவரியில் இயங்குவதாகத் தெரிவிக்கப்பட்டது.

(க)

# புலிகள் ஏற்கும் தீர்வை முன்வைத்து பேசாவிடில் சமாதானம் கிட்டாது!

## பிரதி அமைச்சர் ஹிஸ்புல்லா

ஜனாதிபதியும் ஐ.தே. கட்சியினரும் பிரச்சினைகளுக்கு தீர்வு காண பேச்சுவார்த்தைகள் நடத்தினாலும் விடுதலைப் புலிகள் ஏற்றுக் கொள்ளத்தக்க தீர்வினை முன் வைத்து பேச்சுவார்த்தைகள் நடத்தப்படாவிட்டால் எந்தத் தீர்வும் சாத்தியப்படமாட்டாது. இவ்வாறு தபால் தொலைத் தொடர்புகள், வெகுசன தொடர்புசாதன பிரதி அமைச்சர் எம். எல். ஏ எம். ஹிஸ்புல்லா கூறியுள்ளார்.

ஏறாவூர் கோட்ட மட்டத்திலான மீலாத் விழா நிகழ்ச்சிகள் ஏறாவூர் அலிகார் தேசியப் பாடசாலை ஆராதனை மண்டபத்தில் கோட்டக் கல்வி அதிகாரி ஐ. எல். செயனுலாப்தீன் தலைமையில் நடைபெற்றபோது பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு அவர் உரையாற்றினார்.

பிரதி அமைச்சர்தொடர்ந்து உரையாற்றுகையில் எமது நாட்டிலுள்ள அரசியல் தலைவர்கள் நேரத்திற்கு நேரம் வேறுபட்ட கருத்துக்களை முன்வைத்து பேச்சுவார்த்தை நடத்தி வருவதால் நாட்டின் அமைதியும், சமாதானமும் எம்மை விட்டு விலகிக் கொண்டே செல்கின்றன. இதனால்இதய சுத்தியுடன் பேச்சுவார்த்தை நடத்தப்படவேண்டும். அப்போது தான் சமாதானத்திற்கான உடன்பாடுகளை காணமுடியும்.

முரண்பாடான கருத்துக்களை முஸ்லிம்கள் மாத்திரமின்றி பெரும்பாலான தமிழ் கட்சிகளும் நிராகரித்தே வருகின்றன.

இருந்தாலும் நபி (ஸல்) அவர்கள் விரும்புகின்ற வகையில் முஸ்லிம்களும் சமாதானத்திற்காக பாடுபட வேண்டும்—என்றார். (ஐ-6)

# மகா சங்கத்தினரின் நிலைப்பாடு சமாதானத்தின் மற்றொரு தோல்வி

## அஷ்ரப் கூறுகிறார்

கொழும்பு, ஜூலை 27

சுதந்திரத்துக்குப் பின்பு இரு பெரும் கட்சிகள் இணைந்து சமாதானத் தீர்வொன்றிற்குஅடித்தளமிட்டுள்ளன. இந்நிலையில் பௌத்த மகா சங்கத்தினர் சிங்கள எம்.பிக்களிடம் விடுத்துள்ள வேண்டுகோள் மற்றுமொரு சமாதானத் தோல்விக்கு வழி வகுத்துள்ளது. இது கவலைப்பட வேண்டிய விடயம்.

இவ்வாறு துறைமுக அபிவிருத்தி, புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சர் எம்.எச். எம். அஷ்ரப் சம்மாந்துறை அல் மர்ஜான் மகளிர் கல்லூரியின் பொன்விழாவை ஒட்டிய கல்விக் கண்காட்சியை அங்குரார்ப்பணம் செய்து வைத்துப் பேசுகையில் குறிப்பிட்டார். கல்லூரி அதிபர் எஸ். எச். எம். முஸ்தபா தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் அமைச்சர் அஷ்ரப் மேலும் கூறியதாவது:-

சமாதானத்தீர்வு ஏற்றுக் கொள்ளப்படுகின்றதோ, இல்லையோ எமது அம்பாறை மாவட்ட மக்கள் ஒன்றாக இணைந்து வாழ்வதையாரும் தடுக்க முடியாது அது ஒரு வகையில் ஆறுதலளிக்கிறது.

நாம்பிறந்த இந்த நாட்டில் யாவரும் சமத்துவமாக வாழ முடிகிறதா? நாட்டில் இன்று படித்தவர்கள் பேராசிரியர்கள் இனவாத ரீதியில் சிந்திப்பதற்குக் காரணம் என்ன?

சிறுபான்மைச் சமூகத்திற்கு அந்தஸ்து வழங்கக் கூடாது. உரிமை மறுக்கப்பட்டுள்ளது என்றால் யார் காரணம் கல்வி கற்றும் கல்விக்கண் திறக்கப்படாததே காரணமாகும். கல்வியானது நமது அகப்புறக் கண்களைத்திறந்து விடவேண்டும். ஆனால் நாட்டிலுள்ள பலருக்கு அகக்கண்கள் திறக்கப்படாததே பிரச்சினைக்குக் காரணமாகும் — என்றார்.

(ஐ-6)

## புலிகளுக்கு எதிரான போரில்
# சர்வதேச ஆதரவு பெருகி வருகிறது!

## அனுருத்த கூறுகிறார்

கொழும்பு, ஜூலை 27

விடுதலைப் புலிகள் இயக்கத்தை எதிர்த்துப் போராடுவதில் அரசாங்கம் பெருமளவில் சர்வதேச ஆதரவைப் பெற்று வருவதாக பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் அனுருத்த ரத்வத்த தெரிவித்துள்ளார்.

கொழும்பில் தேசிய பாதுகாப்பு நிதியத்துக்கு ஒரு தொகைப் பணம் மற்றும் பொருள்கள் அன்பளிப்புச் செய்யப்பட்ட வைபவத்தில் உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

வெளிநாடுகளிடம் ஜனாதிபதி விடுத்த கோரிக்கைக்குப் பெரும் வரவேற்பு கிடைத்துள்ளது. பொதுமக்கள் சிறிது காலம் சிரமத்தைப் பொறுத்துக் கொண்டு அரசாங்கத்துக்கு ஆதரவு வழங்கினால் யுத்தத்தை சுபமாக முடிவுக்குக் கொண்டு வரமுடியும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

(க)

# பருத்தித்துறை துறைமுகத்தில் கப்பல்கள்

நெல்லியடி, ஜூலை 27

செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் நோயாளர் கப்பல் நேற்றுக் காலை பருத்தித்துறை துறைமுகத்தை வந்தடைந்தது.

இக்கப்பலில் கொழும்பில் சிகிச்சைபெறச் சென்ற 12 நோயாளிகளும் வந்து சேர்ந்தனர்.

இதேவேளை —

கொழும்பில் இருந்து புறப்பட்ட 'இந்துருவலி' கப்பலும் 2 ஆயிரத்து 400 மெற்றிக் தொன் பொருள்களுடன் நேற்று முற்பகல் பருத்தித்துறை துறைமுகத்தை வந்தடைந்தது.

இக்கப்பலில் சீமெந்து, அஸ்பெட்டஸ் சீற் வகைகளும் தனியாருக்கு சில்லறைப் பொருள்களும் எடுத்துவரப்பட்டன. பொருள்கள் இறக்கும் பணி உடன் ஆரம்பமாகியது. (ஐ-109)

# சங்கக் கிளை திறப்பு

நெல்லியடி, ஜூலை 27

கைதடிப் பகுதியிலிருந்து இடம்பெயர்ந்து நெல்லியடிப் பகுதியில் வசித்து வரும் மக்களின் நலன் கருதி கட்டைவேலி – நெல்லியடி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் புதிய கிளை ஒன்றைத் திறந்து வைத்துள்ளது.

நெல்லியடி எரிபொருள் விற்பனை நிலையத்துக்கு அருகில் இந்தப் புதிய கிளையை சங்கத் தலைவர் த. சிதம்பரப்பிள்ளை அண்மையில் திறந்து வைத்தார் (ஐ-109)

# உறவினரைத் தேடும் வயோதிபர்

நெல்லியடி, ஜூலை 27

மந்திகை மருந்துவமனை வார்ட்டில் தங்கியிருந்து சிகிச்சை பெறும் நோயாளியான வயோதிபர் ஒருவர் தனது உறவினரைத் தேடுகின்றார்.

கைமுறிந்த நிலையில் யாழ். போதனா மருத்துவமனையில் இருந்து மந்திகை மருத்துவமனைக்கு அனுப்பிவைக்கப்பட்டிருக்கும் இணுவில் மஞ்சத்தடியைச் சேர்ந்த செல்லையா குமாரசாமி(வயது70) என்பவரே கடந்த இரு வார காலமாக தமது உறவினரைத் தேடுபவராவார்.

(ஐ-109)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி ஞானகி செல்வநாயகம்

(உரும்பிராய் வடக்கு)

உரும்பிராய் வடக்கு இந்துக்கல்லூரி வீதியைச்சேர்ந்த திருமதி ஜானகி-செல்வநாயகம் (26-07-2000) நேற்றுக் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னுத்துரை-சிவயோகம் தம்பதியரின் அருமைப் புதல்வியும் காலஞ்சென்ற காசிப்பிள்ளை செல்வநாயகம் அவர்களின் (முன்னாள் பிரதம லிகிதர்–றோபரி மடுல்சிம) அன்பு மனைவியாரும், காலஞ்சென்ற திருமதி கலாமணி-சிவானந்தன் (உப அதிபர்(றோ. க. த. பாடசாலை, உரும்பிராய்), செல்வவிநாயகர் (UNDP) ஆகியோரின் பிரியமிகு தாயாரும், சிவானந்தன் (முன்னாள் முகாமையாளர், விற்பனைத் திணைக்களம், கிளிநொச்சி)' திருமதி சிவயோகம்-செல்வநாயகர் (சனசமூக நிலைய அபிவிருத்தி உத்தியோகத்தர்) ஆகியோரின் அன்புமிகு மாமியாரும் சிவப்பிரியன், சிவப்பிரசாந் ஆகியோரின் அருமைப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் உரும்பிராய் இந்துக் கல்லூரி வீதியில் அமைந்துள்ள 'கமலபதி' இல்லத்தில் இன்று வியாழன் (27- 07 -2000) முற்பகல் 9 மணிக்கு நடைபெற்று உரும்பிராய் வடக்கு இருளன் மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இந்தச் செய்தியைஏற்றுக்கொள்ளும்வண்ணம் உறவினர்களையும் நண்பர்களையும் கேட்டுக்கொள்ளுகிறோம்.

தகவல்

செ. செல்வவிநாயகர் (மகன்)

சி சிவானந்தன் (மருமகன்)

'கமலபதி'
இந்துக்கல்லூரி வீதி,
உரும்பிராய் வடக்கு,
உரும்பிராய்.

(76737)

## ஆட்லறி மேஜர் N.A. இம்மானுவேல்

(ஓய்வுபெற்ற நிறைவேற்று அதிகாரி,
துறைமுகக் கூட்டுத்தாபனம்)

சில்லாலையைப் பிறப்பிடமாகவும் பாண்டியன் தாழ்வை வசிப்பிடமாகவும் கொண்ட மேஜர் N.A. இம்மானுவேல் நேற்று (26—07—2000) புதன்கிழமை சில்லாலையில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற நீக்கிலஸ் பிள்ளை அந்தோனிப்பிள்ளை – விக்ரோரியா தம்பதியினரின் அன்பு மகனும், சில்வியாவின் அன்புக் கணவரும், திருமதி ராணி அரியநாயகம் (யாழ். காப்புறுதிக் கூட்டுத்தாபன பிரதேச முகாமையாளர்), வண பிதா பற்றிக் இம்மானுவேல் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், அரியநாயகத்தின் (கொழும்பு) அன்பு மாமனாரும், சுரேஷினியின் (ஸ்ரீஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகம்) அன்புப் பேரனும், பொன்னையா (மலேசியா), முத்தம்மா (நாவாந்துறை), யேசுதாசன் (கனடா) ஆகியோரினதும் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை, இக்னேசியஸ் ராஜதுரை, திரேசம்மா, மரியநாயகம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் மற்றும் யோன்பிள்ளை தம்பதியினரின் அன்பு மருமகனும் பிலோமினாவின் வளர்ப்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனைகள் (27—07—2000) இன்று மாலை 4 மணிக்கு (புதிய நேரம்) சில்லாலை கதிரை மாதா ஆலயத்தில் இடம்பெறும் இரங்கற் திருப்பலியின் பின் சில்லாலை சேமக்காலையில் பூதவுடல் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:-

திருமதி ராணி அரியநாயகம்

(மகள்)

(யாழ். காப்புறுதி கூட்டுத்தாபன பிரதேச முகாமையாளர்)

நிரந்தர முகவரி:
54/3, பாண்டியன் தாழ்வு,
யாழ்ப்பாணம்.

தற்காலிக முகவரி:
கதிரைமாதா கோயில் முன் வீதி,
சில்லாலை.

(76739)

# கண்ணீர் அஞ்சலி

இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபன
யாழ். பிராந்திய முகாமையாளர்

திருமதி R. F. அரியநாயகம் அவர்களின்
அன்புத் தந்தையார்

## மேஜர் N. A. இம்மானுவேல்

அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

உதவிப் பிராந்திய முகாமையாளரும்,
ஊழியர்களும்.

வ/ப.இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனம்,
யாழ்ப்பாணம்.

(76740)

உதயன்

## எச்சரிக்கை மிகவும் தேவை

போருக்கு அஞ்சி தமிழகத்துக்கு அகதிகளாகச் செல்லும் ஈழத் தமிழர்களின் நிலை, மரத்தால் விழுந்தவனை மாடேறி மிதித்த கதியாகி விட்டது. வடக்கில் உக்கிரமடைந்துள்ள போரில் சிக்குண்டு உயிரிழப்பதனையும் இடம்பெயர்ந்து அல்லற்படுவதனையும் தவிர்ப்பதற்காக, தடுப்பதற்காக தமிழ் மக்களில் பலரும் தமிழகத்தில் தஞ்சம் அடைய அவசரப்படுகின்றனர்.

தமது உயிரைக் காப்பதற்கு தமிழகம் சென்றடையும் ஈழத்தமிழர்களுக்குத் தஞ்சம் அளித்து, அவர்களை அகதிகளாக ஏற்கும் மனிதாபிமான உதவியை தமிழகம் மீண்டும் செய்கிறது. வட இலங்கையில் இருந்து தமிழகம் சென்றடைவதற்குக் கடல் வழிப்பாதையே இலகுவானதும் விரைவானதும் ஆகும்.

இந்தச் சூழ்நிலையைப் பயன்படுத்தி, தமது உயிரைப் பாதுகாப்பதற்காகத் தமிழகத்துக்குச் சென்று தஞ்சம் கோருவதற்கு அவசரப்படுவோரைச் சுரண்டவும் ஏமாற்றவும் செய்கிறது ஒரு கும்பல். ஈழத் தமிழ் அகதிகளை தமிழகத்துக்குக் கொண்டு சென்று சேர்ப்பது ஒரு மோசடி நிறைந்த தொழிலாக மாறியிருப்பது மிகவும் கேவலமானதாகும்.

ஏற்கனவே இன்னலுற்று, நொந்து போய் உயிரைக் காப்பாற்றி விட வேண்டும் என்ற தவிப்புடன் தமிழகம் செல்ல விரும்பும் மக்களை மோசடி செய்யும், ஏமாற்றும் கும்பலில் ஈழத்தவரும் தமிழகத்தவரும் சேர்ந்துள்ளனர். தவித்த முயல் அடிக்கும் இந்தக் கோஷ்டிக்கு பணம் உழைப்பதே குறிக்கோளாக இருக்கிறது. மனித நேயமோ, இரக்க சிந்தையோ சிறிதும் இல்லாத கொடியவர்களாக இவர்கள் செயற்படுகிறார்கள்.

அந்தரித்துச் செல்லும் அப்பாவி மக்களின் உயிர்களுடன் சிறிதும் மனிதாபிமானமற்ற முறையில் விளையாடும் இவர்களின் செயல் காட்டுமிராண்டித்தனமானதாகும்.

அகதிகளைத் தமிழகக் கரைக்குக் கூட்டிச் செல்லும் படகோட்டிகள் அடுத்தடுத்துச் சில நாள்களில் மக்களின் உயிரோடு விளையாடிய சம்பவங்கள் நெஞ்சை உருக்குவனவாக அமைந்துள்ளன.

அகதிகளிடம் இருந்து சுளையாகப் பணத்தைக் கறந்து கொண்டு, அவர்களை அக்கரை சேர்ப்பதாக ஆசை வார்த்தை அளந்த தரகர்கள் தமிழகப் படகோட்டிகளுக்குப் பணத்தை வழங்கவில்லை. அதனால், அவர்கள் அகதிகளைத் திரும்பவும் புறப்பட்ட இடத்துக்கே கொண்டு வந்து நடுக்கடலில் விட்ட சம்பவம் மோசடிக் கும்பலின் அடாவடித்தனத்தைக் காட்டுகிறது.

அகதியாகத் தமிழகம் சென்று கொண்டிருந்த இளம்பெண் ஒருவர் தமிழகக் கடற்பகுதியில் வைத்துக் கடத்திச் செல்லப்பட்டுப் படுகொலை செய்யப்பட்ட சம்பவமோ மிகவும் அரக்கத்தனமாகும்; மிருகத்தனமானதாகும்.

ஆபத்தில் சிக்கியுள்ளவர்களுக்கு - போர்ப் பிரதேசத்தில் உயிருக்காகப் போராடிக் கொண்டிருப்பவர்களுக்கு - உதவுவதாக முன்வந்து பணத்தைச் சூறையாடுவதையும் நம்பிக்கை மோசடி செய்வதையும் கொலை செய்வதையும் நோக்கமாகக் கொண்டு இயங்கும் இந்தக் கும்பலில் உள்ளவர்கள் தமிழர்கள் என்பது மிகவும் வெட்கப்பட வேண்டியதாகும். தமது சொந்த மக்களுக்கே - தங்கள் இனத்தவருக்கே - கொடுமை விளைக்கும் இவர்களை எவ்வாறு வர்ணிப்பது?

உதவி செய்வதாக நடித்து உபத்திரவம் கொடுக்கும், கொடுமை புரியும் இந்தக் கும்பலைச் சேர்ந்தவர்களைத் தயவு தாட்சண்யம் இல்லாமல் தண்டிக்க வேண்டும். இது விடயத்தில் இலங்கை அதிகாரிகளும் தமிழக அதிகாரிகளும் கண்காணிப்பாக இருக்க வேண்டும்.

அதனை விடவும், அகதிகளாகத் தமிழகக்கரை சேர்ந்து விட வேண்டும் என்ற அவசரத்தில் பாதிப்புறுவோர் தங்கள் உயிர்களைத் தாமே பணயம் வைக்காதிருக்கப் பார்த்துக் கொள்ள வேண்டும். அவசரம் ஆபத்தைத் தரும். குள்ளநரிகளை இனங் காணும் திறமையும் தேவை. முன் சொன்ன சம்பவங்களைத் தெரிந்து கொண்டும் எச்சரிக்கையாக நடந்து கொள்ளாவிடில் ஆபத்துப் பின் தொடரவே செய்யும்.

# படையினரின் தியாகம் இல்லாதிருந்தால் நாம் அனைவருமே கடலில் மூழ்கி இருப்போம்

### தினேஷ் குணவர்த்தனா கூறுகிறார்

கொழும்பு,ஜூலை27

எமது நாட்டின் சிறு பகுதியைக் கூட விடுதலைப் புலிகள் பிரித்து எடுக்க முடியாதிருப்பதற்குக் காரணம் இலங்கை இராணுவத்தின் தியாகங்களே ஆகும். இராணுவத்தின் தியாகங்கள் இல்லாதிருந்தால் நாம் அனைவருமே கடலில் மூழ்கி இருப்போம்.

மேற்கண்டவாறு மக்கள் ஐக்கிய முன்னணித் தலைவர் தினேஷ் குணவர்த்தனா கூறினார்.

காலி மாவட்டத்தில் எல்பிட்டி என்ற இடத்தில் இடம்பெற்ற வைபவம் ஒன்றில் பேசுகையில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இன்று இலங்கை மக்களுக்கு இனப்பிரச்சினை, பொருளாதாரச் சிக்கல், தொழில் இல்லாத விரக்தி போன்றவற்றால் அரசியல்வாதிகள் மீது வெறுப்பு ஏற்பட்டுள்ளது. பொது மக்களுக்கு ஆறு வருடங்களுக்கு ஒரு முறை நாடாளுமன்றத்துக்கும், நான்கு வருடங்களுக்கு ஒரு முறை மாகாண சபை, உள்ளூராட்சி சபை ஆகியனவற்றுக்கும் பிரதிநிதிகளை தெரிவு செய்து அனுப்பும் அதிகாரம் கிடைக்கின்றது. அப்போது மிகவும் புத்திசாலித்தனமான முறையில் சிந்தித்து தமது வாக்குகளை அளிக்க வேண்டும். இல்லாவிட்டால், இரவில் விழுந்த குழியில் பகலில் விழுந்த கதையாக ஆகிவிடும். எமது நாட்டில் நம்பிக்கையாக மக்களுக்கு ஜனநாயக கட்சி ஒன்று இருப்பின் அது மக்கள் ஐக்கிய முன்னணியே ஆகும்.

எமது நாட்டின் பெரும்பான்மை இனத்தவர்களது உரிமைகளை பறித்து எடுக்கும் முயற்சியாக விடுதலைப் புலிகள் மேற்கொண்டு வருகின்ற திட்டங்களை முறியடிக்க சகல இன மக்களும் ஒன்றிணைந்து செயல்படுகின்ற காலம் வந்துள்ளது - என்றார். (இ-6)

# படித்து விட்டால் மட்டும் போதாது பண்புடனும் வாழப் பழக வேண்டும்

### யாழ். மத்தியகல்லூரி வைபவத்தில் நல்லை ஆதீன முதல்வர் உரை

படித்து விட்டால் மட்டும் போதாது பண்புடனும், வாழப் பழக வேண்டும்.

மேற்கண்டவாறு நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் தெரிவித்தார்.

யாழ். மத்திய கல்லூரியிலிருந்து ஜி.சீ.ஈ. உயர்தர பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கு அனுமதி அட்டைகள் வழங்கி ஆசீர்வதிக்கும் வைபவத்தில் கலந்து கொண்டு நல்லை ஆதீன முதல்வர் உரை நிகழ்த்தினார்.

யாழ். மத்திய கல்லூரி அதிபர் க.இராசதுரை தலைமையில் நேற்று இந்த வைபவம் நடைபெற்றது.

நல்லை ஆதீன முதல்வர், யாழ். சென்பீற்றர்ஸ் ஆலய குருவானவரும் மெதடிஸ்த முகாமைக் குருவுமான அருட்திரு.கெ.கருணசேகர, அகவொளி நிலைய இயக்குநர் வண. பிதா இராஜநாயகம் ஆகியோர் மாணவர்களின் அனுமதி அட்டைகளை ஆசீர்வதித்து கல்லூரி அதிபரிடம் வழங்கினார்கள்.

ஒவ்வொரு மாணவராக அழைக்கப்பட்டு அனுமதி அட்டை வழங்கப்பட்டது.

அனுமதி அட்டைகளைப் பெற்றுக் கொண்ட மாணவர்கள், தமது ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர்கள், கல்லூரி அதிபர் ஆகியோரின் கால்களில் விழுந்து ஆசீர்வாதம் பெற்றுக் கொண்டனர்.

நல்லை ஆதீன முதல்வர் மேலும் உரையாற்றும் போது கூறியதாவது:-

மனிதனை மனிதன் மதிக்கும் பண்புகள் குறைந்து வருகின்றன. எனவே மனிதநேயம் பேணப்பட வேண்டும். பாரம்பரிய பண்புகளைப் பேணுகின்ற வகையில் யாழ். மத்திய கல்லூரி முன்மாதிரியாகத் திகழ்கின்றது - என்றார்.

அகவொளி நிலைய இயக்குநர் வண. பிதா இராஜநாயகம் அங்கு உரையாற்றும் போது, கடமையைச் சரிவரச் செய்யவேண்டும். அப்பொழுதுதான் உரிய பலனை அடைய முடியும். கடமையைச் செய்யாமல் பூசை வழிபாடுகளைச் செய்வதனால் நாம் எதிர்பார்த்த பலனை அடைய முடியாது.

பாடசாலைச் சமூகத்தினை விட்டு புதிய சமூகத்தில் இன்று தொடக்கம் நுழையப் போகின்ற மாணவர்கள் பாடசாலையின் பெயரைக் காப்பாற்ற வேண்டும் - என்றார். (இ-5-10)

### சபாநாயகர் மீதான

# நம்பிக்கை இல்லாப் பிரேரணை சபை நிகழ்ச்சி நிரலில்

சபாநாயகர் கே.பி.இரத்நாயக்காவுக்கு எதிராக ஐ.தே.க. கொண்டு வந்துள்ள நம்பிக்கையில்லா பிரேரணை மீதான விவாதம் நாடாளுமன்ற நிகழ்ச்சி நிரலில் சேர்க்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 10ஆம் திகதி கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் இந்த விவாதம் மீதான திகதி தீர்மானிக்கப்படும்.

நம்பிக்கை இல்லாப் பிரேரணையில் 41 ஐ.தே.க உறுப்பினர்கள் கைச்சாத்திட்டுள்ளனர்.

முன்னாள் சபாநாயகர் எம்.எச். முகம்மது, சிரேஷ்ட எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களான லொக்குபண்டார, காமினி அத்துக்கோரள, ரி.தயாரட்ண, அனுரா பண்டாரநாயக்க ஆகியோர் இதில் கைச்சாத்திட்டுள்ளனர்.

கடந்த 6ஆம் திகதி அவசரகாலச் சட்ட நீடிப்பு மீதான விவாதத்தின் போது ஐ.தே.க. அங்கத்தவர் றொனி டி மெலின் பெயர் இல்லாத பொழுதும் நாடாளுமன்றத்தில் உரையாற்றுவதற்கு சபாநாயகர் அனுமதி வழங்கினார் என்ற காரணத்தினாலேயே அவருக்கு எதிராக நம்பிக்கை இல்லாத் தீர்மானம் கொண்டு வரப்படுகிறது. (இ-9)

# பிணையில் செல்லவிடப்பட்ட 18 பேரை விடுவிக்க உத்தரவு

யாழ்ப்பாணம்,ஜூலை27

பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்ட 18 தமிழ் சந்தேக நபர்களை விடுவிக்குமாறு சட்டமா அதிபர் திணைக்களத்தினால் யாழ். நீதிமன்றுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பிட்ட சந்தேக நபர்களை அடுத்தமாதம் 28ஆம் திகதி யாழ். நீதிமன்றத்தில் சமுகமளிக்குமாறு யாழ்நீதிமன்றம் அறிவித்தல் கடிதங்களை அனுப்பி வைத்துள்ளது.

விடுதலை செய்யப்படவுள்ள சந்தேக நபர்களின் விவரம் வருமாறு:-

★ அன்னலிங்கம் சுஜிகரன் - கந்தர்மடம்.

★ ஆறுமுகேந்திரன் சுரேந்திரன் - புதிய செம்மணி வீதி, யாழ்ப்பாணம்.

★ ஐயாத்துரை சேகர் - இருபாலை

★ சின்னத்தம்பி யோகராசா - புதிய செம்மணி வீதி, யாழ்ப்பாணம்.

★ கோவிந்தன் செல்வக்குமார் - யோகபுரம், மல்லாவி.

★ சின்னத்தம்பி சுகிர்தன் - புத்தூர் மேற்கு.

★ சிவஞானம் சுபாஸ்கரன் - புத்தூர் மேற்கு.

★ மகாதேவன் தனராஜ் - கோண்டாவில்.

★ கணேஷ் அமிர்தலிங்கம் - கிளிநொச்சி.

★ துரைசிங்கம் கமலநாத் - ஆனைக்கோட்டை.

★ செல்லப்பா ஈஸ்வரன் - கோண்டாவில்.

★ மகேந்திரன் ரவீந்திரன் - ஆனைக்கோட்டை.

★ ரத்னவேல் சிவகுமார் - ஆனைக்கோட்டை.

★ தியாகராசா கேதீஸ்வரி - கோண்டாவில்.

★ தேவா ரமேஸ் - ஆனைக்கோட்டை.

★ பாலசிங்கம் சசிகரன் - கோண்டாவில்.

★ சுப்பிரமணியம் ரஜனிகாந்த் - கோண்டாவில்.

★ நடேசபிள்ளை ஸ்ரீரஞ்சன் - கோண்டாவில். (இ-5)

## ரூபா 2.ஆயிரம்

பளை, மருதங்கேணிப் பிரதேசங்களில் இருந்து இடம்பெயர்ந்து கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் தங்கியுள்ள 52 குடும்பங்களுக்கு காசோலையாக 2.ஆயிரம் ரூபா வங்கிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என பிரதேச செயலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இவர்களுள் வி.கணபதிப்பிள்ளை (பளை), எம்.ஞானசீலன் (பளை), ஏ.ஜெஸ்லீன் ஜெயசோதி (பளை), ஆர்.சகாயராணி (பளை), கே.சின்னத்தம்பி (பளை) ஆகிய 5 குடும்பங்களுக்கு இன்று காலை 9மணிக்கு செயலகத்தில் வைத்து இந்த காசோலை வழங்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-180)

# கல்வியாளர்களுக்கான நேர்முகப் பரீட்சை

### 29ஆம் 30ஆம் திகதிகளில் நடைபெறும்

யாழ்ப்பாணம்,ஜூலை27

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கல்விச் சேவைக்குழு நடத்தும், தேசிய கல்வியியற் கல்லூரிகளில் விரிவுரையாளர்களாகக் கடமையாற்றுவதற்கு இலங்கை கல்வியாளர் சேவையில் ஆள்சேர்ப்பதற்கான நேர்முகப்பரீட்சை எதிர்வரும் 29ஆம், 30ஆம் திகதிகளில் மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் இயங்கும் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரிப் பீடாதிபதி அலுவலகத்தில் நடைபெறும்.

கல்விச் சேவைக்குழுவுக்கு மேற்படி பதவிக்காக விண்ணப்பித்தவர்களுக்கு அழைப்புக் கடிதங்கள் ஏற்கனவே அனுப்பப்பட்டுள்ளன.

கடிதம் கிடைக்காதவர்கள் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரிப் பீடாதிபதியை அலுவலக நேரத்தில் சந்திக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

நேர்முகப் பரீட்சைக்கு வருகை தரும் போது தவறாது தேவையான சகல ஆவணங்களுடனும் வரும்படி யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி பீடாதிபதி தி. கமலநாதன் கேட்டுள்ளார். (இ-க)

## உதயவாக்கு

பால் கீழே சிந்தி விட்டதை எண்ணிக் கவலை கொள்வதால், அதைத் திரும்பவும் பெற முடியுமா? கழிந்த நிகழ்ச்சிக்காகக் கவலை கொள்வதில் பொருளில்லை. இனிச் செய்ய வேண்டியதைப் பற்றியே சிந்திக்க வேண்டும்.

*- டேல் கார்னகி*

## கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,ஜூலை27

யாழ். மாவட்டக் கூட்டுறவுத் திணைக்கள உத்தியோகப்பற்றற்ற கணக்காய்வாளர் சங்க அங்கத்வர்களுக்கான கலந்துரையாடல் நாளை வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

அன்றையதினம் யாழ்.மணிக்கூட்டு வீதியில் அமைந்துள்ள கூட்டுறவுச் சபை முன்றலில் சங்க அங்கத்தவர்களைக் கூடுமாறு அதன் செயலாளர் கேட்டுள்ளார். (இ-க)

## நவாலியில் கோஷ்டிச் சண்டை

வலி.தென்மேற்கு,ஜூலை27

நவாலி சேர்ச்சடிப் பகுதியில் நேற்று முன்தினம் இரண்டாவது நாளாகவும் இரண்டு இளைஞர் குழுக்களுக்கிடையே கோஷ்டிச் சண்டை நடைபெற்றது.

நவாலி நிரந்தரவாசிகளுக்கும் இடம்பெயர்ந்து வந்து சென். பீற்றர் தேவாலயத்தில் தங்கியுள்ளவர்களுக்கும் இடையில் உண்டான சச்சரவு கடந்த இரண்டு நாள்களாக கைகலப்பாக மாறியது.

இரு இளைஞர் கோஷ்டிகளுக்கும் இடையேயான முறுகல் நிலை தொடர்வதால் அப்பகுதி மக்கள் கவலையடைந்துள்ளனர். (அ-185)

## பனம் குற்றியை உருட்ட மிதிவெடி வெடித்தது

யாழ்ப்பாணம்,ஜூலை27

தறித்து விழுத்திய பனங்குற்றியை உருட்டிய போது அதன் கீழிருந்த மிதிவெடி வெடித்து உருட்டியவர் காயமடைந்தார்.

விளானில் இராணுவத்தினரால் கைவிடப்பட்ட காவலரண் பகுதியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் விறகு வெட்டச் சென்றவரான தம்பிமுத்து மணிவண்ணன் (வயது 26) என்பவரே காயமடைந்தவராவார்.

காயமடைந்தவர் யாழ்.ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (இ-15)

## கப்பலில் தபால் பொதிகள்

பருத்தித்துறைக்கு நேற்று வந்த செஞ்சிலுவை சர்வதேசக் குழுவின் கப்பலில் குடாநாட்டுக்கான வெளியூர் தபால்கள் அடங்கிய 148 தபால் பொதிகள் எடுத்துவரப்பட்டன.

இதே கப்பலில் குடாநாட்டில் சேகரிக்கப்பட்ட தபால்கள் அடங்கிய 47 தபால் பொதிகள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக தபால் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (இ-10)

## நாளை

ஆடி 13

வெள்ளிக்கிழமை

*திதி:* துவாதசி

பிற்பகல் 4.08 வரை

*நட்சத்திரம்:* மிருகசீரிடம்

மாலை 6.08 வரை


பிரதோஷ விரதம்

*சுபநேரம்:* 6.03 - 7.33

*ராகுகாலம்:* 10.33 - 12.03

(இவை பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

## சாயி சிந்தனை



'சாத்வீக சேவை செய்தல்' சேவை செய்தலில் எது சாத்வீகமானது எது ராஜசீகமானது என்று தேர்ந்தெடுத்துக் கொள்ள வேண்டும். வெளியே சென்று கிராமங்களுக்குச் சாலை அமைத்தல், கிணறு தோண்டுதல், வீதிகளைச் சுத்தப்படுத்துதல் போன்ற பணிகளில் ஈடுபடுகின்றீர்கள். இவைகளைச் சமூக சேவையாகவே செய்கிறீர்கள். ஆனால் நீங்கள் செய்யும் சேவை உண்மையில் சம்பந்தப்பட்டோருக்குத் திருப்தியையும் ஆனந்தத்தையும் தர வேண்டும். 'சமூகத் தொண்டு' செய்யும் நோக்கத்துடன் மருத்துவமனைக்குச் சென்று, ஒரு நோயாளியைக் கண்டு உரையாடுகிறீர்கள். இது உண்மையில் தொண்டு. அதாவது சேவை என்று கூற முடியாது. நீங்கள் எவருக்குச் சேவை செய்ய விளைகிறீர்களோ அவரைக் கடவுளின் உருவமெனக் கருத வேண்டும். திக்கற்ற அனாதைகளுக்கும் கவனிப்பின்றிக் கைவிடப்பட்டுத் தவிப்போருக்கும் செய்யும் தொண்டு, உண்மையில் கடவுளுக்குச் செய்யும் தொண்டேயாகும்.

*(ஆதாரம்: சனாதன சாரதி)*

# இங்கு தமிழ் மக்களின் எந்த உரிமையும் பறிக்கப்படவுமில்லை; மறுக்கப்படவுமில்லை

## குமுறுகிறார் தேசப்பிரேமி பௌத்த முன்னணியின் செயலாளர்

**இந்த நாட்டில் தமிழ் மக்கள் எந்த உரிமையையும் இழக்கவுமில்லை அவர்களது எந்த உரிமையும் மறுக்கப்படவுமில்லை. பதிலாக சிங்கள இனம் பல்வேறு இன்னல்களை அனுபவித்து - பல்வேறு உரிமைகளை இழந்துள்ளது என அங்கலாய்க்கிறார் தேசப்பிரேமி பௌத்த முன்னணியின் செயலாளர் பெங்கமுவே நாலக தேரர். ஞாயிறு ''லங்காதீப'' பத்திரிகையில் வெளியான கட்டுரையின் தமிழாக்கத்தை இங்கு தருகிறோம்.**

வடபகுதிப் பிரச்சினை என நாம் சுருக்கமாகக் கூறினாலும் அது தற்போது முழு நாட்டையும் இனத்தையும் பாதிக்கும் பாரிய பிரச்சினையாகும். இனப்பிரச்சினை என இதைச் சிலர் தவறுதலாகக் கருதினாலும் இது தற்போது நாட்டுக்கு அச்சுறுத்தலாக அமைந்துள்ள பயங்கரவாதமேயாகும். ஆரம்பத்தில் தமிழ் இனவாதமாக ஆரம்பித்த இதன் இலக்கு முதலில் வடக்கு - கிழக்கு பகுதிகளை இணைத்து அங்கு தமிழ் ஆட்சி அதிகாரத்தை உருவாக்குதல்; பின்னர் முழு நாட்டையும் கைப்பற்றி ஈழம் அல்லது தமிழ்நாடு ஆக்குதல்; இறுதியில் அதனை தமிழ்-இந்துநாடாக்காமல தமிழ்-கிறிஸ்தவ நாடாக்குதல் என்பதாகும்.

இந்தப் பிரச்சினையை இனப்பிரச்சினையாக எடுத்துக் கொண்டு அவ்வாறான முடிவுக்கு வருவதானது இந்தத் தமிழ் இனவாதப் பிரச்சினைக்கு தீர்வினைக் காண்பதற்குத் தடையாக அமையும். இந்த நாட்டிலுள்ள தமிழ் மக்களுக்கு தமிழர் என்ற காரணத்தினால் உரிமைகள் ஏதும் மறுக்கப்படவில்லை; அவர்கள் எந்த உரிமையையும் இழக்கவுமில்லை. அவர்கள் இந்த நாட்டில் எந்தப் பகுதியில் வாழ்வதற்கோ என்ன தொழிலைச் செய்வதற்கோ நாடாளுமன்ற உறுப்பினராக அல்லது அமைச்சராக வருவதற்கோ தடையேதுமில்லை. ஆனால் இந்நாட்டிலுள்ள சிங்கள மக்களுக்கு வடக்கு - கிழக்கு பகுதிகளில் வாழ்வதற்கோ அல்லது அப்பகுதிகளிலுள்ள பௌத்த புனிதத் தலங்களுக்கு வழிபாட்டுக்காக செல்வதற்கோ முடியாது. எனவே பயங்கரவாதம் காரணமாக பல்வேறு இன்னல்களை அனுபவிப்பதும் பல்வேறு உரிமைகளை இழந்துள்ளதும் சிங்கள மக்களே ஆவர்.

வரலாற்று ரீதியாக தமிழ் ஆக்கிரமிப்பாளர்களால் எமக்குத் தொடர்ந்து அச்சுறுத்தல்களே இருந்து வருகின்றன. அண்மைக் கால வரலாற்றில் தமிழ் இனவாத அரசியலுக்கும் சிங்கள அரசியல்வாதிகளுக்குமிடையில் அதிகாரப் பலவீனம் காரணமாக அல்லது அறிவீனம் காரணமாக உருவாகி வரும் செயற்பாடுகளால் தமிழர் நோக்கம் படிப்படியாக நிறைவேறிக் கொண்டு வருகிறது.

வடக்கு-கிழக்கு மாகாணங்களை இணைத்து ஒரே மாகாணசபையின் நிர்வாகத்தின் கீழ் செயற்பட அனுமதிப்பதானது அப்பகுதியில் தனியான ஆட்சி அமைவதற்கு அடிப்படை ஏதுவாக அமையும். இருப்பினும் மாகாணசபை கலைக்கப்பட்டதாலும் விடுதலைப் புலிப் பயங்கரவாதிகளுக்கு எதிராக யுத்த ரீதியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதாலும் மாகாணசபை மூலம் தமிழர் நோக்கத்தை அடைவதில் ஓரளவு தாமதம் ஏற்பட்டுள்ளது. அவ்வாறு இருந்த போதிலும் வடக்கு - கிழக்கு மாகாண சபையைச் சேர்ந்த சிங்கள அதிகாரிகளைக் கொல்லுதல், அவர்களை அங்கிருந்து வெளியேற்றல் ஆகிய சம்பவங்கள் இடம் பெறுவதை நாமறிவோம். மாகாண சபையின் நிர்வாகம் முற்றிலுமாக தமிழ் நிர்வாகத்தின் கீழ் அமையும் போது அதை அடிப்படையாகக் கொண்டு ஈழம் பற்றிய கனவு செயல் வடிவம் பெறும்.

மாகாண சபை முறைக்கு அப்பால் சென்று வேறு நிர்வாக அமைப்புக்கான அதிகாரங்களை வழங்கும் பொதுமக்கள் ஐக்கிய முன்னணியின் உத்தேசத் தீர்வுத்திட்டம் அல்லது அரசமைப்புக்கான திருத்தம் வடக்கு - கிழக்குக்கு தனியான தமிழ் நிர்வாக அமைப்பையே வழங்கும். அவ்வாறு நடைபெற்றால் ஒரு நாட்டுக்குள் இரு நாடுகள் உருவாகும். மேலும் உலகிலுள்ள தமிழ் சக்திகள் இணைந்து செயற்பட்டு முழு நாட்டையும் ஒரு தமிழ் இராச்சியமாக்கும். அதைத் தடுக்க முடியாது. ரணில் விக்கிரமசிங்கவின் இடைக்கால நிர்வாக சபை அமைப்பிலும் கூட இந்தத் தொனியே எழுகிறது. இதிலிருந்து ஒரு விடயம் தெட்டத் தெளிவாகிறது. அதாவது ஒரு நாட்டின் உள் விவகாரம் தொடர்பான பிரச்சினைக்கு அதிகாரத்தைப் பரவலாக்கி எந்தவொரு அரசியல் தீர்வினையும் காணமுடியாது என்பதே அதுவாகும். இருப்பினும் எமது அரசியல்வாதிகளுக்கும் அவர்களுக்கு ஆலோசனை வழங்குபவர்களுக்கும் இதைப் புரிந்து கொள்ள முடியாதிருக்கிறது. தேவைகளுக்கேற்ப உண்மைகள் மறைக்கப்படுகின்றன. இல்லாத ஓர் இனப்பிரச்சினைக்குத் தீர்வாக அதிகாரப் பரவலாக்கும் உத்தேசத் திட்டங்கள் முன்வைக்கப்படுகின்றன. அந்தத் திட்டங்களை நிறைவேற்ற முயற்சிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்படுகின்றன.

விடுதலைப் புலிகள் அமைப்பினர் அல்லது தமிழ் பயங்கரவாதக் குழுக்களின் முக்கியஸ்தர்கள் அரசியல் தீர்வை நிராகரித்துள்ளனர். ஆயுதங்கள் மூலம் வடக்கு-கிழக்குப் பிரதேசங்களைக் கைப்பற்றுவதே அவர்களின் நோக்கமாகும். இது இவ்வாறு இருக்கையில் மேலும் பல தமிழ் அரசியல்கட்சிகளின் பிரதிநிதிகள் - யாழ்ப்பாணம் செல்ல முடியாமல் கொழும்பில் பாதுகாப்புத் தேடுபவர்கள் - பிரச்சினைக்கு அரசியல்தீர்வு வேண்டுகின்றனர். அவர்களது நோக்கமும் தமிழர்களுக்கு தனியான ஆட்சி அதாவது தமிழீழமே தவிர வேறொன்றும் இல்லை.

சிங்கள அரசியல்வாதிகள் தங்களைச் சுற்றியுள்ள பிரச்சினைகளைத் தவறாகப் புரிந்து கொண்டு சமாதானத் தீர்வைக் காணும் நோக்கில் அரசியல் தீர்வு காண முயல்வதாகத் தெரிவிக்கின்றனர்.

விடுதலைப் புலிகளும் சிங்களத் தீவிரவாத அமைப்புக்களும் (தேசப்பிரேமிகள்) எதிர்ப்புத் தெரிவிக்கவே, அதைச் சிங்கள அரசியல்வாதிகள், தமிழ்ப் பயங்கரவாதிகளும் சிங்களத் தீவிரவாதிகளும் சமாதான முயற்சிகளை எதிர்க்கின்றனர் எனக் கூறுகின்றனர். அதிலும் அதிகமாக அரசியல்வாதிகளின் கண்டனத்துக்கு உள்ளாகிறவர்கள் சிங்களவர்கள் தான். சிங்களவர்கள் அரசியல் தீர்வுக்கு எதிர்ப்புத் தெரிவித்துக் கொண்டிருப்பதன் காரணத்தாலேயே பிரபாகரன் உருவானார் என்னும் அளவுக்கு அவர்களது அறிவீனமும் சந்தேகமும் அமைந்துள்ளன.

பிரபாகரனது பயங்கரவாதம் போன்றே தமிழ் அரசியல்வாதிகளின் அரசியல் தீர்வும் தமிழீழத்தை நோக்கிச் செல்லும் மற்றொரு வழியாகும் என்பது சிங்கள அரசியல்வாதிகளுக்கு தெரியாமல் இருப்பது புதிராகவே உள்ளது. அல்லது அவர்கள் தெரிந்தும், ஈழத்துக்கு ஒத்துழைப்பு வழங்குகிறார்கள் என்றே கருத வேண்டியுள்ளது.

**தமிழில்- கஜனி**

அரசியல் தீர்வைக் காண்பதாக, இருட்டில் தேடும் முயற்சிகள் கைவிடப்பட வேண்டும். அரசாங்கத்துக்கும் மக்களுக்கும் எதிராக சட்டவிரோதமாக ஆயுதமேந்தியுள்ள - விசர்பிடித்த நாய்களுக்கு ஒப்பான - பயங்கரவாதிகளையும் அவர்களது பயங்கரவாதச் செயல்களையும் வேரோடு அழிக்கவேண்டும். விதைப்பதற்கு வயலைத் தயார் செய்வது போல தீர்வுக்கான பின்னணியை அப்போதுதான் உருவாக்க முடியும். அதைச் செய்யாமல் விடுத்து, அரசியல் தீர்வு காண்பதற்காக ஒரு புறத்தில் பயங்கரவாதத்தை எதிர்த்து இராணுவ நடவடிக்கைகளை மேற்கொள்வதும் மறுபுறத்தில் தீர்வு காணும் முயற்சிகளிலும் ஈடுபடுவதுமானது பிரச்சினைக்கு தீர்வு காணாது இழுத்தடிப்பதாய் அமையுமே தவிர தீர்வுக்கு வழியாக அமையாது. இவ்வாறு பிரச்சினை இழுத்தடிக்கப்படுவது வர்த்தகர்களுக்கு நல்ல வருமானத்தை ஈட்டிக் கொடுக்கும். போர்த் தளபாடங்களை விற்பனை செய்யும் வர்த்தகர்களுக்கு இது ஒரு சிறந்த பின்னணியாக அமையும். எனவே தான் பாரதூரமான - துன்பியல் நிறைந்த - இவ்வேளையில் எமது நாட்டு அரசியல்வாதிகளும் அவர்களுக்கு ஆலோசனை வழங்குபவர்களும் அவர்களின் உதவியாளர்களும் அனைத்தையும் ஒருபுறம் ஒதுக்கித் தள்ளிவைத்துவிட்டு எமது நாட்டின் எதிர்காலத்தைக் கருத்திற் கொண்டு முடிவுகளை மேற்கொள்ள வேண்டும். அதற்கான அறிவு அரசியல்வாதிகளிடம் இல்லாவிடின் தேசப்பிரேமிகள் தெரிவிக்கும் கருத்துக்களை மனதிற் கொண்டு - அரசியல் தீர்வைக் காணும் முயற்சிகளை ஒதுக்கி வைத்துவிட்டு - பயங்கரவாதத்தை பூண்டோடு அழிக்கும் முயற்சிகளில் முதலில் இறங்க வேண்டும். தமது வாழ்நாள் முழுவதும் அதிகாரத்தில் இருப்பது மற்றும் சௌகரியங்களை அனுபவிப்பது ஆகியவற்றைக்கைவிட்டு உதாரண புருஷர்களாகச் சிந்தித்துச் செயலாற்ற வேண்டும். உண்மையில் தாய்நாட்டினதும் இனத்தினதும் எதிர்காலம் எவ்வாறு அமைய வேண்டும் என்ற சிந்தனையுடன் செயலாற்ற வேண்டும். அவ்வாறு சிந்திக்காது தேர்தல், அரசியல் அதிகாரம், அதனூடாகக் கிடைக்கும் சௌகரியங்கள் வசதிகளைத் தேடும் வரை - நாட்டையும் இனத்தையும் பற்றிக் கவலை கொள்ளாத வரை - எந்தவொரு பிரச்சினைக்கும் தீர்வினைக் காணமுடியாது.

முழு நாடும் முழு சிங்கள இனமும் இறுதியில் அராஜக நிலைக்குத் தள்ளப்படும். அவ்வேளையில் கடந்த காலங்களில் - பல சந்தர்ப்பங்களில் நிகழ்ந்தது போல - ஆக்கிரமிப்பாளர்கள் நாட்டின் அதிகாரத்தைக் கைப்பற்றி நாட்டைச் சூறையாடிவிடுவர். அவ்வாறான நிலைக்கு நாடும் இனமும் தள்ளப்படாமல் தடுப்பது இன்றுள்ள அனைத்து அரசியல் வாதிகளினதும் பொறுப்பாகும்.

மேற்கு நாடுகளின் ஆலோசனைகளை மனதிற் கொண்டு செயற்படும்வரை எமது அரசியல்வாதிகளின் பேதமை அகலாது. மேற்கு நாட்டவர்களின்நரிமூளைக்கு இணங்கியே இதுவரை அரசியல் தீர்வைத் தேடித் தேடி எமது அரசியல்வாதிகள் இருட்டில் அலைந்தார்கள். இந்த நரி மூளைகளை நிராகரிக்கும் காலம் இன்று உதயமாகியுள்ளது.

★

---

### குருநகரிலுள்ள

# கடலக இயந்திரப் பொறியியல் கல்லூரியை ரூ.3 கோடி செலவில் திருத்த நடவடிக்கை

யாழ்ப்பாணம்,ஜூலை27

கடந்த கால வன்செயல்களினால் முற்றாகச் சேதமடைந்த பிராந்திய கடற்றொழில் மற்றும் கடலக இயந்திரப் பொறியியற் கல்லூரியை மீள அமைப்பதற்கு மூன்று கோடி ரூபா தேவை என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

வன்செயல்களினால் இந்தக் கல்லூரிக் கட்டடம் முற்றாகச் சேதமடைந்துள்ளதுடன் உபகரணங்கள் மற்றும் உடைமைகளும் அழிந்துள்ளன.

இந்தக் கல்லூரி கடந்த ஒக்ரோபர் மாதத்திலிருந்து யாழ்ப்பாணத்தில் இயங்க ஆரம்பித்ததும் அழிந்து போன இந்தக் கட்டடத்தை மீளப் புனரமைக்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டன.

இந்தக் கட்டடப் புனரமைப்புத் தொடர்பான திட்ட மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டு கடற்றொழில் அமைச்சுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக கல்லூரி அதிபர் தெரிவித்தார்.

இந்தக் கல்லூரி தற்பொழுது குருநகரிலுள்ள கட்டடமொன்றில் தற்காலிகமாக இயங்கிவருகிறது.

1999 ஒக்ரோபரில் மீள ஆரம்பிக்கப்பட்ட இந்தக் கல்லூரியினால் யாழ். குடாவிலுள்ள ஏழு கடற்றொழிலாளர் சங்கங்களைச் சேர்ந்த 150 அங்கத்தவர்களுக்கு மீன்பிடி தொடர்பான பயிற்சிகள் வழங்கப்பட்டதாகவும் கல்லூரி அதிபர் தெரிவித்தார். (இ-5)

# தேசிய இளைஞர் சேவை மன்ற தையல் பயிற்சிக் கண்காட்சி

யாழ்ப்பாணம்,ஜூலை27

தேசிய இளைஞர் சேவை மன்றத்தினால் நடத்தப்பட்டு வரும் தையல்பயிற்சி நிலையங்களில் பயிற்சியை முடித்துக் கொண்டவர்களின் கண்காட்சிகள் நடைபெற்று வருவதாக மன்றத்தின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

உடுவில், தெல்லிப்பழை, நல்லூர், பருத்தித்துறை, சங்கானை, சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவுகளில் கடந்த ஆறு மாத காலமாக இந்தப் பயிற்சி வகுப்புக்கள் நடைபெற்று வந்தன.

இந்த பயிற்சி வகுப்புகள் பூர்த்தியானதை அடுத்து இன்று காலை 10 மணிக்கு பிரதேச செயலர் பிரிவிலும் -

நாளை மறுதினம் சனிக்கிழமை பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவிலும-தையல் கண்காட்சி நடைபெறவுள்ளது.

ஏனைய இடங்களுக்கான கண்காட்சி இந்த வார இறுதிக்குள் நடத்தப்படும் என்றும் மன்ற அதிகாரி கூறினார். (இ-5)

### கோப்பாயில் விசர் நாய்கள் தொல்லை

யாழ்ப்பாணம்,ஜூலை27

கோப்பாய்ப் பகுதியில் விசர் நாய்க் கடித் தொல்லை அதிகரித்து வருகிறது.

கோப்பாய் மத்தியில் கடந்த ஒரு வாரத்தில் மாத்திரம் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஐவர் உட்பட ஏழு பேர் விசர் நாய்க்கடிக்கு உள்ளாகி இருக்கின்றனர். (இ-15)

### மேலும் 12 ஈழ அகதிகள்

கொழும்பு,ஜூலை27

இலங்கையில் இருந்து மேலும் 12 தமிழ் அகதிகள் நேற்று முன்தினம் அதிகாலை நேரடியாக தனுஷ்கோடியை வந்தடைந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது.

இலுப்பைக்கடவையில் இருந்து திங்கள் இரவு புறப்பட்ட இவர்கள் படகோட்டிகளினால் தனுஷ்கோடியில கொண்டுவந்து விடப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (இ-9)

### உள்ளூராட்சிச் சபைத் தேர்தல்களில்

# விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறை நீக்கப்படவேண்டும் என குழு சிபார்சு

கொழும்பு,ஜூலை27

உள்ளூராட்சிச் சபைகளுக்கான தேர்தல்கள் பிரதேச மட்டப் பிரதிநிதிகளைத் தெரிவு செய்யும் வகையில் நடத்தப்பட வேண்டும். தற்சமயம் அமுலில் உள்ள விகிதாசார பிரதிநிதித்துவ முறை நீக்கப்பட வேண்டும்.

உள்ளூராட்சி சபைகளை மறுசீரமைப்பது தொடர்பாக ஆராய்வதற்கு நியமிக்கப்பட்ட குழு இந்தப் பரிந்துரையை வழங்கியுள்ளது.

உள்ளூராட்சி மாகாண சபைகள் அமைச்சர் அலவி மௌலானா தலைமையில் அமைக்கப்பட்ட இந்தக் குழுவில் மூன்று அமைச்சர்கள் இடம் பெற்றிருந்தனர்.

பல்வேறு அமைப்புக்கள், பல்துறை சார்ந்தவர்களுடன் கலந்துரையாடி இந்தக் குழு அறிக்கை ஒன்றைத் தயாரித்து அரசுக்குச் சமர்ப்பித்துள்ளது.

விகிதாசார முறைப் பிரதிநிதித்துவத்துக்குப்பதிலாக பிரதேச மட்டத்தில் பிரதிநிதிகளைத் தெரிவு செய்ய வேண்டும் என்றும் -

அரசியல் பேதம் இன்றி வேட்பாளர்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும் என்றும் -

நகரசபைகளின் சட்டங்களை மறுசீரமைத்து நகரசபைத் தலைவர், உப-தலைவர், பிரதி நகரபிதா ஆகியோரை நியமிப்பதில் மாற்றங்கள் செய்யப்படவேண்டும் என்றும் - குழு பரிந்துரை செய்துள்ளது. (இ-3)

# சிப்பாய்கள் தொடர்ந்து விளக்கமறியலில்

நெல்லியடி,ஜூலை27

பாடசாலை மாணவி ஒருவர் சிப்பாய்களினால் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டதாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பான அடையாள அணிவகுப்பு கடந்த திங்கள் காலை பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றில் பதில் நீதிவான் பொ.குமாரசாமி முன்னிலையில் நடைபெற்றது.

மாலுசந்தி இராணுவ முகாமைச் சேர்ந்த பல சிப்பாய்கள் நீதிமன்றில் அடையாள அணி வகுப்பில் கலந்து கொண்ட போதிலும், சம்பந்தப்பட்ட சாட்சிகள் குறித்த சிப்பாய்களை அடையாளம் காட்டத் தவறியிருந்தனர்.

குறித்த இரு சிப்பாய்களையும் ஒகஸ்ட் 7ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு பதில் நீதிவான் உத்தரவிட்டார். (இ-109)

## பல்கலை அனுமதிக்கு தகைமை வழங்கும்

# பொது நுண்அறிவுப் பரீட்சையில் சித்தி பெற தேவையான புள்ளி தீர்மானிக்கப்படவில்லை

### மாணவர் பெறுபேறுகளைக் கருத்தில் கொண்டே முடிவாம்

ஜி.சீ.ஈ உயர்தரப் பரீட்சையின் பின்னர் பல்கலைக்கழக அனுமதியைத் தீர்மானிக்கும் பொதுச் சாதாரண நுண்அறிவுப்பரீட்சைக் குரிய குறைந்தபட்ச புள்ளி இன்னும் தீர்மானிக்கப்படவில்லை. இப்பரீட்சையில் மாணவர்கள் காட்டும் ஆர்வத்தையும் முக்கியத்துவத்தையும் கருத்தில் கொண்டே அந்தப் புள்ளிகள் தீர்மானிக்கப்படும் என்று பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் ஏ.எம்.ஆர்.பி.அமரக்கோன் தெரிவித்தார். பெலவத்தை, பத்தரமுல்லையில் அமைந்துள்ள பரீட்சைத் திணைக்களப் பணிமனையில் கடந்த திங்கள் மாலை நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் பேசும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இவ்விடயம் குறித்துஅவாமேலும் தெரிவிக்கையில் கூறியதாவது:-

புதிய கல்வித்திட்டத்தின்கீழ் அறிமுகப்படுத்தப்பட்ட - 3 பாடங்களைக் கொண்ட - ஜி.சீ.ஈ உயர்தரப் பரீட்சை முதன்முறையாக இம்மாதம் 31ஆம் திகதி ஆரம்பமாகிறது. இப் பரீட்சைக்கு 2லட்சத்து 40 ஆயிரம் பரீட்சார்த்திகள் தோற்றுகின்றனர்.

இப்பரீட்சையின் இறுதியில் ஒகஸ்ட் மாதம் 23ஆம் திகதி உயர்தரப் பரீட்சைக்கு தோற்றும் சகல பிரிவினருக்கும் பொதுவானதாக பல்கலைக்கழக அனுமதிக்குரிய - தகைமை பெறுதலை தீர்மானிக்கும் பொதுச்சாதாரண நுண் அறிவுப் பரீட்சை நடத்தப்படுகின்றது.

ஜி.சீ.ஈ உயர்தரப்பரீட்சையில் மாணவர்கள் பெறும் புள்ளிகளுக்கும் இந்தப்பரீட்சையில் பெறும் புள்ளிகளுக்கும் இடையில் எந்தவிதமான இணைப்பும் இருக்காது.

எனினும் பல்கலைக்கழக அனுமதிக்குரிய தகைமை பெறும் புள்ளிகளைப் பெறும் ஒருவர் இந்த நுண் அறிவுப் பரீட்சையில் சித்தியடைந்தால்தான் பல்கலைக்கழகம் நுழையும் வாய்ப்பைப் பெறமுடிகின்றது.

என்றாலும் நுண் அறிவுப் பரீட்சையில் பல்கலைக்கழக அனுமதிக் குரிய தகைமையை தீர்மானிக்கும் புள்ளி எவ்வளவு என்பதை இன்னும் தீர்மானிக்கவில்லை.

இப்பரீட்சை ஏற்கனவே பரீட்சார்த்தமாக நடத்தப்பட்டு மாணவர்களுக்கு அதுபற்றி அறிவூட்டப்பட்ட பின்னரே நடத்தப்படுவதால் மாணவர்கள் இதில் ஆர்வத்துடன் ஈடுபடுவார்கள் என்று எதிர்பார்க்க முடிகிறது.

மாணவர்கள் காட்டும் ஆர்வத்தையும் உற்சாகத்தையும் மையமாக வைத்தே இம்முறை புள்ளிகளை தீர்மானிக்கவுள்ளோம் - என்றார். (உ-6)

# பொதுப் பரீட்சைகளுக்குப் புலிகளால் இடையூறுகள் எவையும் ஏற்பட்டதில்லை

### இம்முறையும் வராது என்கிறார் பரீட்சை ஆணையாளர்

கொழும்பு,ஜுலை27

"யுத்தம் நடைபெறும் பகுதிகளில் பொதுப்பரீட்சை நடவடிக்கைகளுக்கு இதுவரை விடுதலைப் புலிகளின் செயற்பாடுகளால் இடையூறுகள் ஏதும் ஏற்படவில்லை. இம்முறையும் அவ்வாறு எதுவும் நிகழாது என எதிர்பார்க்கிறேன்."

- பரீட்சை ஆணையாளர் நாயகம் ஏ.எம்.ஆர்.பி.அமரக்கோன் இவ்வாறு கூறியிருக்கிறார்.

பத்தரமுல்லை, பெலவத்தையில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள பரீட்சைத் திணைக்கள அலுவலகத்தில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் பேசியபோதே அவர் இவ்வாறு நம்பிக்கை தெரிவித்தார்.

இம்மாதம் 31ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள ஜி.சீ.ஈ.உயர்தரப் பரீட்சை வடக்கு-கிழக்கு உட்பட நாட்டின் எல்லாப் பகுதிகளிலும் திட்டமிட்டபடி நடைபெறும் என்றும் -குறிப்பிட்ட அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கடந்த பல வருடங்களாக வடக்கில் யுத்தம் நடைபெற்று வந்தாலும் பரீட்சைகள் திட்டமிட்டபடி நடத்தப்பட்டுவந்துள்ளன.

விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகள் தொடரும் பகுதிகளில் கூட இப்பரீட்சைகள் நடைபெறுகின்றன.

இதற்குக் காரணம் புலிகள் இயக்கம் இதுவரையில் பரீட்சைகளை குழப்பும் எந்த நடவடிக்கைகளிலும் ஈடுபட்டதில்லை. அதன் ஒத்துழைப்பு இருந்து வருகின்றது. அதனால் எந்தக் காரணம் கொண்டும் அப்பகுதிகளில் பரீட்சைகளை பின்போடும் நிலை ஏற்படவில்லை.

இம்முறையும் அவ்வாறான எந்த விதமான இடையூறும் ஏற்படாது என்று உறுதியாக நம்புகிறோம். அதனால் இப்பரீட்சை வடபகுதியிலும் திட்டமிட்டபடி நடைபெறும்.

#### அனுமதி அட்டைகள்

இப்பரீட்சைக்கு தோற்றும் சகல மாணவர்களுக்கும் அதற்குரிய அனுமதி அட்டைகள் ஏற்கனவே அனுப்பப்பட்டுவிட்டன.

இதுவரையில் அது கிடைக்கப் பெறாதவர்கள் இருப்பின் பரீட்சைக்கு விண்ணப்பித்ததற்கான தகுந்த ஆதாரங்களுடன் பத்தரமுல்லை, பெலவத்தையில் அமைந்துள்ள பரீட்சைத் திணைக்களத்துக்கு நேரடியாக வந்து அவற்றைப் பெற்றுக் கொள்ள முடியும்.

அதேநேரம் இப்பரீட்சைக்கு விண்ணப்பித்து யுத்தம் அல்லது வேறு காரணங்களால் இடம் பெயர்ந்த மாணவர்கள் அவர்கள் தங்கியிருக்கும் இடங்களில் பரீட்சைக்குத் தோற்றுவதாயின் பரீட்சைக்கு விண்ணப்பித்ததை நிரூபிப்பதற்கான ஆதாரங்களோடு வருவதன் மூலமும் அனுமதி அட்டைகளைப் பெற்றுக் கொள்ள முடியும்.

சில சமயங்களில் பரீட்சை மோசடிகளில் ஈடுபட விருப்போர் இறுதி நேரம்வரை காத்திருந்து, இறுதியில்தான் அனுமதி அட்டை கிடைக்கவில்லை என்று கூறிக் கொண்டு வருகின்றனர்.

அதனால் இவ்வாறான மோசடிகளைத் தடுப்பதற்கே அனுமதி அட்டை கிடைக்காத - இடம் பெயர்ந்த - மாணவர்கள் இருப்பின் அதனை நிரூபிப்பதற்குத் தேவையான ஆவணங்களை சமர்ப்பிக்க் வேண்டும் என்று எதிர்பார்க்கிறோம் - என்றார். (உ-6)

# மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் பணிமனையைச் செயற்பட வைக்க முயற்சி

யாழ்ப்பாணம்,ஜுலை27

நிர்வாகத்தை பரவலாக்கி கல்வி அலுவலகங்களின் நிர்வாகம், மேற்பார்வை, கண்காணிப்பு ஆகியவற்றை மேம்படுத்துவதற்காக வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை அமைச்சு மீண்டும் மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் அலுவலகங்களை செயல்பட வைக்கவிருக்கின்றது.

வடக்கு - கிழக்கு மாகாண ஆளுநர் அசோகா ஜெயவர்த்தனாவின் பணிப்பின் பேரில் யாழ்ப்பாணம், வவுனியா, மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய மாவட்டங்களிலும் மேற்படி அலுவலகங்கள் செயற்படும்.

யாழ். மேலதிக மாகாண கல்வி அலுவலகத்தின் கீழ் யாழ்ப்பாணம், வலிகாமம், தீவுப்பகுதி, வடமராட்சி, தென்மராட்சி ஆகிய 5 வலயக்கல்வி அலுவலகங்களும் இயங்கும்.

வவுனியா அலுவலகத்தின் கீழ் கிளிநொச்சி, முல்லைத்தீவு, துணுக்காய், வவுனியா கிழக்கு - தெற்கு, மன்னார், மடு ஆகிய 7 வலயக் கல்வி அலுவலகங்களும் கொண்டுவரப்பட்டுள்ளன. மட்டக்களப்பு, பட்டிருப்பு, கல்குடா ஆகிய 3 வலயக் கல்வி அலுவலகங்களும் மட்டக்களப்பு மேலதிக மாகாணக் கல்வி அலுவலகத்தின் கீழ் இயங்கும்.

அம்பாறை, மகா ஓயா, தெகியத்தகண்டிய, கல்முனை, சம்மாந்துறை, அக்கரைப்பற்று ஆகிய 6 வலயக் கல்வி அலுவலகங்களும் அம்பாறை மேலதிக மாகாண கல்வி அலுவலகத்தினால் மேற்பார்வை செய்யப்படும்.

தற்போதுள்ள மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளர் அலுவலகங்களுக்கு மேலதிக அதிகாரங்களும் வசதிகளும் வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (உ-6)

### மாகாணக் கல்வி அமைச்சின் கீழ்

# கல்விசாரா ஊழியர்கள் 2000 பேருக்கு நியமனம்

வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வி, பண்பாட்டலுவல்கள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சின் கீழ் கல்விசாரா ஊழியர் ஆளணியில் உள்ள சுமார் இரண்டாயிரம் வெற்றிடங்களை நிரப்புவதற்குத் தேவையான நடவடிக்கைகள் மாகாண ஆளுநரின் பணிப்பின் மீது மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிகின்றது.

மாகாணக் கல்வி, அமைச்சு தனக்குரிய கல்வி சாரா ஊழியர்களின் ஆளணியைத் தயாரித்துப் பொது நிர்வாக அமைச்சின் கீழ் வரும் ஆளணிக் குழுவுக்கு அனுப்பியது.

மாகாண அமைச்சு தயாரித்து அனுப்பிய ஆளணி பற்றிய சிபார்சுகளில் 90 சதவீதமானவற்றை மத்திய ஆளணிக் குழு ஏற்றுக் கொண்டதாகத் தற்போது தெரிவிக்கப்படுகிறது.

மாகாணக் கல்வி அமைச்சுக்குத் தேவையான கல்விசாரா ஊழியர்களின் ஆளணி சுமார் 4,500 என்றும், தற்போது சுமார் 2,000 கல்வி சாரா ஊழியர்களே பணிபுரிவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

ஆளணியில் உள்ள சுமார் 2,000 வெற்றிடங்களையும் விண்ணப்பங்களைக்கோரி, நேர்முகப் பரீட்சை வைத்து நிரப்பும்படி மாகாண ஆளுநர் சம்பந்தப்பட்ட அதிகாரிகளைப் பணித்திருக்கிறார் என்று மாகாண சபை வட்டாரங்கள் தெரிவித்தன. (உ-6)

### பதில் அதிபர்களின் விவரங்கள் கோரல்

யாழ்ப்பாணம்,ஜுலை27

பாடசாலைகளில் தற்காலிகமாக கடமையாற்றிவரும் பதில் அதிபர்களின் முழுமையான விவரங்களையும் அனுப்பிவைக்கும்படி வடக்கு - கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் கே.பரமேஸ்வரன் வடக்கு - கிழக்கில் உள்ள வலயக் கல்விப் பணிப்பாளர்களைக் கேட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

பாடசாலைகளில் பதில் அதிபர்களாக கடமையாற்றுவோருக்கு நிரந்தர நியமனங்கள் வழங்கப்படவுள்ளதாக கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

இது தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொள்ளும் பொருட்டே அதிபர்களின் முழு விவரங்களும் கோரப்பட்டுள்ளன. (க-6)

# வெளிமாவட்டங்களுக்குச் செல்ல பயண அனுமதி பெற்றோர் விவரம்

யாழ்.குடாநாட்டில் இருந்து வெளி மாவட்டங்களுக்கு பயணம் செய்ய பாதுகாப்பு அனுமதி வழங்கப்பட்டவர்களின் (இம்மாதம் 26ஆம் திகதி வரை) பதிவு இலக்கங்கள் பிரதேச செயலர் பிரிவு ரீதியாக வருமாறு:-

#### சங்கானை

| | |
|---|---|
| 513/143861/A | 513/143861/B |
| 513/143861/C | 513/143944/A |
| 513/143944/B | 513/143951/A |
| 513/143951/B | 513/143951/C |
| 513/143951/D | 513/143951/E |
| 513/143994/A | 513/143994/B |
| 513/143994/C | 513/143994/D |
| 513/143994/E | 513/143994/F |
| 513/150425/A | 513/150425/B |
| 513/150425/C | 513/150425/D |
| 513/150490/A | 513/150490/B |
| 513/150491/A | 513/150491/B |
| 513/153221/A | |

#### யாழ்ப்பாணம்

| | |
|---|---|
| 512/137034/A | 512/137034/B |
| 512/137034/C | 512/137034/D |
| 512/137034/E | 512/144410/A |
| 512/144410/B | 512/144410/C |
| 512/144464/A | 512/144464/B |
| 512/147772/A | 512/147772/B |
| 512/152580/A | 512/152580/B |
| 512/152580/C | 512/152695/A |
| 512/152771/A | 512/152787/A |
| 512/152804/A | 512/152811/A |
| 512/152851/A | 512/152851/B |
| 512/152851/C | 512/152852/A |
| 512/152852/B | 512/152852/C |
| 512/152864/A | 512/152864/B |
| 512/152864/C | 512/152864/D |
| 512/152864/E | 512/152879/A |
| 512/152886/A | 512/152886/B |
| 512/152886/C | 512/152936/A |
| 512/152936/B | 512/152949/A |
| 512/152949/B | 512/153002/A |

#### கோப்பாய்

| | |
|---|---|
| 512/144297/A | 512/144297/B |
| 512/144297/C | |

#### நல்லூர்

| | |
|---|---|
| 512/143127/A | 512/143127/B |
| 512/143127/C | 512/143127/D |
| 512/143127/E | 512/143127/F |
| 512/144293/A | 512/144293/B |
| 512/144293/C | 512/144329/A |
| 512/144329/B | 512/144334/A |
| 512/144334/B | 512/144351/A |
| 512/144351/B | 512/144351/C |
| 512/144351/D | 512/144355/A |
| 512/144355/B | 512/144462/A |
| 512/144462/B | 512/144462/C |
| 512/144462/D | 512/144462/E |
| 512/144507/A | 512/144507/B |
| 512/144507/C | 512/144507/D |
| 512/147802/A | 512/148086/A |
| 512/148086/B | 512/148086/C |
| 512/152574/A | 512/152581/A |
| 512/152581/B | 512/152581/C |
| 512/152581/D | 512/152584/A |
| 512/152584/B | 512/152584/C |
| 512/152584/D | 512/152640/A |
| 512/152640/B | 512/152640/C |
| 512/152640/D | 512/152640/E |
| 512/152650/A | 512/152650/B |
| 512/152650/C | 512/152668/A |
| 512/152679/A | 512/152679/B |
| 512/152679/C | 512/152689/A |
| 512/152689/B | 512/152689/C |
| 512/152689/D | 512/152689/E |
| 512/152700/A | 512/152709/A |
| 512/152709/B | 512/152709/C |
| 512/152749/A | 512/152749/B |
| 512/152753/A | 512/152834/A |
| 512/152882/A | 512/152882/B |
| 512/152904/A | 512/152920/A |
| 512/152920/B | 512/152944/A |
| 512/152944/B | 512/152968/A |
| 512/152977/A | 512/152977/B |
| 512/152977/C | 512/152977/D |
| 512/152988/A | 512/152988/B |
| 512/152988/C | 512/153001/A |
| 512/153001/B | 512/153001/C |
| 512/153001/D | 512/153014/A |
| 513/150428/A | 513/150428/B |
| 513/150428/C | 513/153502/A |
| 513/153502/B | |

#### சண்டிலிப்பாய்

| | |
|---|---|
| 513/142093/A | 513/142093/B |
| 513/142093/C | 513/142093/D |
| 513/142093/E | 513/142093/F |
| 513/150384/A | 513/150384/B |
| 513/150384/C | 513/150384/D |
| 513/150384/E | 513/150387/A |
| 513/150442/A | |

#### தெல்லிப்பழை

| | |
|---|---|
| 513/153492/A | 513/153492/B |

#### உடுவில்

| | |
|---|---|
| 513/141681/A | 513/141682/A |
| 513/143751/A | 513/143869/A |
| 513/143869/B | 513/146414/A |
| 513/150393/A | 513/150393/B |
| 513/153480/A | |

# போலிப் பொலிஸ் அ.அட்டையை காட்டிப் பணத்தைப் பறிப்பதற்கு முயற்சி

### புறக்கோட்டையில் ஒருவர் கைது

போலிப் பொலிஸ் அடையாள அட்டையைக் காண்பித்துப் பொது மக்களிடம் பணம் பறித்து வரும் கும்பலொன்றைச் சேர்ந்த ஒருவர் நேற்று முன்தினம் புறக்கோட்டைப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

புறக்கோட்டை மத்திய பஸ் நிலையத்தில் காலை 1.30 மணியளவில் இரண்டு பேர் பயணி ஒருவரை பயமுறுத்திப் பணத்தைப் பறிமுதல செய்து கொண்டிருந்த வேளையில் சிவில் உடையில் கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த புறக்கோட்டைப் பொலிஸ் நிலையக் குற்றத்தடுப்புப் பிரிவினர் அவர்களில் ஒருவரை மடக்கிப் பிடித்தனர். மற்றுமொருவர் தப்பியோடிவிட்டார். தப்பியோடியவர் சிங்களத் திரைப்படங்கள் மற்றும் தொலைக்காட்சி நாடகங்களில் பொலிஸ் பாத்திரம் ஏற்று நடிப்பவர் என்று கூறப்படுகின்றது.

புறக்கோட்டைப் பொலிஸ் நிலையத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற பத்திரிகையாளர் சந்திப்பில் பொலிஸ் பொதுஜனத் தொடர்புத் துறைப் பணிப்பாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ரியன்ஸி பெரேரா இத்தகவலை வெளியிட்டார்.

பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்படும் அடையாள அட்டைகளின் முன் உறைகளை உபயோகித்து உள்ளே தமது தேசிய அடையாள அட்டை மற்றும் பத்திரிகைகளில் வெளியான சில பொலிஸ் பிரிவுகளின் பெயர்கள், பொலிஸ் இலட்சினைகள் ஆகியவற்றை ஒட்டி பொது மக்களைப் பயமுறுத்தி இவர்கள் பணம் பறித்து வந்துள்ளனர்.

கைது செய்யப்பட்டவர் அம்பாறை மாவட்டத்தைச் சேர்ந்தவர். தப்பிச் சென்றவர் மாத்தளையைப் பிறப்பிடமாகவும், தெஹிவளை ஹத் போதிய வீதியை வசிப்பிடமாகவும் கொண்டவர் என்று தெரிவிக்கப்பட்டது.

இந்த நபரைக் கைது செய்யும் நடவடிக்கையில் பொலிஸார் ஈடுபட்டுள்ளனர்.

இதே நேரம், வீடுகளுக்கு திடீர் சோதனை நடவடிக்கைக்கு வரும் பொலிஸார் என்றாலும் சி.ஐ.டியினர் என்றாலும் சிவில் உடையில் அவர்கள் வந்தால், அவர்கள் தம்மை உறுதிப்படுத்தும் அடையாள அட்டையைக் காண்பிப்பதுடன் அந்த பிரதேசத்திற்குரிய பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிக்கும் தெரியப்படுத்த வேண்டும். இல்லையேல் பொதுமக்கள் சிவில் உடையில் இருப்பவர் குறித்து அருகில் இருக்கும் பொலிஸ் நிலையங்களுடன் தொடர்பு கொண்டு வந்திருப்பவர்களின் நடவடிக்கையை உறுதிப்படுத்த முடியும் எனவும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ரியன்ஸி பெரேரா கூறினார்.

இந்தப் போலிப் பொலிஸ் நடவடிக்கைகளினால் பெரும்பாலும் தமிழர்களும் பிறமாவட்டத்தைச் சேர்ந்தவர்களுமே பாதிக்கப்பட்டிருப்பதாகப் புறக்கோட்டை குற்றத்தடுப்புப் பிரிவின் பொறுப்பதிகாரி பொலிஸ் இன்ஸ்பெக்டர் ஷாந்த விக்ரமசிங்க தெரிவித்தார்.

கொழும்பில் மக்கள் பெருமளவில் செறிந்து வாழும் பிரதேசம் புறக்கோட்டையாகும். இந்தப் போலி நடவடிக்கைகளில் எவரேனும் பாதிக்கப்பட்டிருந்தால் உடனடியாகத் தமக்குத் தகவல் தரும்படி புறக்கோட்டைப் பொலிஸ் பொறுப்பதிகாரி பிரதம இன்ஸ்பெக்டர் ஹேறாநாம கருணாரட்ன தெரிவித்தார். (உ)

### ஒருவர் உயிரிழப்பு

கடந்த பெப்ரவரியில் மட்டுவில் பகுதியில் இடம்பெற்ற மோதலில் காயமடைந்து சிகிச்சை பெற்று வந்த எல்லைப்படை வீரர் ஒருவர் கடந்த திங்கள் உயிரிழந்ததாக புலிகளின் குரல் வானொலி அறிவித்தது.

கறுப்பையா அல்லது சோமு (கிளிநொச்சி) என்பவரே உயிரிழந்தவர் ஆவார். (இ-9)

# மீன்பிடியியல் கற்கைநெறிக்கு தெரிவு செய்யப்பட்ட 50 பேர் விவரம்

யாழ். பல்கலைக்கழகத்தின் 2000/2001 கல்வியாண்டுக்கான மீன்பிடியியல் கற்கைநெறிக்கு 50 பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த 14ஆம் திகதி நடைபெற்ற நேர்முகப்பரீட்சையில் பங்கு கொண்டவர்களில் மேற்படி கற்கை நெறிக்குத் தெரிவு செய்யப்பட்டவர்கள் அனைவரும் அடுத்தமாதம் 7ஆம் திகதிக்கு முன்பு பதிவுக் கட்டணத்துடன் நேரில் வந்து தமது பதிவுகளை மேற்கொள்ளுமாறு யாழ். பல்கலைக்கழக கடல்வள அபிவிருத்தி நிலையத்தின் இணைப்பாளர் கே.சித்திரவடிவேல் தெரிவித்துள்ளார்.

குறிப்பிட்ட திகதிக்கு முன்னர் பதிவுகளை மேற்கொள்ளாதவர்களுக்குப் பதிலாக நேர்முகப்பரீட்சையில் கலந்து கொண்ட மற்றையவர்களுக்கு அனுமதி வழங்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

கற்கைநெறிக்குத் தெரிவு செய்யப்பட்ட 50 பேரின் பெயர்கள் வருமாறு:-

எம்.கிம்புறோன், எம்.காண்டீபன், எஸ்.பிரதீபா, வி.சுதர்சினி லிதியா, எஸ்.சுகந்தன், என்.ஜெகானந்தன், எஸ்.விநாயகமூர்த்தி, ஜே.மேரி றேஞ்சலா, பி.விஜயகுமார், எஸ்.சோமசந்திரன்.

ரி.விக்னேஸ்வரன், எஸ்.ஏஞ்சலோ, ஏ.பிரேமதாஸ், வி.பகீரதன், ரி.பார்த்திபன், ஏ.வில்சன் ஜெரின், ஏ.சுரேரஞ்சன், கே.ஒபகே, எஸ்.அல்பன் வசந்தரூபன், பி.ஸ்ரீஸ்கந்தராஜா.

ஏ.ஜெகன், ரி.விவேகானந்தன், கே.அருட்கரன், கே.ருஷியந்தன், கே.சச்சிதானந்தன், ஜே.ரஞ்சித், ஜே.ஈ.அலெக்ஸ் வசிங்ரன், எஸ்.மதனகௌரி, கே.பார்த்திபன், ஏ.ராஜபாலசிங்கம்.

வி.ரமணசுதன், எஸ்.சுதாகரன், என்.அரியரஞ்சினி, எஸ்.அமிர்தநிரஞ்சன், எஸ்.தர்சினி, ஜே.ஜெகதீஸ்வரி, ரி.சுகன்யா, ஜே.வல்வின், டி.எக்ஸ்.ஸ்வினாஸ், வி.ஸ்ரீதயாபரன்.

பி.கமலகண்ணன், ஏ.லூர்துநாயகி, என்.பாலகுமார், எஸ்.தர்சன், எஸ்.ஜனதீபன், ஏ.ஜேம்ஸ் மைசன், ரி.கிருஸ்ணரூபன், என்.மதியழகன், கே.ஜெகன், பி.திருவாரூரன்.

இவர்களுக்கான கற்கை நெறிகள் அடுத்தமாதம் 16ஆம் திகதி புதன்கிழமை காலை 10 மணிக்கு ஆரம்பமாகவுள்ளன. (இ-10)


## கண்ணீர் அஞ்சலி

எமது சக ஊழியர்களான

கு. ஜதீர்த்தனன்,

கு. உஜ்ஜயனி

ஆகியோரின் பாசமிகு தந்தையாரான

அமரர்

அம்பலவாணர் குலசேகரம்

அவர்கள்

வன்னியில் சிவபதமடைந்த செய்தியை அறிந்து மிகவும் வேதனையடைகின்றோம்.

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கின்ற குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடையவும் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

- நண்பர்கள்

*போதனா வைத்தியசாலை,*
யாழ்ப்பாணம். (76736)



## 3 ஆம் ஆண்டு நினைவலைகள்

மலர்வு 19 - 11 - 1963



உதிர்வு 30 - 07 - 1997

செல்வி மைதிலி கந்தசாமி

திதி: 27-07-2000

பாசம் நிறைந்த மகளே!
நேசம் நிறைந்த சகோதரியே!
ஆண்டு மூன்று சென்றும்
ஆறவில்லை எம் துயரம்.

நித்தம் உன்முகம் காணத் தவிக்கும்:
அம்மா, அக்காமார், தம்பிமார்.

*க. முகுந்தன்*
(தம்பி)
*மாவத்தை, அளவெட்டி வடக்கு.* (76652)



## அமரருக்கு அஞ்சலி



திருமதி சிவபாக்கியம் ஏரம்பமூர்த்தி

நீர்வேலியைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி சிவபாக்கியம் ஏரம்பமூர்த்தி 24 வருடகாலம் *சாரதாதேவி பெண்கள் வித்தியாலயத்தில* ஆசிரியராகவும் அதிபராகவும் திறம்படக் கடமையாற்றியவர்.

அன்னாரது ஆத்மா சாந்தியடைய நீர்வேலியில் வசிக்கும் அவரது அன்பு மாணவர்களுடன் நாமும் சேர்ந்து பிரார்த்திக்கின்றோம்.

அவருடன் கற்பித்த ஆசிரியர்கள்:
ஏ. சிவாநந்தமூர்த்தி (குடும்பம்,
ஏ. கரன் (எஞ்சினியர்) (குடும்பம்
(நியூசிலாந்து)

(C/12322)


## ஓய்வூதியர் நம்பிக்கை நிதியம்

யாழ்ப்பாணம் பிரதேச செயலர் பிரிவில் கடந்த 22 ஆம் திகதி ஓய்வுபெற்றோர் நம்பிக்கை நிதியம் ஆம்பித்து வைக்கப்பட்டது.

யாழ்.பிரதேச செயலர் எஸ்.செந்தில்நந்தனன் தலைமையில் வேம்படி மகளிர் கல்லூரியில் இடம்பெற்ற நிகழ்வில் சங்கத்தின் தலைவராக யோ.என்.போமன் தெரிவு செய்யப்பட்டார். இவருடன் ஆறு பேர் கொண்ட நிர்வாகக் குழுவும் தெரிவுசெய்யப்பட்டது. (ஐ-180)

## கொடுப்பனவு

சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் கடந்த மே மாதம நடத்தப்பட்ட இனவிருத்தி சம்பந்தமான பயிற்சி வகுப்பில் கலந்துகொண்ட சுகாதார தொண்டர்களுக்குரிய கொடுப்பனவுகள் ஓகஸ்ட் முதலாம் திகதி செவ்வாய்க்கிழமை பருத்தித்துறை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் வழங்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ-117)


**A/L 2001, 2002**

பொதுவினா

T. திருமுருகன்

சனி, ஞாயிறு 3-5 p.m

**திகழ் கல்வி நிறுவனம்**
இணுவில்

A/L 2000 கருத்தரங்கு
சனி காலை - 10 மணி
(C/12321)



*எலைற்*
*கல்வி நிறுவனம்*
192, கச்சேரி நல்லூர் வீதி

மீண்டும் அனைத்து
வகுப்புக்களும்
ஆரம்பமாகவுள்ளன.
அனைத்து மாணவர்களும்
29-07-2000
சனிக்கிழமை 2 மணிக்கு
நிறுவனத்துடன்
தொடர்பு கொள்ளவும்.
(76729) - *நிர்வாகி*


# மோட்டோரோலா உரிமையாளரை தொடர்பு கொள்ளக் கோரிக்கை

யாழ்ப்பாணம்,ஜுலை27

'மோட்டோ ரோலா' தொலைத் தொடர்பு உரிமையாளர்கள் தாம் எதிர்நோக்கும் பிரச்சினைகளை எழுத்து மூலமாக தமது உறுப்புரிமை இலக்கத்துடன் எதிர்வரும் இரண்டாம் திகதிக்கு முன்னராக சங்கச் செயலாளருக்கு அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

'மோட்டோரோலா' தொலைத் தொடர்பு உரிமையாளர் சங்கம் ஒன்று கடந்த 23 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டது.

மோட்டோரோலா உரிமையாளர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்தும் தொலைபேசிப் பாவனையாளர்களுக்கு சுமுகமான சேவை வழங்குவது தொடர்பாகவும் அன்றைய தினம் ஆராயப்பட்டது. அத்துடன் நடப்பு ஆண்டுக்கான அங்கத்தவர் தெரிவும் இடம்பெற்றது. (இ-க)

# போராடியே வேலைவாய்ப்பு பெறும் நிலையில் வேலையற்ற பட்டதாரிகள்

## சங்கம் அறிக்கை

யாழ்ப்பாணம்,ஜுலை27

போர்ச் சூழலின் மத்தியில் பட்டம் பெற்று வெளியேறியுள்ள நாம் போராடியே எமது வேலைவாய்ப்பை பெற்றுக்கொள்ளவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம்.

மேற்கண்டவாறு யாழ். மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் சங்கம் வெளியிட்டுள்ள பத்திரிகை அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

எமது பல்கலைக்கழகக் கல்வியை மிகுந்த சிரமத்தின் மத்தியில் பூர்ததிசெய்து பட்டம் பெற்று வெளியேறியுள்ளோம்.

கடந்த 2 வருடங்களுக்கு மேல் 700க்கு மேற்பட்ட பட்டதாரிகள் எந்தவித வேலைவாய்ப்பினையும் பெற்றுக்கொள்ள முடியாது தவிக்கின்றனர்.

தென்பகுதியில் வரவு செலவுத் திட்ட பிரமாணத்தின் அடிப்படையில் 8 ஆயிரம் பட்டதாரிகள் திட்டத்துக்கு அமைவாக வேலைவாய்ப்புக்கள் வழங்கப்பட்டபோதும் யாழ்.மாவட்டத்தில் 4 ஆயிரம் பட்டதாரிகள் திட்டத்துக்கு அமைவாக 285 பேருக்கு மட்டும் வேலைவாய்ப்பு வழங்கப்பட்டது. பின்னர் மிகுதியான வேலை வாய்ப்புகள் பூர்த்தி செய்யப்படவில்லை.

வடக்கு - கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாக்கத்தின் படி வடக்கு - கிழக்கில் 817 பட்டதாரிகளுக்கு ஆசிரிய நியமனங்கள் வழங்குவதாக கடந்த பெப்ரவரி மாதம் உறுதி அளிக்கப்பட்டது. அதுவும் நிறைவேற்றப்படவில்லை.

இந்தப் பிரச்சினைகள் தொடர்பாக மாகாண கல்வி அமைச்சின் செயலாளர், மாகாண ஆளுநர், யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் போன்றவர்களுக்கு தெரியப்படுத்தியபோதும் அவர்கள் இதுவரையும் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை.

யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் வி.கே.குகேந்திரனை (ஜெகன்) அண்மையில் சந்தித்து இது தொடர்பாகப் பேச்சு நடத்தினோம்; முடிவில்லை.

இந்நிலையில் நாம் அடுத்த மாதம் நாடாளுமன்றம் கலைக்கப்படுவதற்கு முன்னர் எமது பிரச்சினைகளை அரசின் கவனத்துக்கு கொண்டு வருவதற்காக பல முயற்சிகளை மேற்கொள்ளவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம்.

இப்படி அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-5)

# கோப்பாய் குடும்பங்களுக்கு ஓகஸ்ட் மாத நிவாரணம்

வலி.கிழக்கு,ஜுலை27

கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் வசிப்போருக்கான ஓகஸ்ட் மாதத்துக்கான நிவாரண விநியோகம் கோப்பாய் பிரதேச செயலகத்தினால் மேற்கொள்ளப்படவுள்ளதாக பிரதேச செயலர் கே.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

அண்மைய பதற்ற நிலை காரணமாக இப்பிரதேச செயலர் பிரிவில் இருந்து வேறு பிரதேச செயலகப் பிரிவில் நிவாரணம் பெறுபவர்கள் தமது நிரத்தரக் கிராம உத்தியோகத்தர்களைச் சந்தித்து தமது பதிவுகளை மேற்கொண்டு ஓகஸ்ட் மாதத்துக்கான தமது நிவாரணத்தினை உறுதிப்படுத்துமாறு பிரதேச செயலர் கேட்டுள்ளார்.

இதேவேளை -

கோப்பாய் பிரிவைச் சேர்ந்தோருக்கான நிவாரணம் வேறு பிரதேச செயலர்களால் வழங்கப்படமாட்டாது என்பதையும் அவர் தெரிவித்துள்ளார். (ஐ-180)

## குழுக் கூட்டம்

கோப்பாய் பிரதேச செயலர் பிரிவுக்கான ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவன வீடமைப்புக்குழுக் கூட்டம் நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு கோப்பாய் பிரதேச செயலர் கே.கேதீஸ்வரன் தலைமையில் பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெறும்,

(ஐ-180)


**A/L 2000**

மாணவர்களின் வேண்டுகோளுக்கிணங்க
அவசரமாக வெளியாகியுள்ளது!
*'விஞ்ஞானிகளும் கோட்பாடுகளும்'*
*(LOGIC - II)*
*ஒரு சில தினங்களில் இலகுவாகக் கற்க ஏற்றது.*

ஆக்கம்: எஸ். எஸ். மனோகரன்

கிடைக்குமிடங்கள்:
- BEACON – யாழ்நகர்
- ஸ்ரீகந்தவேள் கல்வி நிலையம் – இணுவில்
- உடுவில் – பள்ளிக்கூடக் காரியாலயம்

(76717)



மூன்றாம் வருட பொதுக்கலை மாணவர்களுக்கான
**கலந்துரையாடல்**

மூன்றாம் வருட பொதுக்கலை மாணவர்களுக்கான பரீட்சை தொடர்பான அவசரக் கலந்துரையாடல் நாளை (28-07-2000) வெள்ளிக்கிழமை காலை 10.00 மணியளவில் இடம்பெறவுள்ளதால் அனைத்துப் பொதுக்கலை மாணவர்களையும் தவறாது சமுகம் தரும்படி கேட்டுக் கொள்கின்றேன்.

பிரதிநிதி,
*3 ஆம் வருடம் பொதுக்கலை,*
*யாழ். பல்கலைக்கழகம்.*

(76725)

## வாசகர் திருமுகம்

## யார்க்கெடுத்துரைப்போம்?

யாழ். மாவட்டத்தில் கடந்த 10-05-2000 அன்று ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டு மூன்று மாதங்களுக்கு மேலாகிவிட்டது. உயிருக்கு உரிமைகோரி பயங்காரணமாக அரியாலை, கொழும்புத்துறை, பாசையூர், நாயன்மார்கட்டு, ஈண்டுக்குளி பகுதிகளைச் சேர்ந்த மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு இடம்பெயர்ந்துள்ளார்கள். இடம்பெயர்ந்த மக்களுக்கு இதுவரை சீரான முறையில் ஒழுங்காக நிவாரணமோ, அன்றிப் பங்கீட்டு அட்டைக்குப் பொருள்களோ எதுவும் வழங்கப்பட்டதாகத் தெரியவரவில்லை.

ஒரு சில கிளைகளில் வழங்கப்பட்டதாகத் தகவல்கள் உண்டு.

கொழும்புத்துறை கிழக்கில் இருந்து இடம்பெயர்ந்து கொக்குவில் கிழக்கில் தற்காலிக வாழ்வை மேற்கொள்ளும் நான் கொழும்புத்துறை கிழக்கில் இருந்த காலத்தில் கிளை 17இல் (புங்கன்குளம்) எமது தேவையைப் பூர்த்தி செய்துள்ளேன்.

இந்தக் கிளை நவாலி மூத்தவிநாயகர் கோவிலுக்கு அண்மையில் இயங்குகின்றது என அறிகிறோம். இதுவரை காலமும் இக்கிளையில் மண்ணெண்ணெய் வழங்கியதாக எத்தகவலும் கிடைக்கவில்லை. நவாலி சென்று எனக்குரிய நிவாரணத்தையோ, மண்ணெண்ணெயினையோ பெற்றுக் கொள்வதற்கு என் உடல்நிலை இடம்தராது. அங்கு சென்றாலும் ஏமாற்றத்துடன் திரும்பவேண்டிய நிலை. அடுத்தவிடயம் விழுந்தவனை மாடேறி மிதித்தல் போன்றது — என்போன்ற மக்களுக்கு ஏற்பட்டுள்ள நிலை. இதன் காரணமாக தற்காலிகமாக இடம்பெயர்ந்து இருக்கும் இடத்தில் உள்ள கிராம சேவகரிடம் (J/126) ஆலோசனை கேட்ட இடத்தில் நல்லூர் ப. நோ. கூ. ச. கிளை 16க்கு மாற்றக் கூடிய நிலை ஏற்பட்டது. அந்தக் கிராம சேவையாளருக்கு என் கிராம மக்கள் சார்பில் மனமார்ந்த நன்றிகள்.

ஒரே ஒரு முறைதான் நல்லூர் பல நோக்கு கூ. ச. கிளை 16 இல் எமது தேவையைப் பூர்த்தி செய்தோம். அடுத்த முறைக்கு சென்ற பொழுது தர மறுத்துவிட்டது கிளை 16. கைக்கெட்டியும் வாய்க்கெட்டாத நிலையுடன் வாழும் என்போன்ற மக்களுக்கு இதுதான் கதியோ?

வை. சுந்தரலிங்கம்

2 ஆம் ஒழுங்கை,
பொற்பதி வீதி,
கொக்குவில்.

## பயணிகள் அவலம் என்று தீரும்?

யாழ் - கொழும்புப் பயணம் தற்போது பெரும் சிக்கல் நிறைந்ததாகவும் பல ஆயிரம் ரூபா செலவைச் செய்தாலே உடன் பயணம் மேற்கொள்ளக் கூடியதாகவும் உள்ளது.

தென்மராட்சி, வளைப்பகுதிகளில் இருந்து வந்த ஆயிரக்கணக்கான மக்கள் வடமராட்சிப் பகுதியிலேயே வாழ்கிறார்கள். வடமராட்சி வாழ் இம்மக்கள் கொழும்பு செல்வதற்கு விண்ணப்பப் பத்திரம் பெறுவதும் திருப்பிக் கொடுப்பதும் பருத்தித்துறைச் சிவில் அலுவலகத்திலே ஆகும்,

இங்கே காலை 5 மணிக்குச் சென்று கியூவில் இடம்பிடித்து காலை 9.30 மணி வரை குறித்த சிவில் அதிகாரி வரும்வரை வெயிலில் காத்திருக்க வேண்டும். தினசரி சுமார் 500 பேர்வரை அவ்வாறு காத்திருக்க அதிகாரிகள் பகல் 1 மணிவரை கடமை செய்துவிட்டு மதிய உணவுக்காகச் சென்றுவிடுவார்கள். பின்பு மாலை 3 மணிவரை காத்திருக்க வேண்டும். இவ்வாறு கஷ்டப்பட்டு விண்ணப்பப் படிவம் பெற்று கிராம அலுவலரில் ஆரம்பித்து இராணுவ முகாம் வரை பலநாள் அலைந்து திரிந்து அதனைப் பூரணப்படுத்தி மீண்டும் பருத்தித்துறை சிவில் காரியாலயம் சென்று காத்துக்கிடந்து அதை ஒப்படைத்துவிட்டால் அங்கே அடித்துண்டுகிழித்துத் தருவார்கள்.

அதிலே எத்தனையாவது கப்பல் என இலக்கம் மட்டுமே இடப்பட்டுக் கொடுக்கப்படும். அக்கப்பல் எப்போது வரும் எனக் காத்திருந்து, கண்டுபிடித்து, ரிக்கற் பெறுவது என்பது சாதாரண ஒரு மனிதனால் செய்வது பெரும் சிரமம்!

11-07-2000 அன்று, விண்ணப்பம் கொடுத்த ஒருவருக்கு — அதுவும், பேராதனைப் பல்கலைக்கழகப் புதிய அனுமதியைப் பெறமுன் கூட்டியே கொழும்பு சென்று தங்க முயன்ற ஒரு மாணவருக்கு — 24 இலக்கக் கப்பல் என இலக்கம் இடப்பட்டுக் கொடுக்கப்பட்டது. ஆனால் தற்போது அடுத்துச் செல்லவுள்ளதோ 12 ஆம் இலக்க கப்பல் ஆகும். எனவே, அவர் இந்த விடயத்தை அந்த சிவில் இராணுவ அதிகாரிக்கு விளக்கி, உரிய பத்திரங்களைச் சமர்ப்பித்தபோதும், அவர் அவற்றைப் பார்க்க மறுத்து தனது கடமை இதுதான் எனக் கூறிவிட்டார்.

பருத்தித்துறையில் 100 பயணிகளுக்கு மட்டுமே கப்பலில் இடம் வழங்கப்படுகிறது. இதுவரை சுமார் இரண்டாயிரம் பேர் இங்கு பதிவு செய்துவிட்டு "இலவு காத்த கிளிபோல்" காத்துக்கிடக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

எனவே இந்த "சிற்றி ஒவ் றிங்கோ" என்ற கப்பல் சேவையைவிட, முன்போல் சாதாரண கப்பலில் இங்கிருந்து பிரயாணிகளை ஏற்றிச் சென்றால் இப்பிரச்சினை தீர்ந்துவிடும்! ஆயிரக்கணக்கான பிரயாணிகள் ஒரே கப்பலில் செல்லலாம். ஆயிரக்கணக்கில் லஞ்சம் பெறுவோரும் இருக்கமாட்டார். இதனை உரிய அதிகாரிகள் கவனிப்பார்களா?

எம். எல். விநோதன்

நெல்லியடி.

# எமது தாய்நாட்டை மீட்டெடுக்க பிரபா, சந்திரிகா, ரணில் ஆகிய மூவரையும் தோற்கடிக்க வேண்டும்

## ஜே. வி. பி கூறுகிறது

கொழும்பு, ஜூலை 27

எமது தாய்நாட்டை மீட்டெடுப்பதற்காக பிரபாகரனை மட்டுமன்றி ரணிலையும் சந்திரிகாவையும் தோற்கடிக்க வேண்டியுள்ளது.

மக்கள் விடுதலை முன்னணி (JVP) யின் செயலாளர் டில்வின் சில்வா இவ்வாறு தெரிவித்தார்

அவர் மேலும் தெரிவிக்கையில்—

அரசும்— ஐ. தே. க வும் நாட்டைத் துண்டாட முயன்று கொண்டிருக்க மறுமுனையில் தென்பகுதியில் சில சக்திகள் தமிழ்— சிங்கள மற்றும் முஸ்லிம் மக்களிடையே ஒற்றுமையைக் குலைக் முயற்சித்து வருகின்றன.

இந்த இரண்டு சக்திகளையும் தோற்கடிக்க மக்கள் விடுதலை முன்னணி எந்த நேரமும் மக்களுடன் கைகோர்த்துச் செயற்படத் தயார்— என்றார். (இ-9)

## குமணவில் உள்ளூர் பொருள்கள்

வடமராட்சி, ஜூலை 27

புகையிலை, வெங்காயம், பனம் பொருள்கள், வெற்று உரப்பைகள் என்பன பருத்தித்துறைதுறைமுகத்தில் தரித்து நிற்கும் குமண கப்பலில் ஏற்றப்பட்டு வருகின்றன.

இரண்டொரு நாள்களில் இந்தக் கப்பல் கொழும்பு நோக்கிப் புறப்படும். (இ-173)

## திருவடி நிலைக்குச் செல்வதற்கு அனுமதி பெற்றுத்தரக் கோரிக்கை

சுழிபுரம், ஜூலை 27

ஆடி அமாவாசை தினமான எதிர்வரும் 30 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பொது மக்கள் சுழிபுரம் திருவடி நிலை கடலில் தீர்த்தமாடி பிதிர்க்கடன்களை நிறைவு செய்ய கடற்கரைக்குச் சென்று வர கடற்படையினரின் அனுமதியைப் பெற்றுத்தருமாறு வலிகாமம் மேற்கு பிரதேச சபைத் தலைவர் ந. திரிலோகநாதனிடம் பொது மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

வருடா வருடம் ஆடி அமாவாசை தினத்தன்று மக்கள் திருவடி நிலைக் கடலில் தீர்த்தமாடி பிதிர்க்கடன்களை நிறைவு செய்வது தெரிந்ததே. (க-28)

## வெள்ளோட்டம்

யாழ்ப்பாணம், ஜூலை 27

கோப்பாய் மத்தி ஸ்ரீ முத்துமாரி அம்பாள் தேவஸ்தான புதிய சித்திரத்தேர் வெள்ளோட்டம் எதிர்வரும் முதலாம் திகதி நடைபெறும்.

அப்பகுதி மக்களின் அன்பளிப்பாகப் பெற்ற சுமார் 15 லட்சம் ரூபா பெறுமதியில் இப் புதிய தேர் அமைக்கப்பட்டுள்ளது. (ஐ-15)

## உத்தேச அரசமைப்புக்கு ஆதரவாகக் கை உயர்த்துவோர் அனைவரும் தேசத் துரோகிகள்

### தேசிய சங்க சபா அறிக்கை

அரசாங்கம் முன்வைத்துள்ள தீர்வுத் திட்டத்துக்கு ஆதரவு தெரிவித்துக் கை உயர்த்தும் அத்தனை அமைச்சர்களும் எம்பிக்களும் தேசத் துரோகிகளாகவே வரலாற்றில் எழுதப்படுவார்கள். இப்படியானவர்களுக்கு மக்கள் எதிர்வரும் தேர்தலில் நல்ல பாடத்தைப் புகட்டுவார்கள்.

மேற்கண்டவாறு தேசிய சங்க சபா என்ற பௌத்த அமைப்பு தெரிவித்துள்ளது.

அரசாங்கம் — எதிர்க்கட்சி இணக்கப்பாட்டுடன் தயாரிக்கப்பட்டுள்ள அரசமைப்புத் திட்டத்தை எதிர்த்து வெளியிட்ட அறிக்கை ஒன்றிலேயே அந்தச் சபை மேற்கண்டவாறு தெரிவித்தது.

கடந்த 52 வருடங்களாகப் போலி அரசியலை நடத்தி வந்த இரண்டு பிரதான கட்சிகளும் ஏமாற்றிய காலம் மாறி சிங்கள மக்களை உண்மையாக நேசிக்கும் கட்சியோடு சிங்கள மக்கள் சேரும் காலம் வந்துள்ளது என்று அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுளது. (9-இ)

## பாடநூல்களில் ஒரு தொகுதி கிடைத்தது

தென்மராட்சி, ஜூலை 27

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலை மாணவர்களுக்கு வழங்கப்படவேண்டிய இலவசப் பாடத் புத்தகத் தொகுதி வலய அலுவலகத்திற்கு வந்துள்ளது

தரம் 3, 6, 8, 9, 10 ஆகிய வகுப்பு மாணவர்களுக்குரிய பாடப்புத்தகங்களே தற்போது வந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது (ஐ-117)

## இடம் பெயர்ந்த குடும்பங்களுக்கு உதவி

கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலையில் அமைந்துள்ள இடம்பெயர்ந்த மக்களுக்கான நலன்புரி நிலையத்தில் உள்ள மக்களுக்கு வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை றொட்றக்ட் கழகத்தினரால் பெறுமதியான உதவிப் பொருள்கள் வழங்கப்பட்டன.

அந்த நிலையத்திலுள்ள 65 குடும்பத்தினருக்கும் உடுபுடைவைகள் சவர்க்காரம் மாணவர்களுக்கான பாடசாலைச் சீருடை, அப்பியாசக்கொப்பிகள், பேனா என்பனவும் குழந்தைகளுக்கு ஜீவா காரமும் வழங்கப்பட்டன.

இந்த செயற்திட்டத்திற்கான ஒழுங்கமைப்பு நடவடிக்கைகளை யாழ். நகர் மைய றோட்டறக்ட் கழகம் மேற்கொண்டது.

அதேவேளை—

இந்த நிலையத்திலுள்ள சிறுவர்களுக்கும் சத்துணவு வழங்கும் திட்டம் ஒன்றினையும் யாழ். நகர்மைய றோட்டறக்ட் கழகத்தினர் மேற்கொள்ளவுள்ளனர். (ஐ-4)

## அறிவுறுத்தல் கூட்டம்

ஐந்தாம் தர புலமைப் பரிசில் பரீட்சையில் கடமையாற்றவுள்ள நிரந்தர நோக்குநர்கள் மேற்பார்வையாளர் ஆகியோருக்கான அறிவுறுத்தல் கூட்டம் ஓகஸ்ட் ஐந்தாம் திகதி நெல்லியடி மத்திய மகாவித்தியாலயத்தில் நடைபெறுமென வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ஐ-117)

## ச. ச. நிலையம் சேதம்

நாவாந்துறை கென்னடி சன சமூக நிலையம் கடந்த வெள்ளிக்கிழமை இரவு ஊரடங்கு நேரத்தில் சேதமாக்கப்பட்டது,

இச்சம்பவத்தில் நிலையத்தின் கதவு ஜன்னல்கள் மற்றும் தளபாடங்கள் என்பன உடைத்து நொறுக்கப்பட்டுள்ளன.

இச்சம்பவம் குறித்து பாதுகாப்புப் படை முகாமில் புகார் செய்யப்பட்டுள்ளதாக நிலைய நிர்வாகிகள் தெரிவித்தனர். (அ-111)

## சமய சந்நிதிகளில்

வல்வெட்டித்துறை ஸ்ரீ பிள்ளையார் ஆலய அலங்காரத் திருவிழாவின் தேர்த் திருவிழா நாளை மறுதினம் சனிக்கிழமையும் மறுநாள் ஆடி அமாவாசை தினத்தன்று சமுத்திரத் தீர்த்தமும் இடம்பெறவுள்ளன. (க-30)

★ ★ ★

மூளாய் வதிரன்புலோ ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலயத்தில் தற்போது மண்டலாபிஷேகம் நடைபெற்று வருகின்றது.

கடந்த 12 ஆம் திகதி கும்பாபிஷேகம் இடம் பெற்றது. (க-30)

★ ★ ★

திருநெல்வேலி ஸ்ரீ சிவன் கோயில் அம்பிகையின் வருடாந்த உற்சவம் கடந்த திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

தொடர்ந்து பத்துத்தினங்கள் திருவிழா நடைபெறும்.

எதிர்வரும் முதலாம் திகதி காலை 8.30 மணிக்கு தேர்த் திருவிழாவும் மறுநாள் ஆடிப் பூரத்தன்று காலை 8.30 மணிக்கு, தீர்த்தோற்சவமும் இடம்பெறவுள்ளன (30)

★ ★ ★

அம்பன் வரசித்தி விநாயகர் ஆலயத்தில் ஆடி அமாவாசைத் தீர்த்தோற்சவம் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12 மணிக்கு நடைபெறும். (க-173)

★ ★ ★

யாழ்ப்பாணம், ஜூலை 27

கோப்பாய், மத்தி ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் கடந்த திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.

தொடர்ந்து பத்து நாள்கள் இடம்பெறும் உற்சவ விழா நிகழ்வில் எதிர்வரும் முதலாம் திகதி தேர் உற்சவமும், மறுநாள் தீர்த்தோற்சவமும் நடைபெறும். (க-15)

★ ★ ★

நீர்வேலி வாய்க்கால் தரவைப் பிள்ளையார் கோயில் வருடாந்த உற்சவம் எதிர்வரும் ஓகஸ்ட் 4 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது. தொடர்ந்து 12 நாள்கள் இடம்பெறும் இந்த உற்சவத்தில் எதிர்வரும் 15 ஆம் திகதி தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தோற்சவமும் நடைபெறும். (ஐ-15)

# சின்னஞ்சிறு விளம்பரம்

### தவறிவிட்டது

கைதடி கிழக்கைச் சேர்ந்த கனகேஸ்வரன் பிரதீஸ் என்பவருடைய விசேட அ. அ. (இல. 091001772) கைதடியிலிருந்து இடம்பெயர்ந்த வேளை தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து உரும்பிராய் கிழக்கு அப்பன் கடையில் ஒப்படைத்துதவுமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றேன்.

(76724)

### விற்பனைக்கு

2 K.V டைனமோவுடன் கழற்றப்பட்ட ஜெனரேற்றர் (Honda) என்ஜினும் 2 கொம்பிறசர்களும், 2 ரேடியேற்றருடன் சேர்ந்த ஒரு ஐஸ்கிறீம் (பாத்) மெசினுடன் சேர்த்து சுன்னாகம் குளிர் அருவியில் இருந்த அலுமினிய பிற்றிங் சோக்கேஸ், கவுண்டர்கதிரை மேசைகளும் உடன் விற்பனைக்குண்டு விவரங்கட்கு ஐ தியாகராஜா இல.104, கே. கே. எஸ்.வீதி, (பழைய பொலிஸ் நிலையம் முன்பாக) சுன்னாகம்.

(76726)

### வீடு வாடகைக்கு

நல்ல நிலையிலுள்ள வசதியுடன் கூடியவீடு வாடகைக்கு உண்டு. தொடர்புகளுக்கு: தி. சயந்தன், இல. 49, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம் என்னும் முகவரியுடன் தொடர்பு கொள்ளவும். (ந'கமுத்து, அருளானந்தன், தியாகர சா. பத்மாவதி, துரைராஜா)

(76730)

## தெரிவு

யாழ்ப்பாணம், ஜூலை 27

சுன்னாகம் ப.நோ கூ. சங்கத்தின் தலைவராக மீண்டும் சி. குமரவேல் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் எஸ் கே சண்முகநாதன் தலைமையில் மேற்படி ப. நோ. கூ. சங்கத்தின் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் 7 இயக்குநர்களும் உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். (ஐ–5)

## பாலர் பாடசாலை கட்டடம்

சண்டிலிப்பாய், ஜூலை 27

சங்கானை மேற்கு சனசமூக நிலையத்தினால் நிலையக் கட்டடத்துக்கு அருகில் பாலர் பாடசாலைக்கான நிரந்தரக் கட்டடம் ஒன்று அமைக்கப்பட்டு வருகின்றது.

வலி. தென்மேற்கு பிரதேச சபை இதற்கான நிதியினை வழங்கியுள்ளது. (ஐ-135)

## சிங்கள திரைப்படத்துக்குத் தடை

கொழும்பு, ஜூலை 27

சமாதானத்துக்கான விருது பெற்ற — போருக்கு எதிரான — திரைப்படம் ஒன்று இலங்கையில் திரையிடப்படுவதை அவசரகாலச் சட்டத்தின் கீழ் அரசாங்கம் தடை செய்துள்ளது.

இந்தத் தடை தற்காலிகமானது என்றும் நாடு போர்ச் சூழ்நிலையில் இருக்கின்றவரைதான் இந்தத் தடை நடைமுறையில் இருக்கும் என்றும் வடக்கு புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சர் சரத் அமுனுகம கூறியிருக்கிறார்.

'ஒரு பூரண நிலவில் கொலை' என்ற இந்தச் சிங்களத் திரைப்படம் ஏற்கனவே வெளிநாடுகளில் திரையிடப்பட்டு சிறந்த திரைப்படம் என்று பலராலும் பாராட்டப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ-4)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி சுப்பிரமணியம் சிவபாக்கியம்

சித்தன்கேணியைச் சேர்ந்த திருமதி சுப்பிரமணியம் சிவபாக்கியம் (23-07-2000) ஞாயிற்றுக்கிழமை கொழும்பில் சிவபதமடைந்தார்.

இவர் காலஞ்சென்ற பண்டிதர் சுப்பிரமணியத்தின் (உசன்) அன்பு மனைவியும், சண்முகநாதன் (லண்டன்), இராமநாதன் (லண்டன்), திருமதி உதயகுமாரி இரத்தினசிங்கம் (கொழும்பு) ஆகியோரின் பாசமிகு தாயாருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நேற்று (26-07-2000) புதன்கிழமை கொழும்பில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
**தம்பிஐயா இரத்தினசிங்கம்**
(மருமகன்)

21, 5/4, பிறம்றிகா றோட்,
வெள்ளவத்தை. [76727]

## சோமசுந்தரம் பஞ்சலிங்கம்

கோப்பாய் மத்தி, ஆசாரி வீதியைச் சேர்ந்த சோமசுந்தரம் பஞ்சலிங்கம் என்பவர் மலேசியாவில் அகால மரணமானார்.

அன்னார் வன்னியில் வசிக்கும் டில்லியம்மாவின் அன்புக் கணவரும், கிரிதாஷ், பிசிதாஷ் ஆகியோரின் அன்புத் தந்தையும், வவுனியாவில் வசிக்கும் சிவலிங்கம், கோப்பாய் இராச வீதியில் வசிக்கும் (விஜயராசா), அம்பிகா ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் மறைவையொட்டி 27 - 7 - 2000 இன்று சகோதரியின் இல்லத்தில் துக்கம் அனுஷ்டிக்கப்படும் என்பதை அறியத் தருகின்றோம்.

தகவல்:
**விஜயராசா அம்பிகா**
(சகோதரி)

இராசவீதி,
கோப்பாய் மத்தி (ஆசாரி வீதி) (76732)

## தர்மலிங்கம் மகேஸ்வரி

புங்குடுதீவு 4 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த தர்மலிங்கம்- மகேஸ்வரி நேற்று 26- 07- 2000) காலமானார்.

இவர் காலஞ்சென்ற தர்மலிங்கத்தின் அன்பு மனைவியும், கிளி, செட்டி, சந்திரன், லீலா, பிரேமா ஆகியோரின் அன்புத் தாயாரும், பரமானந்தம், தனபாலசிங்கம், சின்னத்தம்பி, கனகலெட்சுமி, மஞ்சுளா ஆகியோரின் மாமியாரும், சங்கீதா, கவி, கோபி, கீர்த்தனா ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இறுதிக் கிரியைகளுக்காக இன்று (27- 07- 2000) காலை 10 மணிக்கு கேரதீவு மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**க.தனபாலசிங்கம்**
(மருமகன்)

புங்குடுதீவு, 1. (76735)

## திருமதி விசாலாட்சி கந்தையா

(சரவணை கிழக்கு, வேலணை)

சரவணை கிழக்கைச் சேர்ந்தவரும், தற்போது கந்தர்மடத்தில் வசித்தவருமாகிய திருமதி விசாலாட்சி கந்தையா 25- 07 -2000 அன்று செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கனகசபை கந்தையா அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் இளையபிள்ளை தம்பதிகளின் அன்புப் புதல்வியும், சறோஜினிதேவி (ஓய்வுபெற்ற ஆசிரியர்), நமசிவாயம் (கனடா), காலஞ்சென்ற புஸ்பராணி, யோகமங்களம் (கனடா), பாக்கியலெட்சுமி (ஓய்வுபெற்ற ஆசிரியர், ஆஸ்திரேலியா), இராதாமணி (ஆசிரியை, யாழ். செங்குந்தா இ. கல்லூரி), ரவீந்திரன் (கொழும்பு) ஆகியோரின் பாசமிகு தாயாரும், அருணகிரிநாதன் (ஆசிரியர், வேலணை, சேர். வைத்திலிங்கம் துரைசுவாமி ம. ம. வி), வடிவாம்பிகை (கனடா), திபாகரராசா (கனடா), கணேசபிள்ளை (ஓய்வுபெற்ற இலிகிதர், ஆஸ்திரேலியா), ஞானபண்டிதன் (தொழில் நுட்ப உத்தியோகத்தர், நல்லூர் உ. அ. அ. பணிமனை), சிவநீதி (கொழும்பு) ஆகியோரின் அன்பு மாமியாரும், அமுதினி, சிவரூபன், அனுஜன், நிரந்தரி, அர்ஜுன், ஹரிகரன், வாஷினி வருணன், நிருசங்கர் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், காலஞ்சென்றவர்களான நடராசா, தவநிதிப்பிள்ளை, குமரையா, படிகலிங்கம் மற்றும் பராசக்தி, சௌந்தரம் (ஓய்வுபெற்ற ஆசிரியை) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (27–7–2000) வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைக்காக கோம்பயன்மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:
**ந. அருணகிரிநாதன்**
(மருகர்)

53/10 அன்னசத்திர ஒழுங்கை,
(3 ஆம் ஒழுங்கை)
பலாலி வீதி, யாழ்ப்பாணம். (76734)

# மீன்பிடி உபகரணங்களை முகாமில் வைக்கப் பணிப்பு

வடமராட்சி, ஜூலை 27

வடமராட்சி வடக்குப் பகுதியைச் சேர்ந்த மீனவர்களின் மீன்பிடி உபகரணங்கள் அருகில் உள்ள இராணுவ காவலரண்களில் வைக்கப்பட வேண்டும் என பணிக்கப்பட்டுள்ளது.

மீனவர்கள் தொழிலுக்குச் செல்லும் போது முகாம்களுக்கு வந்து தமது உபகரணங்களை எடுத்துச் செல்ல வேண்டும் தொழில் முடிவடைந்ததும் உபகரணங்களை மீண்டும் அதே முகாம்களில் கொண்டு வந்து ஒப்படைக்க வேண்டும். (இ-173)

# பரீட்சை அனுமதி அட்டை வழங்கல்

எமது பாடசாலையிலிருந்து A/L 2000 பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கான அனுமதி அட்டைகள் நாளை (28—07—2000) வெள்ளிக்கிழமை யாழ். மரி அன்னைபேராலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுத்த பின் அதிபர், ஆசிரியர்களின் நல்லாசிகளுடன் வழங்கப்படவுள்ளன. அனைத்து A/L 2000 மாணவர்களும் காலை 9.00 மணிக்கு பாடசாலைக்குச் சமுகம்தரவும்.

அதிபர்
**யாழ். புனிதர் சாள்ஸ் மகாவித்தியாலயம்.**
[சி/12315]

# பதவி வெற்றிடம்

## விளையாட்டு முகாமையாளர்

(ஒப்பந்த அடிப்படையில்)

சகல துறை விளையாட்டுக்களையும் பயிற்றுவிக்கக் கூடிய 50 வயதுக்குக் குறைந்த திடகாத்திரமான ஒருவருக்கு மேற்படி பதவிக்கு வெற்றிடம் உள்ளது: தெரிவு செயற்குழுவின் தீர்மானப்படி நடைபெறும்.

இந்த விளம்பர நாளிலிருந்து இரு வாரங்களுக்குள் கீழ்க்கண்ட முகவரிக்கு விண்ணப்பத்தைச் சேர்ப்பிக்க வேண்டப்படுகிறது.

இணைச் செயலாளர்,
**ஹாட்லிக் கல்லூரி பழைய மாணவர் மன்றம்,**
**ஹாட்லிக் கல்லூரி, பருத்தித்துறை.**
(சி/12324)

# அறிவித்தல்

## வாடகைக்கார், ஓட்டோ உரிமையாளர், சாரதிகளுக்கு!

பயணிகள், பொது மக்கள் நலன் கருதி புதிய நடைமுறை நேற்று (26—07—2000) முதல் அமுல் செய்யப்பட்டுள்ளது.

யாழ். பஸ் நிலையத்தில் கப்பல் பயணிகளின் பொதிகள் கைமாறுதல், யாழ். பட்டினப் பகுதியில் இத்தினத்தில் போக்குவரத்து நெரிசல் ஏற்படுதல் என்பவற்றைத் தவிர்க்கும் பொருட்டு, வாடகைச் சேவையில் ஈடுபடும் சகல கார், ஓட்டோ என்பன சுழற்சி முறையில் பஸ் நிலையத்துக்குள் சென்று வாடகைக்கு அமர்த்த அனுமதிக்கப்படும். எனவே இந்நடைமுறையை வாடகைக்கார், ஓட்டோ சங்கங்கள் இணைந்து ஏற்படுத்தியுள்ளன என்பதை அறியத் தருகின்றோம்.

தற்போதைய நிலையில் இந் நடைமுறை அனைவருக்கும் பயன்தரும் என நாம் நம்புகிறோம்.

நன்றி.

| செயலாளர் | செயலாளர் |
|---|---|
| வாடகைக் கார் சங்கம். | ஓட்டோ உரிமையாளர் சங்கம். |

(76731.)

# கண்ணீர் அஞ்சலி

எமது கல்வி வலயத்தில் ஆசிரிய ஆலோசகராகக் (வாழ்க்கைத் தேர்ச்சி) கடமையாற்றும்

**திருமதி வேதநாயகி இராசகுமாரன்**
அவர்களின் அன்புத் தந்தையார்
**வீரகத்தியார் சிவப்பிரகாசம்**

அவர்களின் மறைவுக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம். அன்னாரின் ஆன்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**வலயக்கல்வித் திணைக்கள நலன்புரிக்கழகம்.**

வடமராட்சி,
புலோலி. (சி-12323)

# நான் பிரபாவின் தம்பி என்றால் சந்திரிகா அவரது அக்காவே!

## இப்படிக் கூறுகிறார் ரணில்

"நான் பிரபாகரனின் தம்பி என்றால் சந்திரிகா பிரபாகரனின் அக்காவாகவே இருக்கவேண்டும்."

இவ்வாறு கூறியுள்ளார் எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரம சிங்க.

கடுவல நகரில் இடம்பெற்ற கூட்டம் ஒன்றில் உரையாற்றும் போது அவர் இதனைத் தெரிவித் தார்.

அவர் அங்கு மேலும் கூறியதாவது:-

பிரபாகரனின் தம்பி என்று என்னை அரசாங்கம் பிரசாரப்படுத்தி வருகிறது. நான் செல்லும் இடங்களில் எல்லாம் என்னைப் பிரபாகரனின் தம்பி என்று குறிப்பிட்டுப் போஸ்டர்களை ஒட்டும் பணியில் அரசாங்கம் ஈடுபட்டு வருகிறது. எனினும் எனக்கு 51 வயது. பிரபாகரனுக்கு 45 வயது. நான் பிரபாகரனின் தம்பியோ அல்லது அண்ணனோ அல்லன். அரசாங்கம் காலையில் கதைத்து மாலையில் உதைக்கும் கொள்கையைக் கடைப்பிடித்து வருகிறது - என்று ரணில் குற்றம் சாட்டினார். (ஐ-9)

## அடுத்த ஆண்டுக்கான

# இலவசப் பாடப்புத்தகங்கள் உரிய காலத்தில் வழங்கப்படும்

கொழும்பு,ஜூலை27

அடுத்த ஆண்டு முதலாம் தவணையிலேயே இலவசப் பாடப் புத்தகங்களை வழங்குவதற்கான நடவடிக்கைகளை கல்வி அமைச்சு மேற்கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அடுத்த ஆண்டுக்குத் தேவையான பாடப் புத்தகங்களின் ஒரு தொகுதி ஏற்கனவே அச்சிடப்பட்டுள்ளதாகவும் -

தாமதமின்றி - உரிய காலத்தில் - புத்தகங்களை அச்சிட்டு வழங்காத அச்சகங்களுக்கு இம்முறை அந்தப்பணி வழங்கப்படவில்லை எனவும் - தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை - புத்தக விநியோகத்தை தாமதிக்கும் அச்சக உரிமையாளர் மீது தண்டப் பணம் அறவிடப்படவுள்ளதாகவும் கல்வி அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன.

(க)

## விபத்தில் இருவர் காயம்

நெல்லியடி,ஜூலை27

நெல்லியடிப்பகுதியில் செவ்வாய் மாலை இடம்பெற்ற இராணுவ மோட்டார் சைக்கிள் - சைக்கிள் விபத்தில் வயோதிபர் ஒருவரும் இராணுவச் சிப்பாய் ஒருவரும் காயமடைந்தனர்.

சைக்கிளில் சென்று கொண்டிருந்த கரவெட்டியைச் சேர்ந்த நாகமுத்து- ஜெயராசா (வயது66) என்பவர் நெற்றியில் காயமடைந்தார். மோட்டார் சைக்கிளைச் செலுத்தி வந்த இராணுவச்சிப்பாய் தாடைப் பகுதியில் காயமடைந்தார்.

இருவரும் மந்திகை மருத்துவமனையில் சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டனர். (ஐ-109)

# மூத்த படைத் தளபதிகளை கொல்லும் திட்டம் அம்பலம்

மேஜர் ஜெனரல்களான ஜானக பெரேரா, நீல் டயஸ், சரத் பொன்சேகா ஆகிய மூத்த இராணுவ அதிகாரிகளைக் கொலை செய்ய விடுதலைப் புலிகள் தீட்டிய சதித் திட்டம் தொடர்பான தகவல்கள் தெரியவந்துள்ளதாக பாதுகாப்பு வட்டாரங்களை மேற்கோள் காட்டி 'திவயின' பத்திரிகை செய்தி வெளியிட்டிருக்கிறது.

கடந்த வாரம் வவுனியாவில் கைது செய்யப்பட்ட விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினரான தமிழ்மான் என்பவரிடம் இருந்து கிடைத்த ஆவணங்கள் மூலம் இந்தக் கொலைச் சதி குறித்த தகவல்கள் வெளியானதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வன்னிப் படைகளின் தளபதியாக இருந்த நீல் டயஸை வவுனியாவில் வைத்தும் -

வடக்குப் படைகளின் தற்போதைய தளபதி மேஜர் ஜெனரல் ஜானக பெரேரா மற்றும் மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகா ஆகியோரை யாழ்ப்பாணத்தில் வைத்தும் கொல்லத் திட்டங்கள் தீட்டப்பட்டிருந்ததாம்.

கைதான புலிகள் இயக்க நபர் வவுனியாவில் ஆறு மாத காலம் தங்கியிருந்து நீல் டயஸின் நடமாட்டத்தை கண்காணித்து வந்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-6)

# மன்னார் ஆஸ்பத்திரியில் மருத்துவ சேவை ஸ்தம்பிதம்

## 8 டாக்டர்கள் தெற்கே மாற்றம்

கொழும்பு,ஜூலை27

மன்னார் அரச ஆஸ்பத்திரியில் பணிபுரிந்த எட்டு டாக்டர்கள் ஒரேயடியாகத் தென்பகுதிக்கு இடமாற்றம் செய்யப்பட்டதை அடுத்து மன்னார் ஆஸ்பத்திரியில் வைத்திய சேவைகள் முற்றாக ஸ்தம்பிதம் அடைந்துள்ளன.

இவர்கள் இடம்மாற்றம் செய்யப்பட்டது குறித்து விசனம் தெரிவித்து வன்னி மாவட்ட எம்.பியான அடைக்கலநாதன் (செல்வம்) சுகாதார சேவைகள் பணிப்பாளருக்கு கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

இடமாற்றம் செய்யப்பட்ட டாக்டர்களுக்குப் பதிலாக வேறு டாக்டர்கள் மன்னாருக்கு நியமிக்கப்படாததை இக்கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ள அடைக்கலநாதன் எம்.பி. இந்த டாக்டர்கள் மன்னார் மக்களுக்கு மட்டுமன்றி வன்னி மற்றும் யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டங்களில் இருந்து இடம்பெயர்ந்து மன்னாரில் தங்கியிருந்த மக்களுக்கும் சேவையாற்றி வந்தனர் என்றும் - டாக்டர்கள் கூண்டோடு இடமாற்றம் செய்யப்பட்டதால் வைத்திய சேவைகள் முற்றாகப் பாதிப்படைந்துள்ளன என்றும் - தெரிவித்துள்ளார்.

(ஐ-6)

## மிதிவெடியில் பெண் கால்இழப்பு

யாழ்ப்பாணம்,ஜூலை27

கொக்குவில் பகுதியில் மிதிவெடிகள் அகற்றப்பட்டு சனநடமாட்டத்திற்கு அனுமதிக்கப்பட்ட இடத்தில் நேற்று ஆட்டுக்கு குழை வெட்டச் சென்ற குடும்பப் பெண் ஒருவர் மிதிவெடியில் சிக்கி வலது காலை முழங்காலுக்கு கீழ் இழந்தார்.

கொக்குவில் ஸ்ரேசனடிப் பகுதியில் இடம்பெற்ற இந்தச்சம்பவத்தில், திருமதி சுப்பிரமணியம் இலட்சுமி (வயது52) என்பவரே மிதிவெடியில் சிக்கியவராவார்.

காயமடைந்த பெண் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ஐ-5-15)

## ஓய்வூதிய கொடுப்பனவு

ஓய்வூதிய வவுச்சர் கிடைக்காததால் மே மாத ஓய்வூதியத்தினை இதுவரை பெற்றுக் கொள்ளாத தென்மராட்சி பிரதேச ஓய்வூதியர்களுக்கு மே மாதத்துக்குரிய ஓய்வூதியக் கொடுப்பனவை ஓகஸ்ட் மாத ஓய்வூதியத்துடன் வழங்க பிரதேச செயலர் பு.சுந்தரம்பிள்ளை நடவடிக்கை மேற்கொண்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

பிரதேச ஓய்வூதியர் சங்கத்தினர் அண்மையில் பிரதேச செயலருடன் நடத்திய கலந்துரையாடலின் போது இவ்வாறு தெரிவிக்கப்பட்டதாகக் கூறப்பட்டது. (ஐ-117)

# மகாபொல கொடுப்பனவை அதிகரிக்குமாறு கோரிக்கை!

## பல்கலை மாணவர் ஆர்ப்பாட்டம்

கொழும்பு,ஜூலை27

பல்கலைக்கழக மாணவர்களுக்கு அரசினால் வழங்கப்பட்டு வரும் மகாபொல புலமைப்பரிசில் கொடுப்பனவை இரண்டாயிரத்து 500 ரூபாவாக அதிகரிக்கக் கோரி தெற்கு பல்கலைக்கழகங்களின் மாணவர்கள் ஒன்றுகூடி நேற்று ஆர்ப்பாட்டம் செய்தனர்.

கோட்டை ரயில் நிலையத்துக்கு வெளியே நேற்றுக் காலை ஆரம்பமான இந்த ஆர்ப்பாட்டத்தில் நூற்றுக்கணக்கான பல்கலைக்கழக மாணவர்கள் கலந்துகொண்டனர்.

அனைத்துப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியப் பிரதிநிதிகள் இது தொடர்பாகக் கருத்துத் தெரிவிக்கையில் -

மகாபொல புலமைப்பரிசில் பெறுபவர்கள் 1993 ஆம்ஆண்டு சிபார்சு செய்யப்பட்ட ஆயிரத்து 250 ரூபாவையே மாதாந்தம் பெறுகின்றனர் என்றும் -

வாழ்க்கைச் செலவு உயர்வு காரணமாக இந்தத் தொகை போதுமானதாக இல்லை என்றும்- தெரிவித்தனர்.

(ஐ-9)

## மாணவருக்கு மாதிரி வினாத்தாள்

தென்மராட்சி,ஜூலை27

ஓகஸ்ட் மாதம் நடைபெறவுள்ள ஐந்தாம்தர புலமைப்பரிசில் பரீட்சைக்குத் தோற்றவுள்ள சாவகச்சேரி மகளிர்கல்லூரி மாணவர்களுக்கான மாதிரி வினாத்தாள்கள் கண்டியிலிருந்து வந்துள்ளன.

இந்த மாதிரி வினாத்தாள்களுக்கு பணம் செலுத்திய மாணவர்கள். கரவெட்டி ரலன்ற் கல்வி நிலையத்தில் நாளை வெள்ளிக்கிழமை நண்பகல் 12மணிக்கு முன்னர் பெற்றுக்கொள்ளுமாறு கல்லூரி அதிபர் திருமதி சி.சிவானந்தன் அறிவித்துள்ளார். (ஐ-117)

## தமிழ்ச் சங்கத்தின் பண்டித வகுப்புகள்

வட்டுக்கோட்டைத் தொகுதி தமிழ்ச் சங்கம் பிரவேச, பால பண்டித, பண்டித வகுப்புகளை வார இறுதி நாள்களில் இலவசமாக நடத்தவுள்ளது.

சித்தன்கேணிச்சந்தியில் அமைந்துள்ள சங்கத்தின் பணிமனையான அம்பலவாண நாவலர் வளாகத்தில் இந்த வகுப்புகள் விரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளதாகப் பொறுப்பாசிரியர் பண்டிதர் ம.ந.கடம்பேஸ்வரன் தெரிவித்தார்.

வகுப்புகளில் சேர விரும்புவோர் வட்டுக்கோட்டை வடக்கில் உள்ள அவரது இல்லத்தில் பதிவு செய்து கொள்ளலாம். (அ-30)



சுழிபுரம் கிழக்கில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு பஸ் சேவையொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இந்த சேவையை முதல் டிக்கெட்டைப் பெற்று வலி. மேற்குப் பிரதேச சபைத் தலைவரும் ஈ.பி.டி.பியின் வட்டுக்கோட்டைத் தொகுதி அமைப்பாளருமான என்.திரிலோகநாதன் ஆரம்பித்துவைத்த சமயம் எடுக்கப்பட்ட படம் இது. வட பிராந்திய போக்குவரத்துச் சபைத் தலைவர் வி.எஸ். சொக்கலிங்கமும் காணப்படுகின்றார. (ஐ-3)



காரைநகர் கலாநிதி ஆ.தியாகராசா மத்திய மகாவித்தியாலயத்தில் புதிதாக அமைக்கப்பட்ட செயற்பாட்டு அறைக்கட்டடம் அண்மையில் திறந்து வைக்கப்பட்டது.

தீவக வலயக் கல்விப்பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் கட்டடத்தை திறந்து வைப்பதையும் அதிபர் பண்டிதர் மு.க.வேலாயுதபிள்ளை உரை நிகழ்த்துவதையும் படத்தில் காணலாம்.

*(படம்:- காரைநகர் செய்தியாளர் ந.பாரதி)*



பருத்தித்துறை கலைஞர் வட்டத் தலைவர் பொ.மகாதேவாவின் 'இளமையின் இரகசியம்' நூல் வெளியீட்டு விழா அண்மையில் பருத்தித்துறை வட இந்து மகளிர் கல்லூரியில் நடைபெற்றது. பருத்தித்துறை பிரதேச செயலர் ஆ.சிவசுவாமி மங்கள விளக்கேற்றுகின்றார். அருகில் யாழ்.பல்கலைக்கழக வணிக முகாமைத்துவ பீடாதிபதி எம்.நடராஜசுந்தரம் காணப்படுகின்றார்

*(படம்:-நெல்லியடி செய்தியாளர் இ.கிருபாகரசூரியன்)*

# 5 இலங்கை மீனவர்கள் இந்தியக் கடலில் கைது!

இந்தியக் கடற்பரப்புக்குள் அத்துமீறிச் சென்று மீன்பிடித்துக் கொண்டிருந்த 5 இலங்கை மீனவர்கள் இந்தியக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டனர்.

தூத்துக்குடிக்கு அருகே மீன்பிடித்துக்கொண்டிருந்த இவர்கள் இந்தியக் கடற்படையினரின் படகைக் கண்டதும் தப்பியோட முயன்றதாகவும் எனினும் அனைவரும் கைது செய்யப்பட்டதாகவும் -

அவர்களின் இயந்திரப் படகு - 60கிலோ மீன் மற்றும் உபகரணங்கள் என்பன கைப்பற்றப்பட்டதாகவும் -இந்தியக் கடற்படை அதிகாரிகள் தெரிவித்தனர். (ஐ-9)

## குருநகர் களஞ்சியத் திருட்டு:

# சாட்சி மன்றுக்கு வராததால் விசாரணை ஒத்திவைப்பு

குருநகரில் அமைந்துள்ள யாழ். செயலக களஞ்சியத்தில் இருந்து பொருள்கள் திருடப்பட்ட சம்பவம் தொடர்பான வழக்கு நேற்று, யாழ். நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

இவ்வழக்கின் சந்தேகநபர்களான 37 பேரும் நேற்று நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டனர்.

சந்தேகநபர்கள் சார்பில் சட்டத்தரணிகள் எஸ்.விசுவலிங்கம், பா.தவபாலன்,திருமதி ச.இளங்கோவன் ஆகியோர் ஆஜரானார்கள்.

யாழ்.நீதிமன்ற நீதிவான் பா.சுப்பிரமணியம் தலைமையில் இந்த வழக்கு நீதிமன்றத்தில் நடைபெற்றுக்கொண்டிருந்தபோது நீதிமன்ற வளவில் சந்தேக நபர்களின் குடும்பத்தினர்,உறவினர் எனப் பலர் திரண்டிருந்தனர்.

37 சந்தேக நபர்களையும் பிணையில் விடுவிக்குமாறு சட்டத்தரணிகள் விடுத்த கோரிக்கையை நிராகரித்த நீதிவான் இவ்வழக்கில் ஏழாவது சாட்சியான உதவிப் பொலீஸ் இன்ஸ்பெக்டர் ஆரியவன்ச இரத்தினபுரிக்குச் சென்றுவிட்டதால் வழக்கினை நாளை வெள்ளிக்கிழமை பகல் 2 மணி வரை ஒத்திவைத்தார். (ஐ-5)

### அரசமைப்புத் திட்டத்தை ஆதரிப்பதில்லை என்ற

# ஐ.தே.கவின் முடிவு குறித்து தமிழ்க் கட்சிகள் கவலை!

கொழும்பு,ஜூலை27

அரசமைப்புச் சீர்திருத்த யோசனைகளை ஆதரிப்பதில்லை என்று ஐ.தே.கட்சி எடுத்திருக்கும் முடிவு குறித்து தமிழ்க்கட்சிகள் சில வருத்தம் தெரிவித்துள்ளன.

பெரும்பான்மையினக் கட்சிகள் பேச்சளவில் பேச்சுக்கள் குறித்து பிரஸ்தாபித்துக்கொண்டு செயலளவில் இராணுவத் தீர்வையே விரும்புகின்றன என்பதை இந்தப் போக்குக் காட்டுவதாக அக் கட்சிகள் தெரிவித்துள்ளன.

"தமிழர்களின் அடிப்படை அபிலாஷைகளைப் பூர்த்திசெய்யக் கூடிய அம்சங்கள் இந்தத் தீர்வுத் திட்டத்தில் குறைக்கப்பட்டிருப்பதாலேயே தமிழ்க் கட்சிகள் அதனை ஏற்கவில்லை" என்று புளொட் அமைப்பின் தலைவர் த.சித்தார்த்தன் தெரிவித்தார்.

அரசமைப்பு நகல் தொடர்பாக தமிழ்க் கட்சிகளால் முன்வைக்கப்பட்ட திருத்தங்களை ஐ.தே.க. ஏற்க முன்வரவேண்டும். பௌத்த மகா சங்கத்தினர் போன்று ஐ.தே.கவும் அதனை எதிர்க்கக் கூடாது என்றும் சித்தார்த்தன் தெரிவித்தார்.

"அரசமைப்புச் சீர்திருத்தத்தை ஐ.தே.க. ஏற்றுக்கொள்ள மாட்டாது என்றும் முன்னரே தெரிந்த விடயம். தேசிய பிரச்சினை தொடர்பாக அக் கட்சிக்கு ஒரு கொள்கை கிடையாது" என்று தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் இ.சம்பந்தன் கூறியுள்ளார்.

வேறு சிலர் எதிர்க்கிறார்கள் என்பதற்காக தாமும் எதிர்ப்பதாகக் கூறியதன் மூலம் இந்த விவகாரத்தில் இருந்து தப்பித்துக்கொள்ள ஐ.தே.க. முயற்சிக்கின்றது என்றும் அவர் குற்றம் சாட்டினார். (ஐ-4-9)

## தண்ணீர் தாங்கிகளை அகற்றாதீர்

ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனத்தினால் இடம்பெயர்ந்த மக்கள் தங்கியுள்ள நலன்புரி நிலையங்களில் அமைக்கப்பட்டுள்ள குடிதண்ணீர் தாங்கிகளை முன் அனுமதியின்றி எவரும் வேறு இடங்களுக்கு மாற்றக்கூடாது என்று யாழ். மாநகர சபையின் நீர் விநியோகப் பகுதிப் பொறியியலாளர் தெரிவித்துள்ளார்.

குடாநாட்டில் அண்மைக் காலத்தில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலையை அடுத்து இடம்பெயர்ந்த மக்களின் நன்மையைக் கருத்திற்கொண்டு அவர்கள் தங்கியுள்ள இடங்களில் குடி தண்ணீர்த் தாங்கிகள் மூலம் நீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

அராலி இந்துக்கல்லூரியில் இவ்வாறு வைக்கப்பட்டிருந்த குடிதண்ணீர்த் தாங்கி வேறு இடத்துக்கு மாற்றப்பட்டுள்ளது. எனவே எவரும் இவ்வாறான நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டாம் என்று அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ஐ-10)

### இடைக்கால நிர்வாக சபையை நிறுவியபின்

# இணைப்பு பற்றிய வாக்கெடுப்பை 10 ஆண்டுகளின் பிறகும் நடத்தலாம்

### அரசு - எதிர்க்கட்சி பிரதிநிதிகள் இணக்கம்

உத்தேச அரசமைப்புச் சீர்திருத்தத்தின் கீழ் வடக்கு - கிழக்கு நிர்வாகத்துக்கென இடைக்கால நிர்வாக சபை ஒன்றை உருவாக்கி, 10 வருடங்கள் கழிந்த பின்னர் வடக்கு - கிழக்கு இணைப்பு பற்றிய சர்வஜன வாக்கெடுப்பை நடத்தலாம்.

- இவ்வாறு அரசுத் தரப்பினதும் ஐ.தே.கட்சியினதும் சிரேஷ்ட பிரதிநிதிகள் குழு கூடித் தீர்மானித்திருக்கிறது.

இன்று நடைபெறவிருந்த அரசு - ஐ.தே.கட்சி உயர் மட்டப் பிரதிநிதிகள் சந்திப்புக்கு முன்னோடியாக - ஏற்கனவே முன்னைய சந்திப்புக்களில் காணப்பட்ட இணக்கத்தின் பிரகாரம் இரு தரப்புகளினதும் எட்டு உறுப்பினர்களைக் கொண்ட உப குழுக் கூட்டம் நேற்று முன்தினம் நடைபெற்றது.

இரு தரப்பினாலும் காணப்பட்ட- உத்தேச அரசமைப்புச் சீர்திருத்தம் தொடர்பான - யோசனைகளில் தமிழ்க் கட்சிகளால் நிராகரிக்கப்பட்ட அம்சங்கள் குறித்து இந்த எட்டுப் பேர் கொண்ட குழு நிலைக் கூட்டத்தில் ஆராயப்பட்டது.

இடைக்கால நிர்வாக சபை அமைக்கப்பட்டு ஐந்து ஆண்டுகளின் பின்னர் வடக்கு - கிழக்கு இணைப்புத் தொடர்பான சர்வ ஜன வாக்கெடுப்பை நடத்த வேண்டும் என்று இரு தரப்பும் கண்ட இணக்கத்தை தமிழ்க் கட்சிகள் அடியோடு நிராகரித்திருப்பது தெரிந்ததே.

இந்த ஏற்பாட்டை இடைக் கால நிர்வாக சபை அமைக்கப்பட்டு 10 ஆண்டுகளின் பின்னர் நடைமுறைப் படுத்தலாம் என்ற வகையில் தளர்த்துவதற்கு அரசு - ஐ.தே.கட்சி குழு நிலைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

இக் கூட்டத்தில் அரசுத் தரப்பில் அமைச்சர்கள் ஜி.எல். பீரிஸ், இந்திக குணவர்த்தன, பட்டி வீரக்கோன் மற்றும் ஜனாதிபதியின் ஆலோசகர் ஜயம்பதி வீரக்கோன் ஆகியோரும் - ஐ. தே.கட்சி சார்பில் தவிசாளர் கரு ஜெயசூரிய, டிரோன் பெர்னாண்டோ, கே.என்.சொக்ஸி, மஹிந்த சமரசிங்க ஆகியோரும் - பங்குபற்றினர். (உ)

# கூட்டணி உயர் குழு ஜேர்மன் புறப்பட்டது!

கொழும்பு,ஜூலை27

ஜேர்மனியில் அரசியல் புகலிடம் கோரியுள்ள ஈழத்தமிழர்களை அங்கிருந்து திருப்பி அனுப்பும் ஜேர்மன் அரசின் தீர்மானத்தை நிறுத்தச் செய்யும் முயற்சியாக அந்நாட்டு அரசுடன் நேரில் பேச்சு நடத்துவதற்கு- தமிழர் விடுதலைக் கூட்டணியின் உயர் மட்டக் குழு ஒன்று நேற்று ஜேர்மன் புறப்பட்டுச் சென்றது.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் சிரேஷ்ட உபதலைவர் வீ. ஆனந்தசங்கரி,மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான பொ.செல்வராஜா, துரைராஜசிங்கம் மற்றும் யாழ். மாநகரசபை உறுப்பினர் எஸ்.கணேந்திரன் ஆகியோர் இத்தூதுக்குழுவில் அடங்குகின்றனர்.

இக்குழுவினர் நாளை வெள்ளிக்கிழமை ஜேர்மன் வெளியுறவு அமைச்சின் செயலாளரைச் சந்தித்துப் பேசுவர்.

ஜேர்மனியில் அரசியல் புகலிடம் கோரியுள்ளவர்களை இலங்கைக்குத் திருப்பி அனுப்பினால் அவர்களுக்கு நேரக் கூடிய அவலத்தை கூட்டணித் தூதுக் குழுவினர் எடுத்துரைப்பர் எனத் தெரிவிக்கப்பட்டது. (உ)

## மாணவர்களின் கேள்விகளுக்குப் பதில்

ஜி.சீ.ஈ.உயர்தரப்பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களின் நன்மை கருதி அவர்களின் சந்தேகங்களுக்கு தொலைபேசி மூலமாக பதில் அளிக்கும் முகமாக தமிழ் தேசிய சேவைகளின் அலைவரிசைகள் ஊடாக கல்விச் சேவையின் நேரடி ஒலிபரப்பு ஒன்று இன்று பிற்பகல் 3 மணி முதல் 4 மணிவரை இடம்பெறவுள்ளது.

மாணவர்களின் பரீட்சை சம்பந்தமான சந்தேகங்களுக்கு பரீட்சை உதவி ஆணையாளர்கள் பதில் அளிக்க உள்ளனர்.

மாணவர்கள் 01-697498 என்ற தொலைபேசி இலக்கங்கள் ஊடாக தமது சந்தேகங்களை கேட்டறியலாம் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-9)

# தென்மராட்சி மாணவர்களுக்கு 3 இடங்களில் பரீட்சை நிலையம்

ஜி.சீ.ஈ. உயர்தரம் மற்றும் ஐந்தாம் ஆண்டுப் புலமைப் பரிசில் பரீட்சை ஆகியவற்றுக்குத் தோற்றும் தென்மராட்சிப் பகுதி மாணவர்களுக்கு வடமராட்சி, வலிகாமம் மற்றும் யாழ்.நகர் ஆகிய மூன்று இடங்களிலும் பரீட்சை நிலையங்களை அமைப்பதற்கு பரீட்சை ஆணையாளர் அனுமதி வழங்கியுள்ளார்.

ஈ.பி.டி.பி. நாடாளுமன்ற உறுப்பினர் சிவதாஸன் பரீட்சை ஆணையாளரைச் சந்தித்து நடத்திய பேச்சுக்களைத் தொடர்ந்து மூன்று இடங்களிலும் பரீட்சை நிலையங்கள் அமைப்பதற்கான அனுமதி வழங்கப்பட்டதாக ஈ.பி.டி.பி. வட்டாரங்கள் தெரிவித்தன.

இடம்பெயர்ந்த தென்மராட்சி மாணவர்களுக்கான பரீட்சை நிலையங்களை வடமராட்சியில் மட்டும் அமைப்பது என முன்னர் முடிவு செய்யப்பட்டிருந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-9)

### ஆடி அமாவாசை.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆடிஅமாவாசை தினத்தினை முன்னிட்டு அன்றையதினம் காலை 6 மணி தொடக்கம் யாழ். பஸ் நிலையத்திலிருந்து தெல்லிப்பழை வரை வடபிராந்திய போக்குவரத்து சபையினால் விசேட பஸ் சேவைகளும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன. கீரிமலைக்கு செல்லும் யாத்திரிகர்களின் வசதி கருதி அடையாள அட்டைகளை கொடுப்பதற்கும் - பெறுவதற்குமென ஆறு விசேட கருமபீடங்கள் தெல்லிப்பழை காவலரண் பகுதியில் இயங்கவுள்ளன. தீர்த்த உற்சவத்தில் கலந்து கொள்வதற்காக கீரிமலைக்கு வரும் யாத்திரிகர்கள் சைவ ஆசார சீலத்தை கடைப்பிடிப்பதுடன் ஆலயத்தின் புனிதத்தையும் பேணவேண்டும் என்று ஆலய நிர்வாகிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

### தற்போதைய....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தீர்வு யோசனைகளை நடைமுறைப் படுத்தும் முயற்சி தமிழ் மக்களின் அபிலாஷைகளைப் பூர்த்தி செய்யும் ஒரு நிரந்தரத் தீர்வு காலப்போக்கில் ஏற்படுவதற்கு தடைக்கல்லாகிவிடும் என்றும் -

தமிழ்க் கட்சிகள் இந்தியத் தலைவர்களிடம் எடுத்துரைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இலங்கை இனப்பிரச்சினைக்கு நிரந்தர - சமாதான - தீர்வு காணப்பட வேண்டும் என்ற இந்தியத்தரப்பின் அழுத்தத்தை, தமிழ் மக்கள் மீது ஓர் அரைகுறைத் தீர்வை திணிப்பதற்கு ஒரு வாய்ப்பாக இலங்கை அரசு பயன்படுத்துவதற்கு அனுமதிக்கக்கூடாது என்றும் இந்தியாவிடம் எடுத்துரைக்கப்படவிருப்பதாகக் கூறப்படுகிறது. (உ-6)

### பிஜியில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சட்டவிரோதமாக ஆயுதங்கள் வைத்திருந்த குற்றத்துக்காக ஸ்பைட்டும் அவரது மெய்க்காவலர்கள் மற்றும் பத்திரிகைத் தொடர்பாளர், அவரது சட்ட ஆலோசகர்கள் ஆகியோரும் கைது செய்யப்பட்டிருப்பதாக இராணுவத் தளபதி லெப்டினன்ட் கேணல் தராகினிகினி அறிவித்துள்ளார்.

ஸ்பைட்டை கைது செய்ய முயன்ற சம்பவத்தின்போது மோதல் இடம்பெற்றதாக சுவாவிலிருந்து வெளியான செய்திகள் தெரிவித்தன.

தற்சமயம் ஸ்பைட் சுவாவில் படைமுகாம் ஒன்றில் தடுத்து வைக்கப்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

பிஜியில் ஜனநாயக வழி முறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட இந்திய வம்சாவழிப் பிரதமரான மகேந்திர சௌத்திரியின் அரசை கடந்த சுமார் 65தினங்களுக்குமுன் திடீரெனக் கவிழ்ந்த புரட்சிக்கு ஜோர்ஜ் ஸ்பைட்டே தலைமை வகித்தார்.

அதனைத் தொடர்ந்து பிஜி பெரும் அசியல் நெருக்கடியைச் சந்தித்தது.

ஸ்பைட்டின் கிளர்ச்சியாளர்களுக்கும் பிஜி இராணுவத்துக்குமிடையே அண்மையில் செய்யப்பட்ட உடன்படிக்கையின்படி கிளர்ச்சியாளர்களுக்குப் பொது மன்னிப்பு வழங்கப்பட்டது. ஆனால் அவர்கள் ஆயுதங்களை முற்றாகக் கையளிக்காமல் இருந்து வந்தனர். அதனைத் தொடர்ந்தே ஸ்பைட் திடீரெனக் கைது செய்யப்பட்டிருக்கிறார்.(ஐ-4)

## செயலகத்தில் கூட்டம்

யாழ்ப்பாணம்,ஜூலை27

யாழ்.மாவட்ட உணவு நிவாரணம் மற்றும் எரிபொருள் விநியோகம் தொடர்பான கூட்டம் நாளை வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு யாழ். செயலகத்தில் நடைபெறவுள்ளது. (ஐ-5)

### புதுக்குடியிருப்பில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கள் கலந்துகொண்டனர்.

பேரணியில் கலந்து கொண்டோர் அரசுக்கு எதிரான சுலோக அட்டைகளையும் சுமந்து சென்றனர்.

★ சர்வதேசமே! இலங்கை அரசுக்கு 'மஸ்ரி பரல்!' வன்னி மக்களுக்கு மருந்துத் தடை!

★ சர்வதேச சுகாதார ஸ்தாபனங்களே எங்கள் துயரம் புரிகின்றதா?

★ ஸ்ரீலங்கா அரசே மருந்தை அனுப்பு! மருந்து என்ன மந்திரவித்தையா?

★ பயிர் செய்யப் பசளை வேண்டும்! - போன்ற கோஷங்கள் அடங்கிய பதாகைகளுடன் மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

பேரணியின் இறுதியில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கு முகவரியிடப்பட்ட மகஜர் ஒன்று புதுக்குடியிருப்பு உதவி அரச அதிபரிடம் கையளிக்கப்பட்டது. (ஐ-9)

# தேர்தல் பாதுகாப்புக்கு 40 ஆயிரம் பொலீஸார்!

கொழும்பு,ஜூலை27

பொதுத் தேர்தல் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக 40 ஆயிரம் பொலீஸார் தேவைப்படுவதாகவும், நாடெங்கிலும் இருந்து அவர்களை ஒன்றுதிரட்டும் பணிகள் ஆரம்பிக்கப் பட்டுள்ளதாகவும் - தேர்தலுக்கான பொலீஸ் திணைக்களம் தெரிவித்தது.

தொகுதி ரீதியாகத் தேர்தல் நடைபெறுமானால் பொலீஸாரின் தேவை மேலும் அதிகமாக இருக்கும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

தேர்தல் மோசடிகளைத் தடுப்பதற்காக மாவட்ட ரீதியாக விசேட பொலீஸ் பிரிவுகள் அமைக்கப்படும் என்றும் -

சகல பொலீஸ் பிரிவுகளையும் உள்ளடக்கியதாக மாவட்ட ரீதியான தேர்தல் கண்காணிப்புப் பொலீஸ் பிரிவு செயற்படும் என்றும் -

தெரிவிக்கப்பட்டது. (ஐ-9-4)

### ஸ்ரீ.ல.சுதந்திர...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சிறிமாவோ பண்டாரநாயக்கா வயோதிபம் காரணமாக அமைச்சரவைக் கூட்டங்களுக்கு சமுகமளிக்காமல் இருப்பதால் - கட்சியின் மூத்த உறுப்பினரும் சிரேஷ்ட அமைச்சருமான ரட்ணசிறி விக்கிரமநாயக்கவே அமைச்சரவைக் கூட்டங்களுக்குத் தலைமைவகித்து வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

ஆனால் அவரைவிட அமைச்சர் மங்கள சமரவீரவே ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கு நெருக்கமானவர் என்பதால் இப்பதவி அமைச்சர் மங்களவுக்கே கிடைக்க வாய்பு அதிகம் என வேறு சில வட்டாரங்கள் கூறுகின்றன.

முன்னரும் ஒரு தடவை -இப் பதவிக்கு அமைச்சர் மங்கள சமரவீரவை நியமிக்க ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க முயற்சித்ததாகவும்-

ஆனால் அமைச்சர் தர்மசிறி சேனநாயக்கவை நீக்கிவிட்டு அப் பதவிக்கு மங்கள சமரவீரவை நியமிக்கும் முயற்சியை கட்சியின் சிரேஷ்ட அமைச்சர்கள் எதிர்த்ததை அடுத்து அம்முயற்சி கைவிடப்பட்டதாகவும்-

கொழும்புப் பத்திரிகை ஒன்று தெரிவித்தது.

இதேவேளை -

அமைச்சர் ரட்ணசிறி விக்கிரமநாயக்க தலைமையில் நேற்று அமைச்சரவைகூடி காலஞ்சென்ற அமைச்சர் தர்மசிறி சேனநாயக்காவின் இறுதிச் சடங்கு ஏற்பாடுகள் குறித்து ஆராய்ந்தது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் செயலாளர் பதவி மற்றும் வெற்றிடமாகியுள்ள அமைச்சர் பதவி என்பன குறித்தும் இக்கூட்டத்தில் ஆராயப் பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (உ)


**கணக்காய்வுப் பரீட்சை**

**(AUDITING) - 2000**

**வியாபாரக் கணிதமும் புள்ளிவிவரவியலும்**

**விரிவுரை ஆரம்பம்: 29-07-2000**

சனி (9.30 ப.நே)

**பொருளியற் கல்லூரி**

நாவலர்வீதி - யாழ்ப்பாணம்.

(76721)



*அறுபதாவது அகவையில்......*

**இணுவில் சிவகாம சுந்தரி சனசமூக நிலையம்**

இன்று (27.07.2000) வியாழக்கிழமை தன் அறுபதாவது அகவையைக் காணும் மேற்படி நிலையம்

*அம்பிகையின் திருவருளால்*
*தனது அகவை அறுபதை*
*நிறைவு செய்யும் இந்நாளில்*
*நிலையத்தின் பணிகளுக்கு*
*ஆக்கமும் ஊக்கமும் தரும்*
*அன்புள்ளங்களுக்கு நன்றி*

(76738) **நிர்வாகத்தினர்**


இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிகேசன் (பிரைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 27-07-2000இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.